Australia.....1.50$ Canada.......1.00$ France..........8.00F Germany...2.25DM India.....12.00Rs. Malaysia...1.50$ Norway....12.00Kr Srilanka.... 20.00Rs Switzerland......2.50$ United Kingdom...90p

# நாழிகை

MAY 1995


The International Tamil Newsmagazine



## திக்குத் தெரியாத காட்டில்....

யாழ்ப்பாணத்து நேர்முக செய்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்



| | |
|---|---|
| எண்ணம் | 5 |
| இலங்கை: ஈழ யுத்தம்–3? | 18 |
| பிரிட்டன்: அயர்லாந்து அரங்கில் மாறும் காட்சிகள் | 21 |
| இந்தியா: ஓர் அரசியல் திருப்பம் | 25 |
| தமிழ்நாடும் தலைநகரும்: வழக்காகிப்போன வாழ்க்கை | 27 |
| இலங்கை: போரில் குளிப்பினும் சோராத யாழ்ப்பாணம் | 30 |
| கலை: மௌனத்தில் வடிந்த கண்ணீர் | 31 |
| உலகை ஆக்கிரமிக்கும் ஆங்கிலம் | 32 |
| பழைய நினைவுகள் | 35 |
| சிறுகதை: துவாஜன் | 49 |
| புத்தக விமர்சனம் | 51 |
| சொற்சதுரங்கம் | 53 |
| ஜன்னல் | 56 |

■ 12 அட்டைச் செய்தி:
இலங்கை
### திக்குத் தெரியாத காட்டில்...

பத்து ஆண்டுகளுக்கு மேலாக யுத்த நெருக்கடிக்குள் சிக்கியுள்ள யாழ்ப்பாண மக்களின் வாழ்வு, போர் விளைத்த அனர்த்தங்கள், விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் பற்றிய ஒரு நேர்முக செய்தி.


R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

■ 36 சிறப்புக் கட்டுரை
### மூன்று திரைப்படங்கள்

தமிழ்த் திரைப்பட உலகில் தற்போது பெரிதும் பேசப்படும் மோகமுள், பம்பாய், பண்டிற் குயீன் பற்றிய விரிவான நோக்கு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Nazhikai**
The International Tamil Newsmagazine
ISSN 1357-6933
VOL.II, No.3, May 1995

**EDITOR:**
S. Mahalingasivam

**CONTRIBUTING EDITORS:**
S. Swaminathan, Wimal Sockanathan, Pon.Balasundaram, M. Pushparajan, Yamuna Rajendran

**LAYOUT ARTIST:**
K. Krishnarajah

**TECHNICAL ASST:**
S. Perinpanathan

**EDITORIAL OFFICE:**
Newsmedia International Limited
Park Royal House
23 Park Royal Road
London NW10 7JH
UK
Tel: 0181-838 1425
Fax: 0181-961 5962

**COLOMBO BUREAU:**
S. Thillainathan
Tel: 330719 / 821663

**PUBLISHERS:**
Newsmedia International Limited
Park Royal House
23 Park Royal Road
London
NW10 7JH
UK

**PRINTERS:**
Set Line Data Ltd
London SE1

Cover printed at ABILITY PRINTING, Rayners Lane, Harrow, Middlesex

**Subscription for 12 issues**

UK:........................................£14.00
Europe/India/Sri Lanka:..................£15.00
All other countries:........................£20.00
Payable to NEWSMEDIA INTERNATIONAL LIMITED

**Please complete the form and return to**
Newsmedia International Limited
Park Royal House
23 Park Royal Road
London
NW10 7JH
UK

Name:..............................................................

Address:..............................................................


..............................................................

..............................................................

..............................................................

Tel:..............................................................

**Sending herewith cheque/draft/money order for the ammout of ..............**




## செல்வியும், சிவரமணியும்

டிசம்பர் 1994 இதழில் யமுனா ராஜேந்திரன் எழுதியுள்ள கட்டுரையில் காணப்படும் செல்வி, சிவரமணி ஆயியோர் பற்றிய குறிப்புக்கள் மிகையானவை.

செல்வி, கவிதையில் அல்லது நாடகத் துறையில் கருத்துச் சுதந்திரத்துக்காகவோ ஜனநாயகத்துக்காகவோ தீவிர செயற்பாட்டுத் தளத்தைக்கொண்ட ஒருவரல்லர். ஆனால், இத்துறைச் செயற்பாடுகளுக்காகவே அமெரிக்காவின் 'பென்' (PEN) விருது சில வருடங்களின் முன்னர் அவருக்கு வழங்கப்பட்டமையானது ஒரு கேலிக்கூத்தாகும். இது, விடுதலைப் புலிகளை எதிர்ப்பவர்களின் அமைப்பு ரீதியான சர்வதேச செயற்பாட்டினைக் காட் டுகிறதேயல்லாது, யாழ்ப்பாணத்தின் யதார்த்த நிலையினை அல்ல.

சிவரமணியும் செல்வியைப் போலவே, தீவிரச் செயற்பாட்டுத் தளத்தைக் கொண்ட ஒருவரல்லர். அத்தோடு, தனது குடும்பத்தவரால் முன்வைக்கப்பட்ட ஒரு திருமண ஆலோசனையை எதிர்கொள்ள முடியாது தற்கொலை செய்துகொண்ட ஒரு பலவீனமான பெண்ணிலை வாதி. செயற்பாட்டுத் தளத்தில் வேர்களற்ற சித்திரலேகா மௌனகுரு போன்ற பெண்ணிலை வாதிகளால் இங்கும் வரையப்படும் 'ஒளிவட்டம்' சிவரமணிக்குப் பொருத்தமானதல்ல.

ராஜன்,
யாழ்ப்பாணம்.

### ஏன் மறந்தார்?

காலத்துக்கேற்ற அட்டைப் படங்கள், கச்சிதமான பக்க அமைப்பு, கவர்ச்சிகரமான செய்தித் தலைப்புகள் அளவுக்கதிகமற்ற விளம்பரங்கள் என்று இன்னும் பல சிறப்பம்சங்களுடன் வெளிவரும் நாழிகை சர்வதேச ரீதியில் நடுநிலைமையான தரமான தமிழ் சஞ்சிகை இல்லை என்ற குறையை நிவர்த்தி செய்கின்றது. நாழிகை 1995ஆம் ஆண்டுக்குள் உலகில் வாழும் சகல தமிழர்களையும் சென்றடையும் என்பதில் ஐயமில்லை.

தஸ்லிமா நஸ்ரீன் பற்றி விபரமாக தகவல் வெளியிட்டதோடு, அவருடைய ஆக்கம் ஒன்றை மொழிபெயர்த்து தமிழில் வெளியிட்ட பெருமையும் (பூச்சியின் கதை கவிதை) நாழிகைக்குத்தான் உண்டு.

தஸ்லிமாவின் படைப்புகள் பற்றிக் குறிப்பிட்ட கட்டுரையாளர், 'குரான் மாற்றி எழுதப்படவேண்டும்' என்று நியூஸ்ரேற்மன் பத்திரிகைக்குச் சொன்னதாக வெளிவந்த செய்தியை தான் அப்படிச் சொல்லவில்லை என்று மறுதலித்ததுடன், இஸ்லாமிய சட்டங்களைத்தான் மாற்றி அமைக்கவேண்டும் என்று சொன்னதாகவும் சம்பந்தப்பட்ட பத்திரிகைப் பேட்டி பற்றி தஸ்லிமா நஸ்ரீன் தன்னிலை விளக்கம் கொடுத்த விடயங்களை மறந்துவிட்டார்.

எஸ். ஐ. ஜெகதீசன்
பிரான்ஸ்

### வடிவமைப்பு

நாழிகை நல்ல பல செய்திகளும், சிறந்த வடிவமைப்பும் கொண்டுள்ளது.

சி. எஸ். சரவணன்
பெங்களூர், இந்தியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெல்ல இயலாத போர்

இந்திய மாநிலங்களைக் காட்டிலும் கூடுதல் அதிகாரங்களைக்கொண்ட ஆட்சி அமைப் பொன்றை தமிழர் பிரச்னைக்குத் தீர்வாக்கும் அரசியல் திட்டம் தயாராகவிருப்பதாக இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அவரைச் சந்தித்த அவருக்கு ஆதரவளிக்கும் தமிழ் அரசியல் கட்சிக ளின் தலைவர்களிடம் தெரிவித்திருக்கிறார். தமிழர் பிரதேசங்களான வடக்கு - கிழக்கு மாகாணங்களின் எல்லைகள் மீள நிர்ணயிக்கப்பட்டு, தனியொரு மாநிலமாக இப்பிரதேசம் அமையும் என்றும், சட்டம், ஒழுங்கு, காணிப்பங்கீடு போன்றவை தொடர்பான அதிகாரங்களை மாநில அரசு கொண்டிருக்கும் என் றும் தெரிவித்துள்ள ஜனாதிபதி, அவரது அரசியல் திட்டத்தை முழுமையாக வெளிப்படுத்தவில்லை. இட துசாரிக் கட்சிகள், பிரதான எதிர்க் கட்சியான ஐக் கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி போன்றவற்றின் தலைவர்களையும் சந்தித்துப் பேசி வரும் ஜனாதிபதி, இவர்கள் அனைவருடனுமான கலந்தாலோசனைகளை முடித்துக்கொண்ட பின்னர் அவ்வரசியல் திட்டத்தை வெளியிடக்கூடும் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது.

இதேவேளை, விமானங்கள் மீது விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதல் அரசுக்கு இரா ணுவ ரீதியில் ஒரு சவாலை ஏற்படுத்தியுள்ளபோது, வெளிநாட்டு ஆயுத கொள்வனவு மூலம் அரசை இராணுவ ரீதியாக பலப்படுத்திக்கொண்டு, அதன் பின்னர் இத் தீர்வுத் திட்டத்தை அவர் வெளியிடலா மென்றும் சிலர் கருத்துத் தெரிவித்தார்கள். இதனை எழுதிக்கொண்டிருக்கின்றபோது, கப்பலொன்று ஆயுதங்களுடன் கொழும்பு துறைமுகத்தை அடைந் திருக்கின்றது.

ஆனாலும், புலிகளின் தாக்குதலுக்கு பதில் தாக்கு தலேயன்றி, ஓர் இராணுவ தாக்குதலுக்கான எண் ணம் ஜனாதிபதியிடம் இன்னமும் இல்லை என்றே பொதுவாகப் பேசப்படுகின்றது. இது 'வெல்ல முடி யாத ஒரு யுத்தம்' என்பதனை அவர் அறிவார்.

எப்படியானாலும், இலங்கையில் எதிர்பார்க்கப் பட்ட சமாதானச் சூழலில் ஏற்பட்ட குலைவு கவ லையை அளிப்பதே. அந்தக் குலைவுக்கு தனி ஒரு சாராரிடம் மாத்திரம் குற்றத்தைச் சுமத்திவிட முடி யாது. நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் காணப் பட்ட இணக்கங்களை நடைமுறைப்படுத்துவதில் அரசு தரப்பில் தாமதம், அல்லது உடன் செயல்படுத்த இயலாத நிலைமை இருந்தது உண்மை.

ஆக, இருசாராரிடமுமே பலமும் பலவீனங்களும் இருக்கின்றன. அவற்றை நன்கு தெளிந்து, ஒரு சமா தானத் தீர்வை விரைவாகக் கண்டுகொள்வதே சிறந் ததாகும். சந்திரிகாவின் அரசியல் திட்டம் பற்றி அதனை அறிந்துகொள்ளாத வரையில் எதனையும் கூறமுடியாது. கடந்த காலங்களிலும் எல்லா அரசாங் கங்களும் ஏதோ ஒரு திட்டத்தை தம்மிடம் வைத்தே இருந்தன. ஆனால், அவை தமிழ் மக்களின் அபிலா ஷைகளுக்கு ஏற்றனவாக இருக்கவில்லை. சந்திரிகா வின் திட்டமும், சிங்கள பேரினவாத சக்திகளின் உணர்வுகளைத் தூண்டிவிடாத வகையிலேயே பெரும்பாலும் இருக்குமென்று கூறப்படுகிறது.

தமிழர் பிரச்னைக்கு சர்வகட்சி மாநாடு மூலம் தீர்வு காணப்படும் என்று கூறிய முன்னாள் ஜனா திபதி ஜே. ஆர். ஜயவர்த்தன, சர்வ கட்சிகளுக்கும் இட மற்று, அவரது ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன் றத்தைப் பெருமளவில் ஆக்கிரமிக்க, அவர் சர்வ வல் லமை மிக்க ஜனாதிபதியானார். சர்வ கட்சி மாநாடு இல்லாதுபோனாலும், அவருக்குக் கிடைத்த 'சர்வ வல்லமை'யால் அவர் இந்தப் பிரச்னைக்கு தீர்வு காணவும் விழையவில்லை. அவருக்குப் பின்னர் ஆட் சியில் இருந்தவர்கள் எளிதாக இப்பிரச்னைக்கு தீர்வு காணக் கூடியவர்களாக இருக்கவில்லை. ஆனால், ஜயவர்த்தனவுக்குப் பின்னர் சந்திரிகாவே அப்படி யொரு நிலையில் ஜனாதிபதியாகியிருக்கின்றார்.

ஜயவர்த்தனவுக்கு இப் பிரச்னையைத் தீர்ப்பதில் தடைகள் எதுவும் இருக்கவில்லை. ஆனால், அவர் அதனை விரும்பவில்லை. சந்திரிகாவைப் பொறுத்த வரையில், அவர் ஒரு தீர்வை ஏற்படுத்தவே விரும்பு கிறார். அதில் சந்தேகம் கொள்வதற்கில்லை. ஆனால், அதில் அவருக்கு தடைகள் சில இருப்பது புரிந்து கொள்ளக்கூடியதாகவே இருக்கின்றது. அத்துடன், விடுதலைப் புலிகளின் நடவடிக்கையில் அவர் மிக குழப்பமமைடைந்திருக்கிறார் என்பதும் 'இந்தியா டுடே' சஞ்சிகைக்கான அவரின் செவ்வியில் தெரி கின்றது. இதேவேளை, விடுதலைப் புலிகளின் தலை வர் வே. பிரபாகரனின் பிபிஸி செவ்வி, மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையை மீறிய அவர்களின் நட வடிக்கையை மிகவும் நியாயப்படுத்துவதாகவே இருக்கின்றது.

ஆக, இன்றைய நிலைமைகளில் ஒரு நடுநிலை யாளரின் ஈடுபாடே இதில் பெரிதும் உதவலாம் என்று எண்ணத்தோன்றுகிறது. ஆனால், அதற்கான சாத்தியக்கூறுகள் பெரிதாக எதுவுமிருப்பதாகவும் தெரியவில்லை. எனினும், போரின் பின்னரும் சமா தானமே ஒரு தீர்வை ஏற்படுத்தவல்லதால், உயிரழிவு களைத் தடுத்து, அந்த சமாதானத்திலேயே இரு சாரா ரும் ஏதோவிதத்தில் ஈடுபட்டு, தமிழ் மக்களுக்கு சுய கௌரவமும், சமத்துவமும் மிக்க ஒரு தீர்வை அடைய மேலும் முயலவேண்டும். ❐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THAMPA
SOLICITORS

ZAMBIA HOUSE
8A SOUTHHILL AVENUE
SOUTH HARROW
MIDDX HA2 0NQ

TEL: 0181-426 8562
HOME: 0181-422 8248
FAX: 0181-426 8307

☆ CONVEYANCING
☆ LITIGATION
☆ IMMIGRATION MATTERS
☆ WILLS & PROBATE
☆ LANDLORD & TENANT
☆ MATRIMONIAL MATTERS
☆ PERSONAL INJURY
☆ LIQUOR LICENSING

LEGAL AID WORK UNDERTAKEN


# சொன்னார்கள்

■ "நான் என்ன 'சுப்பர் மன்' என்று எண்ணிவிட்டீர்களா? இதனைச் செய்யத்தானே பிரிட்டிஷ் ராணுவம் 25 வருடங்களாக முயன்றும் முடியாமல் போயிற்று."
-'சின் பெயின்' தலைவர், ஜெரி அடம்ஸ்(உங்கள் ஆயுதங்களை எப்போது அகற்றப்போகிறீர்கள் என்று அமெரிக்காவில் பத்திரிகையாளர்கள் கேட்டபோது)

■ "ஈடுசெய்ய முடியாத இணையற்ற தலைவர் என்று யாருமே இல்லை. எனது கணவர் சுட்டுக் கொல்லப்பட்டபோது நாம் எல்லோரும் அப்படித்தான் நினைத்தோம். காலச் சக்கரம் சுழன்று, நாம் எப்படியோ அவரில்லாமல் சமாளித்துவிட்டோம். இந்த மலர்க் கண்காட்சியைத் திறந்துவைக்க என்னை நீங்கள் அழைத்தமை குறித்து மகிழ்கிறேன். மலர்கள் என்றால் எனக்கு தனிப் பிரியம். அடுத்த வருடம் நான் பிரதமராக இருக்கிறேனோ இல்லையோ என்னையும் இக் கண்காட்சிக்கு அழைப்பீர்கள் என நம்புகிறேன்."
-இலங்கைப் பிரதமர், சிறிமாவோ பண்டாரநாயக்க.

■ "கல்குலேற்றர்களை எப்படி இயக்குவது என்பது எனக்கு எப்போதுமே ஒரு புதிரான விடயம்."
- பிரிட்டிஷ் நிதி அமைச்சர், கெனத் கிளார்க் (வானொலி செவ்வி ஒன்றில்)

■ "சேமநலத் துறை அமைச்சர் வேர்ஜீனியா அம்மையார் தவறான விஷயத்தினை, தவறான விதத்தில், தவறான நேரத்தில், தவறான இடத்தில் செய்கிறார்."
- பிரிட்டிஷ் ஆளும் கட்சி உறுப்பினர், சேர் ஜோன் கோள்ட் (அமைச்சரைக் கண்டித்து சபையில்)




ரைம்ஸ், லண்டன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புதிய நிறுவனம்; விஜயம்செய்து பாருங்கள்

# MOHAN FOOD MARKET

LARICH
தயாரிப்பு பொருள்களும்
பெற்றுக்கொள்ளலாம்



இலங்கையிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட
அரிசி, அரிசி மா, மிளகாய்த்தூள், மரக்கறி,
கடலுணவு வகைகள் போன்ற
பல்வேறு பொருள்கள்.
பதனிடப்பட்ட பல்வேறு உணவு வகைகள்
பத்திரிகைகள், சஞ்சிகைகள்,
சி டி, ஓடியோ கசெட்டுகள்

இவற்றோடு,
உங்கள் அனைத்து
நாளாந்த தேவைகளுக்கும்

**MOHAN FOOD MARKET**


**54 BILTON ROAD**
**PERIVALE**
**MIDDLESEX**
**TEL: 0181-991 0453**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திக்குத் தெரியாத கா

## யாழ்ப்பாணத்தில் போரின் அனர்

மாலி



படங்கள்: தி. தவபாலன்

ஒரு புறம் புதிது; மறுபுறம் உடைவு.

இதுதான் இன்றைய யாழ்ப்பாணம்.

மனதில் அது ஏற்படுத்துகின்ற தாக்கமும் அப்படித்தான்.

சில சமயங்களில் புளகாங்கிதம்; சில சமயங்களில் விஞ்சும் வேதனை.

நகருக்கு அணிசேர்த்து, நகரின் தனித்துவ அடையாளச் சின்னங்களாகத் திகழ்ந்த பலவற்றை அங்கு அடையாளம் காண இயலவில்லை.

நகரின் மகுடமாக அழகொளிர்ந்த முற்றவெளியையடுத்த மாநகர சபை சூழ்ந்த பிரதேசம், இடிபாடுகளுடன், புதர்கள் அடர்ந்து, யாழ்ப்பாணத்தின் அதி பாழடைந்த காட்டுப் பிரதேசமாகக் காட்சியளிக்கிறது. திக்குத் தெரியாத அக் காட்டில் நிஜமாகவே சிறிதுநேரம் தவித்துப் போனேன்.

மாநகர சபைக் கட்டடமோ, சுப்பிரமணியம் பூங்காவோ எங்கே என்பது தெரியவில்லை. பாதைகளைக் கண்டுகொள்ள முடியவில்லை.

அந்தப் பற்றைப் புதர்கள் நடுவே, காலத்தின் வடுக்களோடு ஞாலத்துக்குச் சாட்சிசொல்ல வானுயர்ந்து நிற்கும் இரண்டு நினைவுச் சின்னங்கள்.

ஈழத் தமிழர்களின் அரசியல் நேர்மையைச் சாற்றி தந்தை செல்வநாயகத்தின் நினைவுத் தூபி ஒன்று.

'... நம் முன்னோர்கள் போல நமக்கென்று ஒரு தனி நாட்டை நாம் உருவாக்க வேண்டும். அது சுலபமானதல்ல என்பது எமக்குத் தெரியும்; ஆனால், அதைத்தவிர எமக்கு வேறு வழி இல்லை. ஒன்றில், சிங்கள அதிகாரத்திலிருந்து நாம் விடுபட வேண்டும்; அல்லது செத்து மடியவேண்டும்...' என்று, சமரசத் தீர்வுக்கான முயற்சிகளின் தோல்விகள் அளித்த விரக்தியில், தன்னுடைய நீண்ட அரசியல் வாழ்வின் இறுதி உரையாயமைந்த பாராளுமன்ற உரையில் திரு செல்வநாயகம் கூறிய அந்த வார்த்தைகள்; அந்த உரையின் அந்தக் காட்சி; அதன் பின்னணி அப்போது நினைவில் எழுந்தன.

1976 நவம்பரில் வரவு செலவுத்திட்ட விவாதத்தின்போது திரு செல்வநாயகம் இதனைக் கூறினார்.

அவர் மேலும்மிகத் தளர்வடைந்திருந்த காலம் அது. அந்த வரவு செலவுத் திட்ட விவாதத்தில் தானும் உரையாற்றப்போவதாகவும் அதில் தனக்கு உதவும்படியும் தன்னுடைய கட்சிப் பாரா

நகருக்கு அணிசேர்த்து, நகரின் தனித்துவ அடையாளச் சின்னங்களாகத் திகழ்ந்த பலவற்றை அங்கு அடையாளம் காண இயலவில்லை.

"நமக்கென்று ஒரு தனி நாட்டை நாம் உருவாக்க வேண்டும். அது சுலபமானதல்ல என்பது எமக்குத் தெரியும்; ஆனால், அதைத்தவிர எமக்கு வேறு வழி இல்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுமன்ற சகாக்களை அவர் கேட்டிருந்தார். ஆனால், 'இவர் எங்கே பேசப்போகிறார்' என்ற நினைப்பில் அவர்கள் இவரின் கோரிக்கையைப் பெரிதுபடுத்தவில்லை. அவ்வேளையில், தாமாகவேதான் இந்த உரையை அவர் ஆற்றினார். நினைவுத் தூபியாக நிற்கும் இந்தக் கற்றூணைப் போலத்தான், மிகுந்த வைராக்கியத்துடனும், உறுதியுடனுமான மிடுக்கான அவரது பேச்சு, அன்று சபையில் அனைவரையுமே வியப்பிலாழ்த்தியது. 'நாட்டைத் துண்டுபோடும் பிரகடனம்' என்று அடுத்துப் பேசிய அரசாங்க உறுப்பினர் வெகுண்டார்.



அந்தப் பேச்சு முடிந்து சபைக்கு வெளியே கண்டபோது, 'நான் பேசும்போது நீர் இருந்தீரா; நான் சொன்னவை சரிதானே' -என்று கேட்ட அவரின் குழந்தை உள்ளம்.....

திரு. மு. திருச்செல்வத்தின் அனுதாபத் தீர்மானம்மீது பிறிதொரு தடவை அவர் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதும், இதுவே பாராளுமன்றத்தில் அவரின் கடைசி அரசியல் பேச்சாயமைந்தது.

நிஜமாகும் அவரின் அன்றைய

டத்தில் செல்லும் பாதைகளை ஒருவாறு இனங்கண்டு ஊகித்தபோது, நான் தவித்துநின்ற இடம் மாநகர சபைக்கு நேர் முன்னதாகவே என்பதை உணர்ந்தேன்.

நிலத்துள் புதையுண்ட ஓர் இரும்புக் கம்பி. நிறைந்த பற்றைகள், செடிகள். இவைதான் எனது இடது புறமாக மாநகரசபை வளவுள் நான் கண்டவை. மேற்கே, கோட்டைப் பக்கம் நோக்கிச் சென்றேன். அது இருந்த இடம்கூட தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டும். கோட்டை மதில்கள் பெரும்பாலும் உடைக்கப்பட்டே விட்டன. நம்முடைய காலத்திலேயே எத்தனை வகை வகையான வைபவங்களைக் கண்ட முற்றவெளி, பற்றை வெளியாய்க் கிடக்கிறது. அங்கே, ஈழத் தமிழர்களின் அரசியல் பாதையில் ஒரு திருப்பத்துக்குக் காரணமாயமைந்த நான்காம் உலகத்

**காலத்தின் வடுக்களோடு ஞாலத்துக்குச் சாட்சிசொல்ல வானுயர்ந்து நிற்கும் இரண்டு நினைவுச் சின்னங்கள்.**

**ஈழத் தமிழர்களின் அரசியல் நேர்மையைச் சாற்றி தந்தை செல்வநாயகத்தின் நினைவுத் தூபி ஒன்று.**

**தமிழ் மக்களின் அளப்பரும் கல்வி ஈடுபாட்டின் சின்னமான யாழ். நூலகம் மற்றையது. வெந்தழலில் வெந்து, ஷெல் வீச்சிலும் நிலைகொண்டு நிற்கும் அந்தக் கட்டடமும் ஒரு நினைவுச் சின்னம்தான்.**

# ட்டில்...

## தத்தில் தொடரும் புது வாழ்வு

வார்த்தைகள் அந்தத் தூபியில் எதிரொலித்தன.

அந்த எதிரொலிக்கு ஒரு சாட்சியாவதுபோல், அருகே தமிழ் மக்களின் அளப்பரும் கல்வி ஈடுபாட்டின் சின்னமான யாழ். நூலகம். வெந்தழலில் வெந்து, ஷெல் வீச்சிலும் நிலைகொண்டு நிற்கும் அந்தக் கட்டடமும் ஒரு நினைவுச் சின்னம்தான்.

ஆட்சியாளர்களின் சூழ்ச்சியில், தெற்கு ஆசியாவிலேயே மிகப் பெரும் நூலகம் என்று கருதப்பட்ட அந் நூலகம் இரவோடிரவாக தீக்கிரையாக்கப்பட்டது. அந்தச் சூழ்ச்சி பாராளுமன்றத்தில் அம்பலமாகவிருந்தது தெரிந்ததும் இன்னொரு சூழ்ச்சியால் அது மழுங்கடிக்கப்பட்டது. அதுதான் 83 ஜுலை கலவரத்துக்கு முன்னோடியாகவும் அமைந்த சூழ்ச்சி.

ஆக, இப்படி நினைவுகள் அலைமோத, இவ்விரு நினைவுச் சின்னங்களும் இருக்கும் இடங்களை வைத்துக்கொண்டு, அவ்வி

தமிழாராய்ச்சி மாநாட்டு இறுதி நாள் நிகழ்ச்சிகளில் உயிரிழந்த ஒன்பதுபேரின் அந்த நினைவுக் கற்களும் வெண்மையாக மிளிர்கின்றன. மறுபுறம், பாழடைந்த சின்னங்களாக றீகல் படமாளிகை, வீரசிங்கம் மண்டபம், தபால் நிலையம். இந்தப் பகுதியிலே தனித்து விளங்குவது முனியப்பர் கோவில் ஒன்றேதான். எவ்வித பாதிப்புக்குமுள்ளாகாமல் எழிலாகவே காட்சி தருகிறது.

ஆக இவை; நிர்மூலமாகி, ஜன சஞ்சாரமேயற்றுப்போய் விட்ட நகரின் அதி முக்கியத்துவம் வாய்ந்த இடத்தின் கோலங்கள்.

இதுதவிர, நகர் முழுவதுமே, நகர் மாத்திரமென்ன எங்குமே இடிபாடுகளுடனான போரின் அனர்த்தங்கள். முழுமையான ஒன்றை அங்கு காண்பதே அரிது. எனினும், இந்த அனர்த்தங்களிடையேயும் அங்கு நடைபெறும் வாழ்பு புதிது.

**'பெண்ணினமே, மண்ணை மீட்கும் மகத்தான பணியுடன் பெண்ணை மீட்கும் பெரும் பணியும் நமதே'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத் தமிழர்களின் அரசியல் பாதையில் ஒரு திருப்பத்துக்குக் காரணமாயமைந்த நான்காம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு இறுதி நாள் நிகழ்ச்சிகளில் உயிரிழந்த ஒன்பது பேரின் அந்த நினைவுக் கற்களும் வெண்மையாக மிளிர் கின்றன.


மறுபுறம், பாழடைந்த சின்னங்களாக ரீகல் படமாளிகை, வீரசிங்கம் மண்டபம், தபால் நிலையம். இந்தப் பகுதியிலே தனித்து விளங்குவது முனியப்பர் கோவில் ஒன்றேதான்.



'மப்பின்றி கால மழைகாணா மண்ணிலே
சப்பாத்தி முள்ளும் சரியாய் முளையாது;
ஏர் ஏறாது; காளை இழுக்காது; எனினுமந்தப்
பாறை பிளந்து
பயன் விளைப்போன் என்னூரான்' - மஹாகவியினுடைய இந்தக் கவிதை வரிகள் மிகவும் பிடித்தமானவை. இதன் பிரதிபலிப்பான வாழ்வே அங்கு எங்கும் நிகழ்கிறது.

போர் விளைத்த அனர்த்தங்களோடு அங்கு எங்குமே நம் கண்ணில் தெரிவன விடுதலைப் புலிகளின் விடுதலைச் சின்னங்கள். வீதிகளின் சந்திகளெல்லாம் மாவீரர்களுக்கான நினைவுச் சின்னங்கள்; அவர்களின் உருவப் படங்கள். நல்லூர் முத்திரைச் சந்தியில் பேரெழிலாய்த் திகழும் கிட்டு நினைவுப் பூங்கா. முன்னரெல்லாம் சினிமாப் படங்களின் சுவரொட்டிகள் நிறைத்த மதிற் சுவர்கள், விடுதலை வீரர்களின் நினைவை மனதில் நிறைக்கின்றன. விடுதலைக்கும், சமுதாய விளிப்புக்குமான வாசகங்களைத் தாங்கிய பலகைகள் வீதிகளில் நாட்டப்பட்டிருக்கின்றன.

'பெண்ணினமே, மண்ணை மீட்கும் மகத்தான பணியுடன் பெண்ணை மீட்கும் பெரும் பணியும் நமதே' - என்பது போன்ற சமூக சீர்திருத்த வாக்கியங்கள் நகர்ப் புறங்களிலும், 'மரம் மண்ணின் உரம்' போன்ற, சூழல் பாதுகாப்பு தொடர்பான வாசகங்கள் கிராமப் புறங்களிலும் காணப்படுகின்றன. நகரிலும் சரி, கிராமங்களிலும் சரி அனைத்து வீதிகளுக்கும் பெயர்களிடப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மாவீரரின் பெயர்கள். அவர்களின் இயற்பெயரால் வீதிகளுக்குப் பெயர் சூட்டப்பட்டு, இயக்கப் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்படி பெயர் சூட்டப்பட்டுள்ள யாழ்ப்பாணத்து முக்கிய வீதிகள்: ஆஸ்பத்திரி வீதி - கேணல் கிட்டு சாலை; பெரிய கடை - மேயர் சோதியா தெரு; மின்சார நிலைய வீதி - லெப். கேணல் ராசன் தெரு; கஸ்தூரியர் வீதி - சந்தோசம் தெரு; ஸ்ரான்லி வீதி - அர்ச்சுனா வீதி.



யாழ். தபால் நிலையமும் வீரசிங்கம் மண்டபமும்

நவீன சந்தைப் பகுதியில் (அது இப்போது 'சிறப்பு அங்காடி' என்று அழைக்கப்படுகிறது) எந்நேரமும் காற்றில் விடுதலைக் கீதங்கள் ஒலிக்கின்றன. இராணுவ வண்டிகளையொத்த விடுதலைப் புலி வீரர்களின் மோட்டார் வாகனங்கள் வீதிகளில் செல்லும். சிலர், பொதுவாக பெண் புலிகள், சைக்கிள்களிலும் செல்வார்கள். இவர்கள் தவிர, தமிழீழ காவல் துறையைச் சார்ந்தவர்களையும் (பொலிஸ்) எங்காவது காணலாம். இவர்கள் எவரையும் கண்டு பொதுமக்கள் பதட்டமேதும் கொள்வதில்லை. ஆனாலும், பொது மக்கள் எவருடனாவது போராளிகள் ஏதாவது பேசிக்கொண்டிருந்தால் 'இயக்கம் நிற்கிறது' என்று அது எல்லோர் கவனத்தையும் ஈர்க்கும்.

பெண் போராளிகள் பொதுவாக பச்சை அல்லது கறுப்பு நிற நீளக் கால்சட்டை, ஷேட்டுடன் இடையில் கறுப்புநிற 'பெல்ற்' அணிந்திருப்பார்கள். தலைமுடி வெட்டப்பட்டிருக்கும் அல்லது இரண்டு பின்னல்களாக வளைத்துக் கட்டியிருப்பார்கள். சிலர் ஆயுதங்களுடனும் பெரும்பாலோர் ஆயுதங்களின்றி சைக்கிள்களிலும், நடந்தும் செல்வார்கள். இவர்களை இலகுவாகவே அடையாளம் கண்டுகொள்ளலாம். பொதுவாக, சாதாரண உடையே அணிந்திருக்கும் ஆண்போராளிகள் அல்லது இயக்கம் சார்ந்தவர்களை அவர்களது மோட்டார் சைக்கிள்களின் பிரத்தியேக இலக்கத் தகடுகளிலிருந்துதான் கண்டுகொள்ளலாம்.

வீதிகளில் நம் கவனத்தை ஈர்க்கும் மற்றொன்று, தமிழ் இலக்கத் தகடுகள் பதித்த மோட்டார் வாகனங்கள். யாழ்ப்பாணத்தின் 'பாரம்பரிய' மொறிஸ் மைனர்களும், ஏ.50, ஏ.55களும், 'டாம்பீக' ஒஸ்ரின் கேம்பிரிட்ஜுகளும் சிறு அளவில் வீதிகளில் வலம் வருகின்றன. ஸ்கூட்டர்கள், மோட்டார் சைக்கிள்களே அதிகமானவை.

தமிழீழத்தைக் குறிப்பிடும் வகையில் பொது வாகனங்களின் இலக்கத் தகடுகள் 'த' எழுத்தைக் கொண்டுள்ளன. எழுத்தையடுத்து, பிரான்ஸ் போன்ற நாடுகளைப்போல், ஊரை அடையாளங்காணும் விதத்தில் ஊருக்குரிய இலக்கமும் கூடவே இருக்கிறது. இயக்கம் சார்ந்தவர்களின் வாகனங்கள் 'உ' எழுத்தைக் கொண்டிருக்கின்றன. 'எ' பெண் போராளிகளின் வாகனங்கள். பொதுமக்களின் இந்த வாகனங்கள் மண்ணெண்ணெயும்,

**மோட்டார் சைக்கிள்கள் தொடர்பில் ஒரு சுவாரஷ்யம். இவை சில, வாயினால் ஊதி இயங்கவைக்கப்படுகின்றன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பஸ் நிலையம் அமைந்திருந்த இடம் முழுமையும் மரங்கள் நாட்டப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. இந்த நிழல்மர நடுகையை குடாநாட்டில் பல இடங்களிலும், பல வீதியோரங்களிலும் காணமுடிகிறது. வல்லை வெளியிலும்கூட இம்மர நடுகை இடம்பெற்றிருக்கிறது.

பஸ் நிலையம் இடமாற்றப்பட்டாலும் நகர் சுறுசுறுப்பாகவே இருக்கிறது. அங்கு மற்றொரு சிறப்பான மாற்றம், வர்த்தக நிலையங்களின் பெயர்ப்பலகைகள். அனைத்தும் தூய தமிழில் எழுதப்பட்டுள்ளன. கடைகளின் பெயரோடு, எவ்வகையான வர்த்தகம் என்பதும் பெயர்ப் பலகையில் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும். புடவைக் கடைகள் 'பட்டுப் புடவையகம்', 'பட்டுச் சோலை', 'ஆடையகம்' என்றும், பான்ஸி பொருள்கள் 'அழகுச் சோலை' என்றும், பலசரக்கு வியாபாரம் 'பல்பொருள் வாணிபம்' என்றும் இப்படிப் பல அழகான சொற்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

இதேவேளை சில சொற்கள் சற்று 'ஒருமாதிரியாக'வும் இருக்கின்றன. பாணுக்கு 'வெதுப்பி' என்று பெரிடப்பட்டிருக்கிறது



யாழ்ப்பாண பஸ் நிலையம்

'தின்னர்' எனப்படும் பெயின்ற் கரைக்கும் திரவமும் கலந்து விடப்பட்டு இயங்குகின்றன. வான்கள் போன்ற பெரிய வாகனங்கள் தாவர எண்ணெயில் இயங்குகின்றன். இந்த 'எரிபொருள் விற்பனை நிலையங்கள்' கோவில் வீதிகளில் காணப்படும் திருவிழாக்கால தேநீர்க் கடைகள் போன்று பிரதான வீதிகள், சந்திகளில் நகரில் காணப்படுகின்றன. போத்தல்களில் நிரப்பி, அடுக்கி வைத்திருப்பார்கள்.

இயக்க வாகனங்கள் பேற்றோலிலேயே இயங்குகின்றன. யாழ். வைத்தியசாலை டாக்டர்களுக்கும் அவர்களது வாகனங்களுக்காக குறித்த அளவு பெற்றோல் மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிள்கள் தொடர்பில் ஒரு சுவாரஷ்யம். இவை சில, வாயினால் ஊதி இயங்கவைக்கப்படுகின்றன; உண்மைதான்.

இவற்றின் 'ஹான்டிலி'ல் ஒரு சிறிய குப்பி தொங்கிக்கொண்டிருக்கும். நோயாளிக்கு 'சலைன்' ஏற்றப்படுவது போல, மெல்லிதான குழாய் ஒன்றும் ஹான்டில் பகுதியிலிருந்து 'ஹாபரேற்றரு'க்குச் செல்லும். சைக்கிளை இயக்குமுன்னர் அந்தக் குழாயுள் குப்பியிலிருந்து ஓரிரு 'துளிகள்' விட்டு பின்னர் வாயினால் ஊதுவார்கள். அதன் பின்னர் 'கிக் ஸ்ராட்' செய்யும்போது சைக்கிள் சுலபமாகவே இயங்கிவிடுகிறது. குப்பிக்குள் இருந்து 'துளித் துளி'யாக விடப்படும் அந்த 'மாஜிக் பொருள்' பெற்றோல். வாகனத்தைச் சுலபமாக இயங்கவைப்பதற்கு மட்டும் அருமருந்தாக அதனைப் பயன்படுத்துகிறார்கள்.

சைக்கிள்தான் அங்கு பிரதான போக்குவரத்துச் சாதனம்; வீதிகளை நிறைத்துக் காணப்படும். முன்னரெல்லாம் பொதுவாக, பாடசாலை மாணவிகளைத் தவிர பெண்கள் பெருமளவில் சைக்கிள்களில் செல்வதை யாழ்ப்பாணத்தில் காண்பதில்லை. இப்போது தமது சைக்கிள்களில் பின்னுக்கும் முன்னுக்கும் ஒவ்வொருவரை ஏற்றிக்கொண்டு வயதான பெண்கள், வயோதிபர், சிறுவர்கள், இவர்கள்தவிர பெரும் உத்தியோகத்தர்களும் செல்கிறார்கள்.

நவீன சந்தையருகே யாழ் பஸ்நிலையம் இப்போது இல்லை. அது அங்கிருந்து சுமார் அரை மைல் தூரத்துக்கப்பால், ஆரிய குளம் சந்திக்கு அணித்தாக அத்தியடிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. யாழ். வைத்தியசாலை சூழ்ந்த, செஞ்சிலுவைச் சங்கத்தின் 'பாதுகாப்பு வலயத்துள்' பஸ் நிலையம் அமைவதனால் அது புதிய இடத்துக்கு மாற்றப்பட்டிருப்பதாக கூறினார்கள்.

பேக்கரி - வெதுப்பகம். புத்தகசாலை - பொத்தக சாலை. சைவ உணவகம் - மரக்கறி உணவகம். தளபாடக் கடை - அணைக்கல நிலையம். இவை அத்தகைய சில. வேறொரு நாட்டுப் பெயர் என்பதால் மலாயன் கபே 'வேலவன் மரக்கறி உணவகம்' என்று மாற்றப்பட்டிருக்கிறது. அன் சன்ஸ், அன் பிரதர்ஸ் என்பனவெல்லாம் சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும், சின்னத்துரை சகோதரர்கள் என்றவாறு பொறிக்கப்பட்டுள்ளன. சுன்னாகம் செல்லும் வழியில் காங்கேசன்துறை வீதியில் 'விரிசுடர் எரிதரு விற்பனை நிலையம்' என்றொரு பெயர்ப் பலகையைக் கண்டேன். அது ஒரு விறகு காலை.

சுவையருவி, குளிரருவி என்பன விடுதலைப் புலிகள் நடாத்தும் சாப்பாட்டு, குளிர்பான கடைகள். மின்சார நிலைய வீதியில் நவீன சந்தைக்கு முன்புறமாக அமைந்திருக்கின்றன. சுவையருவி, ஈ.ஏ. பாய் கடை இருந்த கட்டடத்தில் இருக்கிறது. கடைகளுக்கு விடுதலைப் புலிகள் மின்சாரம் வழங்குகிறார்கள். விரும்பியவர்கள் பெற்றுக்கொள்ளலாம். ஆனால், இது மிகவும் செலவானது என்கிறார்கள் வர்த்தகர்கள். அதனால், மிகுந்த சிக்கனமாகவே அம் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். மறந்து காற்றாடியை சற்றுநேரம் இயங்க விட்டு

**போர் விளைத்த அனர்த்தங்களோடு அங்கு எங்குமே நம் கண்ணில் தெரிவன விடுதலைப் புலிகளின் விடுதலைச் சின்னங்கள்.**

**புகையிரதப் பாதை இருந்த இடத்தில் புல், செடிகளோடு ஆங்காங்கே சிற்சில குடிசைகளும் முளைத்து காணப்படுகின்றன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டால் அவ்வளவுதான்; பணத்தைக் காற்று அள்ளிச் சென்றுவிடும்.

'ஒகோ' என்று இல்லாவிட்டாலும் கடைகள் எல்லாமே இயங்குகின்றன. வின்ஸர் பட மாளிகைக்கு அணித்தாக கஸ்தூரியார் வீதியில் ஏராளமான நகைக் கடைகள். என்ன தடை இருந்தாலும் பொருள்கள் பெரும்பாலும் கிடைக்கின்றன. ஆனால், அந்த தடை, தட்டுப்பாடுக்கு ஏற்ற விதத்தில் விலைகள் அதிகமாக இருக்கும். கடைகள் அனைத்திலும் விடுதலைப் புலிகளால் வழங்கப்பட்ட விற்பனை உத்தரவுப் பத்திரம் மாட்டப்பட்டிருக்கிறது. விற்பனை செய்யும் பொருள்கள் அனைத்துக்கும் ரசீது கொடுக்கப்படவேண்டும். இதனை மீறுபவர்கள் அபராதம் செலுத்த நேரும். வர்த்தகர்கள் விற்பனை விலையில் 2 வீதத்தை புலிகளுக்குச் செலுத்தவேண்டும். குறித்த கால எல்லையுள் அது செலுத்தப்படாவிட்டால் பின்னர் அதற்கான அபராதமும் செலுத்த நேரிடலாம். முன்னர் அரசாங்கம் பெற்ற வரியை விட பெருமளவு வரி விடுதலைப் புலிகளுக்குச் சேருவதாக வர்த்தகர்கள் கூறுகிறார்கள்.

கடைகளில் விற்கப்படும் பொருள்களுக்கு கட்டுப்பாட்டு விலை எதுவும் இல்லை. சில பொருள்கள் சமயங்களில் பங்கீட்டு முறையில் வழங்கப்படுகின்றன. கட்டுப்பாட்டு விலையில் விற்கப்படும் அரிசிக்குச் சில சமயங்களில் தட்டுப்பாடு நிலவுகிறது.

தனியார் எவரும் நெல் கொள்முதல் செய்வது தடைசெய்யப்பட்டிருக்கிறது. கிளிநொச்சி, பரந்தன் போன்ற இடங்களில் விவசாயிகள் விடுதலைப் புலிகளுக்குத்தான் நெல்லை விற்கமுடியும். அப்படிக் கொள்வனவு செய்த நெல்லை புலிகள் தமது ஆலைகளில் குற்றி, வர்த்தகர்களுக்கு விற்பனை செய்வார்கள். இந்த ஆலைகளில் அரிசியைப் பெறுவதற்காக வர்த்கர்களின் நீண்ட 'கியூ'வை காலைவேளைகளில் சில இடங்களில் காணலாம்.


சந்தைகள் சுறுசுறுப்பாக இயங்குகின்றன. கரையோர மீன்பிடி தளர்த்தப்பட்டிருந்த அந் நாள்களில் சைக்கிள்களில் மீன் விற்கும் வியாபாரிகளையும் காணக்கூடியதாக இருந்தது. பல்கலைக் கழகம், பாடசாலைகள் இயங்குகின்றன. புதிது புதிதாக கொட்டில்களிலும், முன்னைய ரியூட்டரி வளவுகளிலும் இயங்கும் சில புதிய பாடசாலைகளையும் யாழ்ப்பாணத்தில் காணலாம். இவை இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான பாடசாலைகள். யாழ்ப்பாணத்து 'ரியூட்டரி'களும் 'பிஸி'யாகவே இயங்குகின்றன. ஆரியகுளத்தருகே பலாலி விதியில் சென்றுகொண்டிருக்கையில், குளத்தின் அருகாக ஏராளமான சைக்கிள்கள் ஒழுங்காக, பல வரிசைகளாக நிறுத்தப்பட்டிருந்தன. எதிரே ரியூட்டரி ஒன்று நடைபெற்றுக்கொண்டிருப்பதை தெரிந்துகொண்டபோது வியப்பாகத்தானிருந்தது.

யாழ்ப்பாணத்தில் புதிதாக நாம் பார்க்கும் மற்றொன்று; விடுதலைப் புலிகளின் பல்வேறு துறைப் பணியகங்கள். பல்வேறு இடங்களிலும் பெரிய, அழகான பெயர்ப் பலகைகளுடன் இவை காணப்படுகின்றன. வசதியான பெரும் தனியார் இல்லங்களை இப்படி பணியகங்களாக மாற்றியுள்ளனர். இவ்வில்லங்களின் சொந்தக்காரர்கள் அநேகமாக கொழும்புக்கோ அல்லது வெளிநாட்டுக்கோ குடிபெயர்ந்துவிட்டவர்கள். 'புலிகளின் குரல்' வானொலி நிலையம், 'ஈழநாதம்' பத்திரிகை அலுவலகம் போன்றனவும் இப்படி தனியார் இல்லங்களிலேயே அமைந்துள்ளன. இதுதவிர, இயக்கப் பொறுப்பாளர்களுக்கும், மாவீரர், போராளிகள் குடும்பத்தவர்களுக்கும் இப்படி வீடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அத்தோடு, இடம்பெயர்ந்த அல்லது வீடற்ற பொதுமக்களுக்கும் இவை வழங்கப்பட்டுள்ளன.

புகையிரத நிலையங்கள், பொதுக் கட்டடங்களிலும் பலவற்றில் ஏராளமான அகதிக் குடும்பங்கள் வாழ்கின்றன. பல இடங்களில் குடிசைகள் அமைத்தும் இவர்கள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

புகையிரதப் பாதை இருந்த இடத்தில் தண்டவாளங்களையோ, சிலிப்பர் கட்டைகளையோ அல்லது கற்களையோ காணவில்லை. புல், செடிகளோடு ஆங்காங்கே சிற்சில குடிசைகளும் அவ்விடத்தில் முளைத்து காணப்படுகின்றன.

நகரின் பிரதான வீதிகளில் கண்ணைக் கவரும் மற்றொன்று, மின்சாரக் கம்பங்களில் இணைக்கப்பட்டுள்ள விளக்குகள். கண்ணாடிக் கூண்டுகளுள் இந்த மேசை விளக்குகள் இரவு நேர



சுன்னாகம் புகையிரத நிலையம்




நவீன சந்தைப் பகுதி




● யாப்பாணத்தின் 'பாரம்பரிய' மொறிஸ் மைனர்களும், ஏ.50, ஏ.55களும், 'டாம்பீக' ஒஸ்ரின்கேம்பிரிட்ஜுகளும் சிறு அளவில் வீதிகளில் வலம் வருகின்றன.

**நகர் பொதுவாக மாலை ஏழு, எட்டு மணிக்கெல்லாம் அடங்கிவிடுகிறது. மின்சாரமின்மை இதற்கான முக்கிய காரணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைகளுக்கு விடுதலைப் புலிகள் மின்சாரம் வழங்குகிறார்கள்.

மின்சாரக் கம்பங்களில் கண்ணாடிக் கூண்டுகளுள் இணைக்கப்பட்டுள்ள மேசை விளக்குகள் இரவு நேர கலங்கரை விளக்கங்கள்

‘கலங்கரை விளக்கங்கள்’. மாநகரசபை அமைத்துள்ள இவ்விளக்குகள் குண்டும் குழிகளுமான வீதிகளில் இரவில் சுமார் 9, 10 மணிவரை வழிகாட்டுகின்றன.

பொழுதுபோக்கு அம்சங்கள் அருமை. இந்திய சினிமாவுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளபோது, புலிகள் தயாரித்த சினிமாப் படங்கள் அங்கு திரையிடப்படுகின்றன. யாழ். நகரில் ஸ்ரீதர், சுன்னாகம் நாகம்ஸ், பருத்தித்துறை தெய்வேந்திரா ஆகிய படமாளிகைகளில் இவை திரையிடப்படுகின்றன. நான் நின்றசமயம் ‘உயிர்ப்பூ’வுடன் துரசயளளஉை’யசம திரைப்படமும் திரையிடப்பட்டுக்கொண்டிருந்தது.

நகர்பொதுவாக மாலை ஏழு, எட்டு மணிக்கெல்லாம் அடங்கிவிடுகிறது. மின்சார மின்மை இதற்கான முக்கிய காரணம். பொருளாதாரத் தடை ஓரளவு நீக்கப்பட்டிருந்த அந் நாள்களில் எங்காவது சில வீடுகளில் ‘ஜெனரேட்டர்’ மின் வெளிச்சம் தெரியும். இயக்க முக்கியஸ்தர் வீடுகளுக்கும் புலிகளின் மின்சாரம் வழங்கப்படுகிறது. அம் மின்சாரம் கிடைக்கக்கூடிய இடங்களில் பொதுமக்களும் விரும்பினால் அதனைப் பெறலாம். ஆனால், பொதுவில் அது கட்டுபடியாகக் கூடியது அல்ல. ஆக, இந்நிலையில் அங்கு இரவு நேர ஆபத்தாந்தவனாக திகழும் ஒரு புதிய கண்டுபிடிப்பு ‘ஜாம் போத்தல் விளக்கு’.ஜாம் போத்தலின் அடியில் சிறிதளவு எண்ணெயில் அது சுடர் விட்டுக்கொண்டிருக்கும். காற்றினிலும், மழையினிலும், கலங்க வைக்கும் இடியினிலும் அதுதான் ஒளி.




ஸ்ரீதர் படமாளிகை

இரவு நேர வைபவங்களாக கோவில்களில் மின் விளக்குகளுடன் திருவிழாக்கள் நிகழும்; அல்லது விடுதலைப் புலிகளின் கூட்டங்கள் நிகழும். பெரும்பாலும் கோவில்கள் அங்கு சிறப்புற்றுக் காணப்படுகின்றன. வீதியோரத்து வயிரவர் கோவில்களும் நிர்மாணிக்கப் பட்டு, திருவிழாக்களும் நடைபெறுகின்றன. வெளிநாடுகளுக்குச் சென்றவர்களின் ‘நேர்த்திக் கடன்கள்’ என்கிறார்கள். அத்தோடு, இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளின் சில கோவில் திருவிழாக்களும் இங்குள்ள கோவில்களில் நடைபெறுகின்றன. அப்படி, நயினா தீவு நாகபூஷணி அம்மன் திருவிழா, திருநெல்வேலி அம்மன் கோவிலில் நடைபெறுவதாக கூறினார்கள். இந்தக் கோவில் திருவிழா நிகழ்ச்சிகளும், புலிகளின் கூட்ட நிகழ்ச்சிகளும் இரவு நேர நிசப்தத்தில் ஒலிபெருக்கிகளில் பெருமளவு தூரம் கேட்கின்றன. இதுதவிர, ‘புலிகளின் குரல்’ வானொலி இரவு 10 மணி வரை ஒலிபரப்பாகிறது. இரவு அப்படியே அடங்குகிறது. ஆம்; அது உறுதிப்படுத்தப்பட்ட ஒரு மோதல் தவிர்ப்பு காலம். இந்த அமைதியைக் குலைத்து எத்தனை இரவுகள் அவர்கள் பேரிடிகளையும், கோரங் களையும் கண்டிருப்பார்கள்...

சரி; இனியுந்தான் அந்த ஏக்கமான இரவுகள் அவர்களை அணுகவே மாட்டாவா?

யாருக்குத் தெரியும், திக்குத் தெரியாத காட்டில்... என்று எண்ணிக்கொண்டிருந்தபோதே, அவர்களை அந்த இரவுகள் மீண்டும் ஆக்கிரமித்துக்கொண்டேவிட்டன. ❑

# யாழ்ப்பாணத்து சந்தை நிலவரம்

| | தற்போதைய விலை ரூபா | முன்னர் விற்ற உச்ச விலை ரூபா | | தற்போதைய விலை ரூபா | முன்னர் விற்ற உச்ச விலை ரூபா |
|---|---|---|---|---|---|
| மண்ணெண்ணெய் (லீற்) | 31.00 | 300.00 | | | |
| வாகனங்களுக்கான ஒயில் (லீற்) | 80.00 | 1200.00 | போஞ்சி | 20.00 | |
| பெற்றோல் (லீற்) | 300.00 | 1300.00 | லீக்ஸ் | 35.00 | |
| விறகு | 500.00 | | கோவா | 10.00 | |
| அரிசி (கிலோ) | 29.50 | 40-50.00 | வெண்டைக்காய் | 8.00 | 50.00 |
| சீனி (கிலோ) | 45.00 | | கீரை | 5.00 | |
| மா (கிலோ) | 17.00 | | மீன் | 80-100.00 | 200.00 |
| தேங்காயெண்ணெய் | 50.00 | 150.00 | முட்டை | 4.50 | 10-15.00 |
| தேங்காய் | 20.00 | | ரோச் பற்றரி (சோடி) | 40.00 | 250.00 |
| உருளைக்கிழங்கு | 60.00 | 250.00 | சீமெந்து (50கி) | 650.00 | 5000.00 |


## இரவுநேர ஆபத்தாந்தவனாக திகழும் ஒரு புதிய கண்டுபிடிப்பு ‘ஜாம் போத்தல் விளக்கு’

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாகச் செலவினம்தான் இலங்கை அரசுக்கு இப்பிரதேசம் மீதுள்ள ஒரே 'பிடி'.

# விடுதலைப் புலிகளின் தனிநாடு

## இலங்கை அரசின் செலவில் நடைபெறும் ஆட்சி



இலங்கையின் வட பகுதியில், வவுனியாவுக்கு அப்பால், நிருவாக ரீதியாக ஒரு தனிநாட்டை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைத்தேயிருக்கிறார்கள். இலங்கை அரசாங்கத்தின் செலவினத்தில் அவர்கள் இந்த நிர்வாகத்தை மேற்கொள்கிறார்கள். இந்த நிர்வாகச் செலவினம்தான் இலங்கை அரசுக்கு இப்பிரதேசம் மீதுள்ள ஒரே 'பிடி'. இதனை இலங்கை அரசு நிறுத்தினால், தப்பித்துப் பிழைக்குமோ என்னவோ, ஆனால் இப்பிரதேசம் அநேகமாக ஒரு தனிநாடேதான்.

இதனை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெளிவாக உணர்ந்தேயிருக்கிறார். மோதல் தவிர்ப்பிலிருந்து வெளிப்பட்ட புலிகளின் புதிய பலத்தைக் கண்டு சந்திரிகா தடுமாற்றமடைந்திருந்தாலும் அவருக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குமிடையே ஏற்பட்ட மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தையும், அதன்மீதான நடிவடிக்கைகளையும் அறிவிக்குமுகமாக புதிய பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஆரம்பித்துவைத்த அன்று மாலை, படைத்தலைவர்களும் உடனிருக்க அவர் கூட்டிய பத்திரிகையாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட பல கேள்விகளுக்கு அவர் அளித்த உறுதியான பதில்களிலிருந்து இதனைத் தெளிவாகவே புரிந்துகொள்ளமுடிந்தது. உண்மையிலே, நாணயம் தவிர்ந்த; நீதி நிர்வாகம், சட்டவாக்கம், வரி உள்ளிட்ட அனைத்தும் இப்பிரதேசத்தில் புலிகளாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இங்குள்ள அரசாங்க அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், கிராம சேவகர்கள் போன்ற அரச நிர்வாகத்தின் பிரதிநிதிகள், 'எங்கள் அலுவல்களில் அவர்கள் (புலிகள்) தலையிடுவதில்லை; ஒரு பரஸ்பர புரிந்துணர்வு எம்மிடையே இருக்கிறது; அவர்கள் (புலிகள்) மிகவும் ஒத்துழைப்பாகவே இருக்கிறார்கள்' என்றுதான் கூறுவார்கள்.

யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் திரு பொன்னம்பலத்தைச் சந்தித்தவேளை, மாவட்ட செயலாளர் திரு க. குணராசா (செங்கை ஆழியான்), திருமதி சிதம்பரபத்தினி திலகநாயகம் போல் உள்ளிட்ட பல உதவி அரசாங்க அதிபர்களும் உடனிருந்தார்கள். அப்போது அரசாங்க அதிபர் இதையேதான் கூறினார்.

'விடயங்களைப் புலிகளுடன் நாம் ஆலோசிக்கிறோம்; எங்கள் செயல்பாடுகளையும் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்' -என்றும் அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகம், வங்கிகள் தொடர்பிலும் நிலைமை இதுவேதான். ஆக, இந்த வார்த்தைகளிலிருந்து அங்கு புலிகளின் அதிகார பலத்தை புரிந்துகொள்வதில் அவ்வளவு கடினமிருக்காது.

யாழ். செயலகத்துக்கு எதிர்த்தாற்போல், பழைய பூங்காவையடுத்து அமைந்த கட்டட திணைக்கள பல்மாடிக் கட்டடத்தில் 'தமிழீழ நிர்வாக சேவை' என்பதனை அமைப்பதற்கான வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. எனினும், 'இது அரச ஊழியர்களுக்கான அமைப்பேயன்றி, நிழல் அரசாங்கமல்ல' என்று புலிகள் இயக்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

மக்கள் தமது சம்பளம், ஓய்வூதியம், பிறப்பு, இறப்புப் பதிவு போன்றவற்றுக்குத்தான் கச்சேரிக்குச் செல்கிறார்கள். இதுதவிர, அவர்களின் பொது வாழ்வுக்கான தேவைகளுக்கு அவர்கள் புலிகளையே நாடவேண்டியிருக்கிறது. பொதுவில், புலிகளின் இந்த நிர்வாகத்தில் ஓர் ஒழுங்கு இருக்கிறது. அந்த ஒழுங்குக்கு அமைவாக மக்கள் அங்கு வாழ்கிறார்கள். குற்றச் செயல்கள் வெகுவாகக் குறைந்திருக்கின்றன. பெரும் சமூகப் பிரச்னையாகவிருந்த சீதனப் பிரச்னைக்குத் தீர்வாக 'சீதன தடைச் சட்டம்' கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக பல திருமணங்கள் விரைவாக நிறைவேறியிருப்தாக கூறுகிறார்கள். பெண் உரிமைகள் தொடர்பிலும், மணமான ஒரு பெண் தனித்து நின்று வழக்காடும் உரிமை, தேசவழமைச் சட்டத்தின் முதுசம், தேடியதேட்டம் போன்றவற்றில் பெண்ணுக்கும் பங்கு போன்றவை சட்ட ரீதியாக ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அங்குள்ள சிரேஷ்ட வழக்கறிஞர் ஒருவர் தெரிவித் தார்.

ஆக, ஒரு நிர்வாக ஒழுங்கு இருந்தாலும், மக்கள் அதனைப் பூரணமாக ஏற்றுக்கொள்கிறார்களா என்பது ஒரு கேள்வி. ஆனால், புலிகளின் இந்த நிர்வாகத்தை ஒரு சாதாரண அரசு நிர்வாகத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க இயலாது. பிரிவினை கோரி, ஓர் அரசாங்கத்தை எதிர்த்து கடுமையான ஆயுத போராட்டத்தை நிகழ்த்திக்கொண்டு, தாம் உருவாக்க எண்ணும் நாட்டை நோக்கிய ஒரு சமுதாய அமைப்பிலேயே அவர்களளவில் புலிகள் செயல்படுகிறார்கள். இந்த விதத்தில், விரும்பியோ விரும்பாமலோ நிர்ப்பந்தங்கள் பல - தேவைகள் பல அவர்களுக்கு இருக்கின்றன. இந்த நிர்ப்பந்தங்கள் - தேவைகள் பொதுமக்களை அல்லது வர்த்தகர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகத்தர்களை எவ்வாறு அவர்களது அன்றாட வாழ்விலோ அல்லது பொதுவாகவோ பாதிக்கின்றன என்பதன் அடிப்படையிலேயே மக்கள் அபிப்பிராயம் தங்கியிருக்கிறது. இந்த அபிப்பிராயங்களை மக்கள் வெளிப்படுத்துகிறார்கள். தங்களை அறிமுகப்படுத்தி தங்கள் கருத்துக்கள் வெளியிடப்படுவதையிட்டு அவர்கள் விரும்பாமலோ அல்லது அதற்கு அவர்கள் அஞ்சவோ கூடும். ஆனால், பொதுவில் தம் மனக் கிடக்கைகளை அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள். அதற்கு அங்கு தடையுவோடு அவற்றை ஏற்றுக்கொள்பவர்கள். மீதமானோர் அவர்களின் நடவடிக்கைகளை கொள்கையளவில் எற்காதவர்கள்.

கருத்து முரண்பட்ட சிலவற்றைப் பார்த்தால் போக்குவரத்தில், அதற்கான 'பாஸ்' முறையில் ஏற்படும் சொல்லொணா கஷ்டங்கள்; அன்றாட சீவனத்துக்கு தேவைப்படும் அதிக அளவு பணம்; சமயங்களில் அரிசிக்கு ஏற்படும் தட்டுப்பாடு; சினிமாவோடு, பல பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கான தடை; வர்த்தகர்களிடம் அறவிடப்படும் பணம் போன்றவை அவை.



வாழ்க்கைத் தேவைகளைச் சமாளிப்பதற்கான பணத்துக்கு மக்கள் கஷ்டப்படவே செய்கிறார்கள். முன்னரெல்லாம், மற்றையவர்களுக்கு வேண்டிய வேளைகளில் கடனாக உதவியவர்கள், இப்பொழுது தாமே மற்றையவர்களிடம் கடன் வாங்கும் நிலையில், சமூக அமைப்பில் மாற்றம் ஏற்பட்டுவிட்டதாக எழுத்தாளரும், சிவில் நிர்வாக உயர் உத்தியோகத்தருமான 'செங்கை ஆழியான்' தெரிவித்தார். உயர் மத்தியதர வர்க்கமாக இருந்தவர்கள் இப்பொழுது கீழ் மத்திய தரத்துக்கு வந்துவிட்டார்கள். இந்த நிலையில் உண்மையில் வெளிநாடுகளிலிருந்து செல்லும் பணம்தான் பெருமளவில் அங்கு ஈடு கொடுக்கிறது. கொழும்புக்கு இந்தச் சிரமங்களுடனான பயணத்தை மேற்கொள்பவர்களில் பெருமளவினர்

**பெரும் சமூகப் பிரச்னையாகவிருந்த சீதனப் பிரச்னைக்குத் தீர்வாக 'சீதன தடைச் சட்டம்' கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக பல திருமணங்கள் விரைவாக நிறைவேறியிருப்பதாக கூறுகிறார்கள்.**

மில்லை. ஆனால், இப்படி ஆயுதங்களுக்கு மத்தியில் வாழும் மக்களுக்கு இயல்பாகவே சில மனோநிலைகள் ஏற்பட்டுவிடுகின்றன. உதாரணத்துக்கு; அங்குள்ள புலிகளின் பணிமனைகள் அனைத்திலும் 'தலைவருக்கு' என்று எழுதப்பட்டு சிவப்பு நிற அஞ்சல் பெட்டி ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. அதனுள் சேர்ப்பிக்கப்படும் கடிதங்கள் பிரபாகரன் முன்னிலையிலேயே பிரிக்கப்பட்டு, தொடர்பான பதில் நான்கு, ஐந்து தினங்களில் உரியவருக்கு வந்துசேரும் என்று பொதுமக்கள்தான் கூறினார்கள். அதேவேளை, அப்படிச் சேர்ப்பித்தால் 'இயக்கம் சார்ந்த மற்றையோர் ஏதாவது எண்ணிவிடுவார்களோ' என்று யோசிப்பதுண்டு என்றும் சொன்னார்கள்.

நிறுவனமொன்றின் மேலதிகாரி ஒருவர் பல விடயங்களையும் பற்றி பேசிக்கொண்டிருந்தார். 'இப்படி ஒருவருடன் பேசி மிக நீண்ட நாள்கள்' என்றார் அவர். 'இங்கு எவருடனும் இப்படி பேசக்கூடியதாக இல்லை. அதிலும், ஒருவரை சிறிதுநாள்கள் காணாமலிருந்துவிட்டால், பின்னர் அவரைக் காணும்போது அவருடன் பேசுகையில் சற்று யோசித்து அளவாகவே பேசவேண்டும்; அப்படித்தான் நிலைமை' என்றார்.

மக்கள் மத்தியில் இயல்பாக ஏற்பட்டுவிட்ட மனோநிலையைத்தான் அவர் குறிப்பிட்டார்.

ஆக இப்படி, மக்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களிலிருந்து மூன்று வகையினராக அவர்களைக் காணலாம். ஒருசாரார், விடுதலைப் புலிகளுக்கு அவர்களின் நடவடிக்கைகள் எதுவானாலும் ஆதரவானவர்கள். மற்றையவர்கள், மேலே கூறியபடி புலிகளின் நிர்ப்பந்தங்கள், தேவைகளை உணர்ந்து, அவர்களின் நடிவடிக்கைகளில் பூரண உடன்பாடில்லாவிடினும், புரிந்துணர்

இந்த வெளிநாட்டுப் பணத்துக்காக வருபவர்களே. பணத்தோடு, பொருள்களையும் சுமந்துகொண்டு இவர்கள் திரும்புகிறார்கள்.

இந்திய படங்கள், பாடல்களோடு; இந்தியா டுடே, புறொன்ற்லைன், கல்கி, ஆனந்தவிகடன், குமுதம் உள்ளிட்ட பெரும்பாலான இந்திய சஞ்சிகைகள், ஏரிக்கரை நிறுவன பத்திரிகைகள் உள்ளிட்ட பல கொழும்பு பத்திரிகைகள் போன்றவற்றின் விற்பனை அங்கு தடை செய்யப்பட்டிருக்கின்றது.

ஆக, இவற்றுக்கெல்லாம் புலிகள் தரப்பிலும் நியாயமான காரணங்கள் சொல்லப்படுகின்றன. உளவாளிகள் தொடர்பில், பிரயாணஞ் செய்பவர்கள் மீதான கண்காணிப்பு அவர்களுக்கு அவசியமாகின்றது. இதற்காகவே பயணஞ்செய்யவிருக்கும் ஒருவருக்கு, அவர் விண்ணப்பித்து மூன்று தினங்களுக்குப் பின்னர்தான் அவர் பயணஞ்செய்வதற்கான 'பாஸ்' அவருக்கு வழங்கப்படுகிறது. இந்த காலஇடைவெளி, அவர்பற்றிய விபரங்களை அறிய தேவைப்படுகிறது. இது வழக்கமான நிலைமை என்றாலும், சில அத்தியாவசிய சந்தர்ப்பங்களில், வழக்கமாக 'பாஸ்' வழங்கப்படாத தினங்களில்கூட அலுவலகத்தைத் திறந்து, வேண்டியவர்களுக்கு தாம் 'பாஸ்' வழங்குவதாக புலிகளின் 'கலை பண்பாட்டுத் துறை' பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை கூறுகிறார். பாஸ் கட்டணமாக அறவிடப்படும் 100 ரூபாவை மக்கள் பெரிதாக எண்ணவில்லை என்கிறார் அவர். மிக இன்னலான கால கட்டத்திலும் மக்களின் இந்த பயணத்துக்காக புலிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளையும், உயிர்த் தியாகங்களையும் மக்கள் மறந்துவிட மாட்டார்கள். பூநகரி முகாமில் இராணுவ கெடுபிடிகள் மிகுந்திருந்த காலத்தில் அந்த முகாமை நோக்கி தாக்குதலை மேற்கொண்டு, இராணுவத்தினரை அத் தாக்குதலில்

**புலிகளின் இந்த நிர்வாகத்தில் ஓர் ஒழுங்கு இருக்கிறது. அந்த ஒழுங்குக்கு அமைவாக மக்கள் அங்கு வாழ்கிறார்கள்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிளாலி கடலில் பிரயாணிகளின் பாதுகாப்புக்காக மட்டும் 300 போராளிகள் வீமரணம்

ஈடுபடவைத்து, அதில் அவர்களின் கவனத்தைத் திருப்பி, அவ் வேளையில் பொதுமக்கள் தம் பயணத்தைப் பாதுகாப்பாக தொடர வைத்ததை அவர் கூறினார். இவ்விதமாக, கிளாலி கடலில் இப் பிரயாணிகளின் பாதுகாப்புக்காக மட்டும் 300 போராளிகள் வீமரணம் அடைந்திருப்பதாகவும் அவர் சொன்னார்.

கொழும்பிலிருந்து ஒரு பொருள் யாழ்ப்பாணத்தை வந்தடைவதிலுள்ள சிரமமும், செலவும் புரிந்துகொள்ளக்கூடியதே. அந்த விதத்தில் அப் பொருளின் விலை அமைகிறது. ஆனாலும், 'விற்பனை விலையில் 2 வீதம் உங்களுக்குக் கிடைக்குமென்பதால் வர்த்தகர் என்ன விலையிலும் விற்கலாமல்லவா; அத்துடன், 'செட்டி நட்டம் ஊர் மேலே' என்பதுபோல, அவர்களுக்குச் சில சமயங்களில் விதிக்கப்படும் அபராதங்களை ஈடுசெய்யவும் அவர்கள் பொருள்களின் விலையை அதிகரிக்கலாமல்லவா? இவற்றுக்காக ஏன் ஒரு கட்டுப்பாட்டு விலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கூடாது' என்று கேட்டபோது, பொருள்கள் தாராளமாகக் கிடைக்காதபோது கட்டுப்பாட்டு விலை சாத்தியமாகாது என்று விளக்கமளித்தார் புதுவை. 'இந்த நிலைமை அரிசி விற்பனையில் இருந்தது. தனியார் வியாபாரிகளிடம் அரிசி விற்பனை இருந்தபோது ஒரு கில்லோ அரிசியின் விலை 50 ரூபா வரை சென்றது. ஆனால், இப்போது அரிசி வியாபாரத்தை நாம் பொறுப்பேற்ற பின்னர் 28 ரூபா 50 சதத்துக்கு அரிசி கிடைக்கிறது. இதில் லாபமெதனையும் நாம் பெறவில்லை. ஆனால், வள்ளங்களில் குடாநாட்டுக்குள் கொண்டுவருவதில் ஏற்படும் தாமதம், மழையால் நெல்லைக் குற்றுவதில் ஏற்படும் தாமதம் போன்றன, சில சமயங்களில் தட்டுப்பாடு நிலவ காரணமாகிறது' என்றார்.

**பிரிவினை கோரி, ஓர் அரசாங்கத்தை எதிர்த்து கடுமையான ஆயுத போராட்டத்தை நிகழ்த்திக்கொண்டு, தாம் உருவாக்க எண்ணும் நாட்டை நோக்கிய ஒரு சமுதாய அமைப்பிலேயே அவர்களளவில் புலிகள் செயல்படுகிறார்கள்.**



வாழ்க்கைச் செலவு உயர்ந்தாலும் கூலி வேலை செய்பவர்களின் வருமானம் உயர்ந்திருக்கிறது என்கிறார் அவர். சாதாரணமாக, கூலி வேலை செய்வோர் நாளொன்றுக்கு சாப்பாட்டுடன் 160 ரூபா அல்லது சாப்பாடின்றி 200 ரூபா உழைக்கிறார்கள் என்கிறார்.' 800 ரூபாவுக்கு சாராயம் அருந்துகிறார்கள்; அதற்கு 100 வீதம் வரி அறவிடுகிறோம். நாளொன்றுக்கு 1000 ரூபா செலுத்தி வீடியோவில் படம் பார்க்கிறார்கள். ஆக, உள்ளூர் வருமானத்தில் தங்கியிருப்பவர்களுக்குத்தான் கஷ்டம்' என்றும் புதுவை இரத்தினதுரை விளக்கினார்.

'இந்திய சினிமா, போராட்டத்திலிருந்து மக்களை அந்நியப்படுத்துகிறது. சமூகத்துக்கு அவை உகந்தனவாக இல்லை. அந்த விதத்திலேயே சஞ்சிகைகள், பத்திரிகைகள் சிலவற்றையும் தடைசெய்திருக்கிறோம்.'

'புதிதொன்றை உருவாக்க நாம் நினைக்கிறோம். அதற்கு இடைஞ்சலானவற்றைத் தடுக்கிறோம். எமக்கு ஆதரவாக அனைத்துமிருக்கவேண்டும் என்று நாம் எண்ணவில்லை. இங்கும்கூட, விடுதலையைப் பற்றி ஒரு வார்த்தைதானும் எழுதாத 'மல்லிகை', 'மாற்றம்', 'தாயகம்' போன்றவற்றை நாம் அனுமதிக்கிறோம்.'



வர்த்தகர்கள் விவகாரம் பற்றிக் குறிப்பிடும்பொழுது, உள்ளவர்களிடம்தான் நாம் வாங்குகிறோமே தவிர, எல்லோரிடமும் நாம் வற்புறுத்துவதில்லை என்றார். அது உண்மையானதேதான். சாதாரண வர்த்தகர்கள் புலிகளால் தமக்கு வற்புறுத்தல் இல்லை என்றே கூறுகிறார்கள். ஆனால் பெரும் வர்த்தகர்களோ, 'நாம் கஷ்டப்பட்டுத்தானே உழைக்கிறோம்; கஷ்டப் படாதவர்களுக்குக் கரைச்சலில்லை' என்கிறார்கள்.

12 ஆயிரம் போராளிகளுக்கு சாப்பாடு தேவை. மிக மலிவான சாப்பாட்டைத்தான் அவர்கள் உண்கிறார்கள். ஒரு தோள்பை உடைமையுடன்தான் அவர்கள் வாழ்கிறார்கள் என்று, தம்முடைய தேவையை, நிலையை விளக்குகிறார் புதுவை.

சாதாரணமாக, ஜனநாயக அமைப்பிலேயே ஓர் அரசாங்கத்தின் அரைவாசி பதவிக்காலம்போய்விட்டால், சில சமயங்களில் அதற்கு முன்னருங்கூட, அந்த அரசாங்கம் மீது சலிப்படைவது மக்களின் இயற்கை. அப்படியிருக்க, அரசியல் உரிமைகள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்னைகள் எப்படியோ, ஆனால், வசதியாக வாழ்ந்த மக்கள், பத்து ஆண்டுகளுக்கு மேலாக அடிப்படை வாழ்க்கைத் தேவை களையுமிழந்து, இன்னல்களின் மத்தியில் பல துயரங்களையும் சுமந்து வாழ்ந்து வருகிறார்கள். அவர்களின் மனோ நிலை வேறு. இந்த யுத்தச் சூழலுக்குப் பழக்கப்பட்டு, அதில் அவர்கள் எதிர்நீச் சல் போடுவது வேறு. ஆனால், அந்த மக்கள் அமைதியை, சமா தானத்தை, தீர்வை விரும்புகிறார்கள். நான் தங்கியிருந்த நாள்கள் ஷெல் வீச்சோ, விமானக் குண்டு வீச்சோ ஏற்படாது என்று, தங்களின் உயிருக்கான உத்தரவாதத்துடன் அவர்கள் உலாவிய நாள்கள். அன்றாடத் தேவைகளுக்கான பொருள்கள் பலவற்றின் தடைகள் நீக்கப்பட்டு, அவற்றை அவர்கள் ஓரளவுக்கு சற்று இல குவாகப் பெற்று வாழ்ந்த நாள்கள். அந் நாள்களே கடினமானவைதான். அப்படியிருக்க, ஒரு யுத்தகால நாளை நினைத்துப் பார்த்தால்.....




யாழ். வைத்தியசாலை

அந்த மக்களுக்கு ஒரு விடிவு தேவை. அவர்கள் மிகவும் விரக்தியடைந்திருக்கிறாகள். தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றமும், சந்திரிகாவின் தோற்றமும் இம் மக்களுக்கு புதிய எதிர்பார்ப்புகளை, நம்பிக்கையை ஏற்படுத்தியே இருந்தன. பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட தடங்கல்களும், அரசாங்கத்தின் இராணுவ பலம் பற்றிய சந்திரிகாவின் பத்திரிகைச் செய்திகளும் இந்த எதிர்பார்ப்பு - நம்பிக்கையில் ஒரு சலனத்தை அந் நாள்களிலேயே ஏற்படுத்தியிருந்தன.

ஒன்று; மக்களிடம் சமாதானத்துக்கான எதிர்பார்ப்பு, ஆவல் இருக்கிறது. அன்றாட வாழ்வில் புலிகளிடம் ஆத்திரம் இருக்கிறது. ஆனால், இவற்றுக்காக 'பிச்சை வேண்டாம், நாயைப் பிடி' என்ற நிலையில் அந்த மக்கள் இல்லை. தீர்வு எதுவானாலும் அதனை ஏற்றுக்கொண்டுவிட அவர்கள் தயாராகவில்லை. தாம் செலுத்திய அளப்பரும் விலையின் பொருட்டு, தமது அபிலாஷைகளை நிறைவு செய்யும் மிக நியாயமான, நிரந்தர தீர்வொன்றையே அவர்கள் திடமாக எதிர்பார்க்கிறார்கள்.

ஆக, இந்நிலையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த புலிகளின் உண்மையான நிலைப்பாடு என்ன என்பதும் அங்கு பெரும் ஹேஷ்யமாகவே இருந்தது. எப்படியோ, ஒரு தனி நாட்டையே ஆட்சிசெய்வது போன்ற நிலையிலிருக்கும் பிரபாகரன், அதனை விடுத்து ஒரு ஜன நாயக அமைப்புக்குள் வருவாரா? அந்த அமைப்பில் அவருக்கு உரிய இடம் என்ன? அவருடைய பாது காப்புக்கு அச்சுறுத்தல் இல்லையா? அத்துணை போராளிகளதும், குறிப்பாக பெண் போராளிகளது நிலைமைகள் - எதிர்காலம் என்ன? ஈழம் தவிர்ந்த ஒன்றை ஏற்றுக் கொண்டால் அதற்காக உயிர்நீத்த அத்தனை மாவீரர்களும் வஞ்சிக் கப்பட்டவர்கள் ஆகமாட்டார்களா? என்பன போன்ற கேள்விகள் எழுப்பப்பட்டன.




பிரபாகரன் 40 வயதை எட்டுகின்ற; அவரது பிள்ளைகள் வளர்ந்து, ஒரு குடும்ப அநுபவமும் ஏற்படுகின்ற வேளையில், அவரது இறுக்கமான கொள்கைகளில் சற்று தளர்வுகள் ஏற்படலாமென்று ஒரு பதிலும் கூறப்பட்டது. ஆக, இவை உண்மையிலேயே புலிகளுக்கு பேச்சுவார்த்தைகளில் உள்ள கஷ்டங்களே. இவைதவிர, பேச்சுவார்த்தையில் அவர்கள் மிகுந்த ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டியவர்களாகவுமே இருக்கிறார்கள்.

**முன்னரெல்லாம், மற்றையவர்களுக்கு வேண்டிய வேளைகளில் கடனாக உதவியவர்கள், இப்பொழுது தாமே மற்றையவர்களிடம் கடன் வாங்கும் நிலையில், சமூக அமைப்பில் மாற்றம் ஏற்பட்டுவிட்டது.**

அன்றாட தேவைகளில் கஷ்டம், சில கொள்கைகளில் முரண்பாடுகள் இருந்தாலும், எல்லோருக்குமே புலிகள் மீது ஒரு மதிப்பு; பாசம்; அவர்களின் தியாகத்துக்கு தலைவணங்கும் தன்மை அந்த மக்களிடம் பெரிதும் இருக்கிறது. அந்த மக்களிடம் மாத்திரமல்ல, கொழும்பில் சந்தித்த, கருத்து முரண்பாடுகள் கொண்ட பல் வேறு மாற்று அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களிடமும்கூட அது இருக்கிறது. 'ஈழம் என்பதில் பிரபாகரனின் விசுவாசம் சந்தேகத்துக்குரியதல்ல.'-இது மாற்று இயக்கமொன்றைச் சார்ந்த தலைவர் ஒருவர் கூறிய வார்த்தை. ❑

**"புதிதொன்றை உருவாக்க நாம் நினைக்கிறோம். அதற்கு இடைஞ்சலானவற்றைத் தடுக்கிறோம்."**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ யுத்தம் – 3?

## புலிகளின் புதிய பலத்தால் தடுமாறும் அரசு

## இந்தியாவிடம் உதவிக்கு கோரிக்கை

**இலங்கை: நெருக்கடிக்குள் ஒரு தேசம்**




கொழும்பிலிருந்து
**எல்லாளன்**

விமானப்படையின் இரண்டு விமானங்களை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தியுள்ளமை இலங்கை அரசுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக பாரிஸ் சென்றிருந்த ஜனாதிபதி, செய்தியைக் கேட்டபின்னர் அவசரமாக அதிர்ச்சியுடன் கொழும்பு திரும்பினார். 'சார்க்' மாநாட்டுக்காகப் பின்னர் புறப்பட்ட அவர், மூன்று நாள் மாநாட்டை ஒரு நாளுடன் முடித்துக்கொண்டு நாடு திரும்பிவிட்டார். விமானங்கள் வீழ்த்தப்பட்டது அரசாங்கத்தை எந்த அளவுக்கு அதிர்ச்சி அடையச் செய்துள்ளது என்பதைக் காட்டுவதற்கு இந்த உதாரணம் ஒன்றே போதும்.

இரண்டு விமானங்களிலும் சுமார் 100 ஆயுதப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் உயர் அதிகாரிகள். அரசாங்கம் அதிர்ச்சி அடைவதற்கு இது மட்டும் காரணமல்ல. இரண்டு நாள்களில் இரண்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதும், 100 படையினர் கொல்லப்பட்டதும் அரசுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தினாலும், அதனைவிட அதிர்ச்சியளிக்கக்கூடிய ஒரு சம்பவமும் இதில் உள்ளது. விமானத்தைச் சுட்டு வீழ்த்தக்கூடிய சக்தியை விடுதலைப் புலிகள் பெற்றுள்ளமையே அரசுக்கும் ராணுவத்துக்கும் பெருமளவு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட செய்தி கொழும்பை எட்டியதும் அமைச்சரவையும், பாதுகாப்புச் சபையும் அவசரமாக பல தடவைகள் கூடி நிலைமைகளை ஆராய்ந்தன. ஆனால், ஜனாதிபதி நாட்டிலில்லாத நிலையில் உருப்படியான முடிவுகள் எதனையும் மேற்கொள்ள முடியவில்லை. ஜனாதிபதி மட்டுமன்றி, பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க கூட விமானங்கள் வீழ்த்தப்பட்டபோது நாட்டிலிருக்கவில்லை. மருத்துவ சிகிச்சைக்காக அவர் லண்டன் சென்றுவிட்டார். இந் நிலையில், அமைச்சரவைக் கூட்டத்துக்கு யார் தலைமை தாங்குவது என்பதில்கூட குழப்பமான நிலை. மொத்தத்தில், விமானங்கள் வீழ்த்தப்பட்டமை அரசாங்கத்தை சகல விதங்களிலும் குழப்பிவிட்டது.

அரசாங்க படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையேயான ராணுவ சமநிலையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய விதமாக இந்தச் சம்பவம் அமைந்துள்ளது. யுத்த காலத்தில் தமது மேலாதிக்க நிலையைப் பேணுவதற்கு விமானப்படை விமானங்களே அரசுக்குப் பெருமளவில் உதவியது. விமானப் படையின் பலத்தை அடிப்படையாகக் கொண்டே தன்னுடைய யுத்த தந்தரோபாயங்களை அரசாங்கம் வகுத்துக் கொண்டது.


> தரையிலும் கடலிலும் விடுதலைப் புலிகள் பெற்றுள்ள பலத்தை ஆகாயத்தில் பெற்றுக்கொள்ளாதது ஆயுதப் படையினருக்குச் சாதகமாகவே இருந்தது. இந்நிலையில் இரண்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளமை ராணுவ சமநிலையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் ஒரு புதிய யுத்த பரிமாணத்தையும் ஏற்படுத்தியுள்ளது.
>
> யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மேதின வைபவத்தில் 'விமான எதிர்ப்புப் பிரிவு' என்ற ஓர் அமைப்பு தம்மிடம் உள்ளதை விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தியுள்ளார்கள். ஆனால் 'விமான எதிர்ப்பு ஏவுகணை' தம்மிடம் உள்ளதா என்பதையிட்டு புலிகள் எதனையுமே தெரிவிக்கவில்லை. தமது பலத்தை வெளிக்காட்டாமல் புலிகள் மறைக்கலாம் என்றே இதனையிட்டு ராணுவ அதிகாரிகள் கருதுகிறார்கள்.

வட பகுதியிலுள்ள ஆயுதப்படையினரின்தளங்கள் அனைத்தும் விடுதலைப் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் உள்ளன. கடல்வழி மூலமாகவும், ஆகாய மார்க்கமாகவுமே இம் முகாம்களுக்கான 'விநியோகங்கள்' அனைத்தும் மேற்கொள்ளப்படுகின்றன. கடற்புலிகள் அமைப்பின் துரித வளர்ச்சி கடலில் ஓர் ஆபத்தான நிலையை படைகளுக்கு ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், கடல் வழியாக விநியோகங்களை மேற்கொள்வது கால தாமதத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







ஏற்படுத்தும். இதனால் ஆகாய மார்க்கமான விநியோகங் களையே ஆயுதப்படையினர் பிரதானமாக நம்பியிருந்தனர். இந் நிலையில் விமானப்படை விமானங்கள் இரண்டு சுட்டு வீழ்த் தப்பட்டது அரசுக்குப் பெரும் அதிர்ச்சி யைக் கொடுத்துள்ளதில் வியப்பில்லை.

இதனைவிட யுத்த களத்திலும் விமானப் படையினரின் உதவியினாலேயே ராணுவத் தினரால் ஓரளவுக்காவது நிலைமைகளைச் சமாளிக்கக்கூடியதாக இருந்தது. தரையிலும் கடலிலும் விடுதலைப் புலிகள் பெற்றுள்ள பலத்தை ஆகாயத்தில் பெற்றுக்கொள்ளாதது ஆயுதப் படையினருக்குச் சாதகமாகவே இருந்தது.

இந்நிலையில் இரண்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள் ளமை ராணுவ சமநிலையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் ஒரு புதிய யுத்த பரிமா ணத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஆயுத படையி னருக்கு ஒரு பாரிய பின்னடைவையும், புதிய தந்தரோபாயங்கள் தொடர்பாக ஆராயவே ண்டிய தேவையையும் இது ஏற்படுத்தியுள் ளது. இலங்கையில் மட்டுமன்றி சர்வதேச ரீதி யிலான கவனத்தையும் இச்சம்பவம் இலங்கை பால் திருப்பியுள்ளது.


**புதிய அரசாங்கத்தால் முழு அளவிலான ஒரு யுத்தத்தில் ஈடுபட முடியாது என்பதை ராணுவ ஆய்வாளர்கள் பலரும் தெளிவான முறையில் சுட்டிக் காட்டியிருக்கின்றார்கள். அர சாங்கமும் இந்தநிலையைத் தெளிவாகவே உணர்கின் றது.**

**விடுதலைப் புலிகளுக்கு எதி ரான யுத்தத்துக்கு இந்தியா வழங்கும் உதவிகள் வரைய றுக்கப்பட்டதாவும், நன்கு திட் டமிடப்பட்டதாகவுமே அமையும்.**

இந் நிலையில் அரசாங்கத்தை மற்றொரு பிரச்னை இன்னமும் குளப்பிக்கொண்டே உள்ளது. விமானங்களைச் சுட்டு வீழ்த்துவ தற்கு புலிகள் எவ்வாறான ஆயுதத்தைப் பயன் படுத்தினார்கள் என்பதற்கு அரசாங்கம் விடை காணமுடியாதுள்ளது.

விடுதலைப் புலிகளின் தரப்புச் செய்தி களை 'புலிகளின் குரல்' என்ற அவர்களது உத் தியோகபூர்வ வானொலி மூலமாகவே அர சாங்கம் பெறுகின்றது. இது புலிகளுக்குத் தெரியும். நவீனரக விமான எதிர்ப்புத் துப்பா க்கியினால்தான் விமானங் கள் சுடப்பட்டன என 'புலிகளின் குரல்' கூறியுள்ளது.

இவ்விடயத்தில் இரண்டு தகவல்களே அரசாங்கத்திடம் உண்டு. அதில் முதலாவது, இரண்டாவதாகச் சுட்டு வீழ்த்தப்




பட்ட விமானி கொடுத்த தகவல். அந்த விமானம் புன்னாலைக் கட்டுவனுக்கு மேல் வெடித்துச் சிதறுவதற்கு முன்பாக கட்டுப் பாட்டு நிலையத்துக்குக் கிடைத்த தகவலின்படி 'ஏவுகணை, ஏவுகணைத் தாக்குதல்' என விமானி சத்தமிட்டுள்ளார். இரண் டாவது, புலிகளின் குரல் வானொலியில் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல். இந்த இரண்டு தகவல்களும் ஒன்றுக்கொன்று முரண்பாடான்வையாகவுள்ளன. எனவே, விமானங்கள் எத னால் சுட்டு வீழ்த்தப்பட்டன என்பதை அரசால் உறுதிப்படுத்த முடியவில்லை.

இதனை உறுதிப்படுத்தாமல் அடுத்த நடவடிக்கையை அர சால் உறுதிப்படுத்த முடியாதுள்ளது. முதலாவது விமானம் பலாலி ராணுவ முகாமுக்குள்ளேயே போய் விழுந்துள்ளது. எனவே அவற்றின் பாகங்களைச் சேகரித்து வெளிநாடொன்றுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் விபத்துக்கான காரணத்தை அறிவ தற்கு அரசு முற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மேதின வைபவத்தில் 'விமான எதிர்ப்புப் பிரிவு' என்ற ஓர் அமைப்பு தம்மிடம் உள்ளதை விடு தலைப் புலிகள் வெளிப்படுத்தியுள்ளார்கள். இவ்வாறான ஓர் அமைப்பு தம்மிடம் உள் ளதை புலிகள் வெளிப்ப டுத்தியுள்ளது இதுவே முதல் தடவையாகும். ஆனால் 'விமான எதிர்ப்பு ஏவுகணை' தம்மிடம் உள் ளதா என்பதையிட்டு புலிகள் எத னையுமே தெரிவிக்கவில்லை. தமது பலத்தை வெளிக்க ாட்டாமல் புலிகள் மறைக்கலாம் என்றே இதனையிட்டு ராணுவ அதிகாரிகள் கருது கிறார்கள்.

ஆனால் 'வெப்பத்தை நாடிச் செல்லும் (Heat-Seeking) 'சாம்' ரக ஏவுகணை ஒன் றையே புலிகள் பயன்படுத்தியிருக்க வேண் டும் என ராணுவ வட்டாரங்கள் கருதுகின் றன. சாம் ரக ஏவுக ணைகள் சோவியத் குடி யரசிலுள்ள பல நாடுகளில் உள்ளன. இதனை விடுதலைப் புலிகள் கொள்வனவு செய்திருக்கலாம். ஆப்கானிஸ்தான் கெரில்லா அமைப் புகளுக்கு பாகிஸ்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமாக இவ்வாறான பல ஏவுகணைகளை அமெரிக்கா வழங்கியிருந்தது. இவற்றை விடுதலைப் புலிகள் கொள்வனவு செய்திருக்கலாம் என்ற ஓர் ஊகமும் பாதுகாப்பு வட்டாரங்களில் நிலவுகின்றது.

எது எப்படியிருந்தாலும் விமானப்படையைத் தாக்கக்கூடிய வல்லமையை விடுதலைப் புலிகள் பெற்றுள்ளார்கள் என்பதை இச் சம்பவங்கள் உணர்த்தியுள்ளன. 'விமான எதிர்ப்புப் படைப் பிரிவு' என்ற அமைப்பொன்றையும் புலிகள் உருவாக்கியுள்ளது விமானப் படைக்கெதிரான தாக்குதல்களுக்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுக்கப்போகின்றார்கள் என்பதையே காட்டி நிற்கின்றது.

இது யுத்த களத்தின் பரிமாணத்தையே மாற்றிவிட்டது எனும் போது, இந்தப் பின்னடைவை ஏற்றுக்கொள்வது அரசாங்கத்துக்கு மிகவும் கடினமாகவே உள்ளது. அடுத்து என்ன செய்வது என்ற கேள்விக்குப் பதில்கூற முடியாதவராக ஜனாதிபதி சந்திரிகா தடுமாறுவதைக் காணக்கூடியதாகவே உள்ளது.

ராணுவச் சமநிலையில் ஏற்பட்டுள்ள இந்தச் சடுதியான மாற்றம் ஒரு விடயத்தை மட்டும் தெளிவாகக் காட்டியுள்ளது. அதாவது, அரசால் தனித்துநின்று இந்த யுத்தத்தில் வெற்றிபெற முடியாது என்பதே அது. பொருளாதார மற்றும் இன்னோரன்ன பிரச்னைகளின் மத்தியில் புதிய அரசாங்கத்தால் முழு அளவிலான ஒரு யுத்தத்தில் ஈடுபட முடியாது என்பதை ராணுவ ஆய்வாளர்கள் பலரும் தெளிவான முறையில் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். அரசாங்கமும் இந்த நிலையைத் தெளிவாகவே உணர்கின்றது.

'சார்க்' மாநாட்டுக்கென புதுடில்லி சென்ற ஜனாதிபதி சார்க் பிரச்னைகளைவிட புலிகளின் பிரச்னை பற்றி கவலையுடனேயே காணப்பட்டார். ஜனாதிபதியும், வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இந்தப் பிரச்னைகளையிட்டே இந்திய அதிகாரிகளுடன் முக்கியமாக அளவளாவினார்கள். இது தொடர்பான விபரங்கள் அனைத்தும் ரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளன.

இந்தியா மீண்டும் ராணுவத்தை அனுப்பிவைப்பதையிட்டு கனவிலும் சிந்திக்கப்போவதில்லை. ஆனால், அதைவிட வேறு வகையான உதவிகளை வழங்குவது தொடர்பாக இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. முக்கியமாக கடல் கண்காணிப்பு வேலைகளில் இந்தியக் கடற்படை அதிக அளவில் ஈடுபடுத்தப்படலாம்.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் இன்று வகையான பிரச்னைகளை எதிர்நோக்கியுள்ளார். முக்கியமாக அவருடைய செல்வாக்கு இன்று வீழ்ச்சியடைந்துள்ளது. அத்துடன், அடுத்த வருடம் பொதுத் தேர்தலையும் அவர் எதிர்நோக்கியுள்ளார். இவை இரண்டையும் கவனத்திற் கொண்டே இந்தியாவின் நடவடிக்கைகள் அமையும்.

சோனியா காந்தியின் நெருக்கடியையே முக்கியமாக நரசிம்மராவ் எதிர்நோக்கியுள்ளார். எனவே, இலங்கைப் பிரச்னையில் அவர் எப்படியும் கைவைக்கவே விரும்புவார். ஆனால் மிகவும் கவனமான முறையில் அதனைச் செய்வதற்கே அவர் முற்படுவார். விளைவுகள் எதிர்மாறானவையாகி விடுவதை தவிர்க்கவே அவர் முயல்வார்.

எனவே, விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்துக்கு இந்தியா வழங்கும் உதவிகள் வரையறுக்கப்பட்டதாவும், நன்கு திட்டமிடப்பட்டதாகவுமே அமையும். அத்துடன் இது ரகசியமான முறையில் மேற்கொள்ளப்படக் கூடிய சாத்தியக்கூறுகளே காணப்படுகின்றன.

யுத்த தயாரிப்புகள், ஆயத்தங்கள், ஆள் திரட்டல்கள் அனைத்தும் யுத்தம் தொடரக்கூடிய சாத்தியக்கூறுகளையே வெளிப்படுத்துகின்றன. இந்த மூன்றாவது ஈழ யுத்தம் எவ்வளவு காலம் நீடிக்கும், இது இறுதி யுத்தமாகவும் அமையுமா என்பனவே இன்று பதில்காணப்படவேண்டிய கேள்விகளாகும். ❑


# SHIPPING - AIR FREIGHT - TRAVEL

UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES, MACHINERY ETC.

*TO* **COLOMBO** ***AND OTHER WORLD WIDE DESTINATIONS***

***MAIN AGENT FOR AIRLANKA***

PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE

*All Your Goods Go To Our Bonded Warehouse in Colombo*

**WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME**
**ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES**

## GLEN CARRIERS LIMITED

14 Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ
Telephone: 081-740 8379/081-749 0595
Fax: 081-740 4229 Telex: 929657 Glenca G

**BONDED WAREHOUSE:**

LAKSIRISEVA, 253/3 Avissawella Rd, Colombo 14. Tel: 575576





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயர்லாந்து அரங்கில் மாறும் காட்சிகள்

## அமைதிக்கான ஆவலும் எதிர்ப்பும்

விமல் சொக்கநாதன்

வட அயர்லாந்து என்றதும் மனதில் எழுவது அங்கு நடைபெறும் வன் செயல்கள்.

அந்த வன்செயல்களை மேற்கொள்வது, ஐ.ஆர்.ஏ. என்ற அயர்லாந்தின் பயங்கரவாத குழு மட்டும்தான் என்ற எண்ணம் அயர்லாந்தின் வரலாற்றை ஆழமாக அறியாதோர் மத்தியில் நிலைத்துவிட்ட ஒன்று.

கடந்த கால் நூற்றாண்டு காலமாக வட அயர்லாந்தில் நிலை கொண்டிருக்கும் பிரிட்டிஷ் ராணுவம் வெளியேறவேண்டும் என்றும், வட அயர்லாந்து தெற்கேயுள்ள ஐரிஷ் குடியரசு என்ற அயர்லாந்து நாட்டுடன் இணையவேண்டும் என்றும் ஆயுதப்போர் நடாத்திவருகிறது 'சின் பெயின்' (Sinn Fein நாங்கள் தனியானவர்கள்) இயக்கம். ஐ.ஆர்.ஏ. என்ற இராணுவ போராளிகளின் அரசியல் அணிதான் சின் பெயின். இதன் தலைவர் ஜெரி அடம்ஸ். இவர்களின் கொள்கையை முழுமையாக எதிர்க்கிறார்கள் வட அயர்லாந்தில் வாழும் புரட்டஸ்தாந்து (Protestant) மக்கள். ஆக, இது மதப் பூசலில் விளைந்த ஓர் அரசியல் போர். மத்திய கிழக்கில் அரபு முஸ்லிம்கள் யூதர்களுடன் நடாத்தும் போராட்டம்; இந்தியாவில் சீக்கியர்கள், முஸ்லிம்கள் இந்துக்களுடன் நடாத்தும் போராட்டம்; பொஸ்னியாவில் முஸ்லிம்கள்மீது கிறிஸ்தவ சேர்பியர்கள் நடாத்தும் இனச் சுத்திகரிப்பு போன்ற இவற்றுடன் ஒத்ததுதான் வட அயர்லாந்தில் வாழும் புரட்டஸ்தாந்து மக்கள் தெற்கே உள்ள அயர்லாந்து நாட்டுடனும் அதன் கத்தோலிக்க மக்களுடனும் நடாத்தும் போராட்டம்; காழ்ப்புணர்ச்சி; பகைமை எல்லாமுமே.

பிரிட்டனோடு இணைந்த ஒரு பிரதேசமாக இப்போது இருந்துவரும் வட அயர்லாந்து, தொடர்ந்தும் பிரிட்டிஷ் நிர்வாகத்துள்ளேயே இருக்கவேண்டும் என்று போராடுகிறார்கள் வட அயர்லாந்தின் புரட்டஸ்தாந்து மக்கள். பிரிட்டனுக்கு விசுவாசமாக இவர்கள் இருக்க விரும்புவதால் Loyalists என்றும், பிரிட்டனுடன் இணைந்து இருக்க விரும்புவதால் Unionists என்றும் இவர்கள் அழைக்கப்படுகிறார்கள். அதேபோல, தெற்கே உள்ள குடியரசு நாடான அயர்லாந்துடன் இணைய விரும்பிப் போராடும் கத்தோலிக்க ஐரிஷ் போராளிகள் 'குடியரசுவாதிகள்' - Republicans என்றும் அழைக்கப்படுவதுண்டு. இந்த 'யூனியனிஸ்ட்' மத்தியிலுள்ள வன்முறைக் குழுக்கள் இரண்டு:

1. அல்ஸ்டர் (வட அயர்லாந்து) தொண்டர்படை (U.V.F)

2. அல்ஸ்டர் பாதுகாப்பு அணி (U.D.A)

கத்தோலிக்கர்கள் என்றால் தமது ஜன்ம வைரிகள்; அவர்களை அழித்தே தீர வேண்டுமென்று உறுதிபூண்டு செயல்படும் இந்த இரு இயக்கங்களும் வட அயர்லாந்தில் கடந்த 25 ஆண்டுகளாக நடாத்திய கொடுஞ் செயல்கள் ஏராளம். கத்தோலிக்க மக்களின் வீடுகளுள், பாடசாலைகளுள், மதுபானச்சாலைகளுள் திடீரென நுழையும் இக்கும்பல்கள் இயந்திரத் துப்பாக்கிகளால் அப்பாவி மக்களை அழித்து விட்டு திரும்புகின்றன. 'நாம் ஐ.ஆர்.ஏ. ஆதரவாளர்களை அழித்தோம்; ஐ.ஆர்.ஏ. தாக்குதலுக்கு பதில் தாக்குதல் நடாத்தினோம்' என்று தம் செயல்களை இவை நியாயப்படுத்துகின்றன.

இந்த பயங்கரவாத இயக்கங்களின் அரசியல் அமைப்புக்களாக விளங்கிவருபவை முற்போக்குவாத யூனியனிஸ்ட் கட்சி (பி.யு.பி), அல்ஸ்டர் ஜனநாயகக் கட்சி (யு.டி.பி) என்ற இரு கட்சிகள். வட அயர்லாந்தின் வரலாற்றில் வெறும் மாகாணக் கட்சிகளாக பின்னின்ற இக் கட்சிகள் இப்போது திடீரென பிரபல்யம் பெற்று முன்தள்ளப்பட்டிருக்கின்றன. உலக செய்தி நிறுவனங்களின் கவனமும் அரசியல் தலைவர்களின் கவனமும் இச் சிறிய இரு கட்சிகள்மீதும் திரும்பியிருக்கிறது. இவ்வேளையில், வடஅயர்லாந்து அரசியலில் வணக்கத்துக்குரிய இயன் பெயிஸ்லி ஒருவர். கத்தோலிக்க மக்களுடனும் ஐ.ஆர்.ஏ. இயக்கத்தின் சின் பெயின் கட்சியுடனும் பிரிட்டிஷ் அரசு பேசவே கூடாது; அவர்களுடன் எவ்வித உறவும்

### அடிப்படைத் தீர்வுத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்



ஜோன் மேயர்: பிரிட்டிஷ் பிரதமர்

- வட அயர்லாந்துக்கு விகிதாசார பிரதிநிதித்துவமூலம் தெரிவு செய்யப்படும் புதிய மக்கள் சபை
- வட அயர்லாந்துக்கும், ஐரிஷ் குடியரசுக்குமிடையேயான உறவை பேணும் ஓர் இருதரப்பு அமைப்பு
- அரசியல், சிவில், கலாச்சார உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சாசனம்
- வட அயர்லாந்துமீது அரசியலமைப்பு ரீதியான தனது ஆதிக்கத்தை டப்ளின் நிறுத்திக்கொள்ளல்
- வட அயர்லாந்து மக்கள் தமது எதிர் காலத்தைத் தாமே நிர்ணயிக்கும் அவர்களது உரிமையை அங்கீகரிக்கும் வண்ணம் லண்டனின் சட்டத்தில் திருத்தம்
- லண்டனுக்கும் டப்ளினுக்குமிடையே பரஸ்பர ஒத்துழைப்பை விரிவுபடுத்தும் விதத்தில் பரந்த அளவிலான உடன்பாடொன்று பின்பற்றப்படல்




ஜோன் புருட்டன்: ஐரிஷ் பிரதமர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கக்கூடாது என்று நிபந்தனையிட்டு வாதிட்டுவரும் சர்ச்சைக்குரிய மனிதர் இவர்.

- சின் பெயின் இயக்கத்தின் தீவிர ஆதரவாளராக இருக்கும் ஒரு பெரும் புள்ளி, அமெரிக்காவின் செல்வாக் குமிக்க ஐரிஷ் அமெரிக்கர் ஒருவர். அயர்லாந்து நாட்டில் அமெரிக்க து தராக தற்போது பணியாற்றுகிறார்; பெயர் ஜீன் கெனடி சிமித். 67 வயதான இந்த ராஜ தந்திரி, முன் னாள் அதிபர் ஜோன் எவ். கெனடியின் சகோதரி.
- ஜெரி அடம்ஸை அமெரிக்க அதிபர் வரவேற்ற காரணத்தால் அமெரிக்க – பிரிட்டிஷ் உறவுகளில் கசப்பு நிலை ஏற்பட்டிருக்கிறது என்று தகவல் தொடர்பு சாதனங்கள் கதறுகின்றன. இங்கிலாந்தில் வாழும் ஐரிஷ் மக்களிடம் சின் பெயின் நிதி திரட்டுவதை தடை செய்யாத பிரிட்டிஷ் அரசு, அமெரிக்க ஐரிஷ் மக்களிடம் அப்படி நிதி திரட்டப் படுவதை அதிபர் கிளின்டன் தடுக்கவேண்டும் என்று கேட்பது நியாயமா என்று பலர் கேட்கிறார்கள்.



வட அயர்லாந்தின் மக்கள் மத்தியில் - அவர்களின் கருத்துக்களில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த விரும்பும் இந்த சிறிய கட்சிகள், அயர்லாந்து தேசியவாதிகளுடன் 'ஆட்சிப் பகிர்வு' ஒன்றுக்கு தயாராக இருக்கின்றன. வட அயர்லாந்தின் நிர்வாகத்தை (தெற்கு) அயர்லாந்து நாட்டுடன் பகிர்வதா? முடியவே முடியாது என்று வாதாடிவரும் புரட்டஸ்தாந்து மக்கள் மனதில் ஒரு சலனத்தை இப்போது ஏற்படுத்தியுள்ளன இக் கட்சிகள். 1993 டிசம்பரில் 'டவுனிங் தெரு பிரகடனம்' உருவானபின்னர் 1994 செப்டம்பரில் கத்தோலிக்க சின் பெயினும், புரட்டஸ்தாந்து ஆயுதக் குழுக்களும் போர்நிறுத்தத்தை அறிவித்த பின், அயர்லாந்தின் அரசியல் அரங்கில் காட்சிகள் மாற ஆரம்பித்தன. திரை விலகியதும் புதிய கலைஞர்கள் தோன்றினார்கள். பழைய கலைஞர்கள் மங்க ஆரம்பித்தார்கள். சம்பாஷணைகள் நடைபெற்றன. ஒருவர் மனதை மற்றையவர் புண்படுத்தாமல் காரியங்கள் நடந்துவந்தன. மூவாயிரம் உயிர்கள் பலியான பின்னர் - 25 ஆண்டுகள் உருண்டோடியபின்னர், வெண்ணெய் திரளும்போது தாழியை உடைக்க யாருமே விரும்பவில்லை.

காட்சி - 1

ஆயுதம் தாங்கிப் போராடிய இரண்டு எதிர்க் குழுக்களும் சண்டையை நிறுத்திய பின்னர் வட அயர்லாந்தின் எதிர்காலம் என்ன?

இதனை நிர்ணயிக்கும் 43 பக்க பிரசுரம் ஒன்று பெப்ரவரி இறுதியில் வெளியிடப்பட்டது. பிரசுரத்தின் பெயர் 'எதிர் fhy« g|¿a Ô®1¤½£1« (Framework for the Future).' வெளியிட்டு வைத்தவர்கள் இரண்டு ஜோன்கள். அதாவது, பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜரும், ஐரிஷ் பிரதமர் ஜோன் புரூட்டனும். 30 ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டு, வட அயர்லாந்து மக்களிடம் 'இதுதான் எதிர்காலத் திட்டம் என்பதல்ல, இது வெறும் ஆரம்ப நகல்தான், இதனைப் படியுங்கள், ஆராயுங்கள், சிந்தியுங்கள், பிடிக்காவிட்டால் நிராகரியுங்கள்' என்று பிரதமர் மேஜர் கேட்டுப் பார்த்தார். ஆனால், அவசர புத்திகொண்ட வட அயர்லாந்தின் புரட்டஸ்தாந்து அரசியல் வாதிகளோ இதனை எதிர்த்தார்கள். தொலைக்காட்சிக் கமராக்கள் முன்னதாக அதனைத் தீயிட்டு, பிரச்சாரம் செய்தார்கள். 'இது எம்மைக் கத்தோலிக்க அயர்லாந்து நாட்டுக்கு விற்றுவிடும் சாசனம்' என்று கண்டித்தார்கள்.

மேஜரின் திட்டம் பற்றிய உரையாடல் ஒன்று தொலைக்காட்சியில் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, அதில் பங்கு பற்றி உரையாடிக் கொண்டிருந்த புரட்டஸ்தாந்து யூனியனிஸ்ட் கட்சி அரசியல்வாதி ஒருவர் திடீரென்று எழுந்து வெளிநடப்புச் செய்தார். பல்லாயிரம் மக்கள் இதனை தொலைக்காட்சியில் கண்டு வியப்படைந்தார்கள். இதற்குக் காரணம், உரையாடலை நடாத்திய அறிவிப்பாளர் 'அடுத்ததாக இந்தத் திட்டம் பற்றி சின் பெயினின் கருத்தை அறிய விரும்புகிறேன்' என்று அறிவித்தமைதான்.

சின் பெயின் என்றால் கத்தோலிக்கர்; அயர்லாந்து வாசிகள். அவர்களுடன் இது பற்றிப் பேச என்ன இருக்கிறது? என்பது அந்த அரசியல்வாதியின் கருத்தாக இருக்கலாம். ஆனால், வட அயர்லாந்தில் வாழும் மக்களின் கருத்து இதுவல்ல. சமாதானத்தின் இனிமையை வட அயர்லாந்தின் கத்தோலிக்க மக்களும் புரட்டஸ்தாந்து மக்களும் சுவைத்து ருசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மக்கள் மத்தியில் கலவரங்களை அடக்க 25 ஆண்டுகளுக்கு முன்னர் வந்த இராணுவம் இன்னமும் பிரிட்டனுக்குத் திரும்பவில்லை. ஆனால், அந்த இராணுவத்தால் 25 ஆண்டுகளாக அடக்கமுடியாத கலவரங்கள் இருதரப்பினரின் போராளிக்குழுக்களும் விடுத்த போர் நிறுத்த அறிவிப்பினால் அடங்கிவிட்டன. எனவே, மீண்டும் கலவரங்கள் உருவாக இடம்கொடுக்க மக்கள் தயாரில்லை. போர்ப் பறைகள் முழங்கிய வட அயர்லாந்தில் சமாதான கீதம் இசைக்கப்பட வேண்டுமானால் - வட அயர்லாந்து எனும் மயானபூமி மலர்த் தோட்டமாக மாறவேண்டுமானால் அது பேச்சு

- தற்போதைய அதிபர் கிளின்டன் பதவிக்குப் போட்டியிட்ட காலத்தில் பிரிட்டிஷ் அரசு கிளின்டனின் வைரியான புஷ்ஷுக்கு வெளிப்படையாக ஆதரவளித்தது. இதனை கிளின்டன் மறக்கவில்லை. அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய சமூக நாடுகளுக்குமிடையில் நேர் எதிர் கருத்துக்கள் ஏற்பட்டுள்ள விடயங்கள்: பொஸ்னியா, வட அத்தலாந்திக் ஒப்பந்த நிறுவனத்தின் (நேட்டோ) எதிர்காலம் என இப்படிப் பல. பிரான்சின் புதிய அதிபர் யார், ஜேர்மனியின் அதிபர் ஹோலைக் கவர்வது எப்படி என்பதில்தான் பிரிட்டன் இப்போது கூடிய கவனம் செலுத்துவது தெரிகிறது.
- உலகின் அரசியல் தலைவர் போல கௌரவிக்கப்பட்டுள்ள சின் பெயின் தலைவரைப் பார்த்து ஒரு வெளிநாட்டு நிருபர் கேட்டார்: உலக பெரும் புள்ளியாக மாறிவிட்டீர்கள்; வெகு விரைவில் ஒரு நாட்டின் தலைவராக்கப்பட்டு பக்கிங்ஹாம் மாளிகையில் மகாராணியுடன் அமர்ந்து தேநீர் அருந்தும் வாய்ப்பு வரக்கூடும். அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

அடம்ஸ்: இல்லை, என் தாயார் அதனை விரும்பமாட்டார்.

அதிபருடன் அமர்ந்து பகல் போசனம் அருந்தினீர்களே, ஏதேனும் விடயங்களை விட்டுக்கொடுக்கவேண்டி ஏற்பட்டதா?

அடம்ஸ்: ஓசிச் சாப்பாடு என்று இல்லவே இல்லையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகளினால் மட்டுமேதான் ஏற்பட முடியும். அப்படியான நேர்முக கலந்துரையாடலில் இடம்பெறுவது மேஜரின் திட்டமா அல்லது வேறு எவரும் கொண்டு வரும் திட்டமா என்பது அல்ல முக்கியம். அந்த வட்ட மேசையில் பிரிட்டனுடனும் வட அயர்லாந்து மக்களுடனும் அயர்லாந்து நாடு அமரவேண்டும்; சின் பெயினும் அமரவேண்டும். இதுதான் முக்கியம். இதனை இப்போது பரவலாக பலரும் ஏற்றுக்கொள்ளத் தலைப்பட்டுவிட்டார்கள்.

*காட்சி-2 (களம்: அமெரிக்கா)*

சமாதானத்துக்கு தான் தயார் என்று நிரூபிக்க போர் நிறுத்தத்தை அறிவித்த சின் பெயின் தலைவர் ஜெரி அடம்ஸ், பிரதமர் மேஜரின் திட்டம் முன்னேற்றமான ஒரு நிலைமையைக் குறிக்கிறது; அயர்லாந்து முழுவதும் ஒரு தனிநாடு என்ற கருத்தை வலியுறுத்துகிறது என்று கருத்து வெளியிட்டிருந்தார். கடந்த 6 மாத காலமாக அவர் கடைப்பிடித்து வரும் சமாதானப் போக்கினை அங்கீகரிக்கும் உச்சக் கட்ட நிகழ்ச்சியாக அமைந்தது அவரது வாஷிங்டன் பயணம். அதிபர் கிளின்டனுடன் கைகுலுக்கினார்; ஐரிஷ் மக்களுக்கு முக்கிய திருநாளான புனித பற்றிக்ஸ் தின விருந்தில் கிளின்டனுடன் கலந்துகொண்டார். 'பயங்கரவாதி' என்று பிரிட்டனால் பிரகடனஞ் செய்யப்படிருந்த ஜெரி அடம்ஸுக்கு அமெரிக்க நாட்டு நுழைவு அநுமதி வழங்குவதைத் தடுக்க பிரிட்டன் பெரிதும் முயன்றது. அது முடியாதுபோகவே சரி, அவருடன் பேசினாலும் ஆயுதக் குறைப்பு பற்றி, ஆயுத தவிர்ப்பு பற்றி பேசுமாறும் அமெரிக்காவிடம் பிரிட்டன் கேட்டது. ஆனால், பிரிட்டன் கேட்டது நடக்கவில்லை.

அமெரிக்காவில் இன்று மிகப்பெரும் செல்வந்தர்களாக இருப்பவர்கள் அயர்லாந்திலிருந்து சென்று அமெரிக்காவில் குடியேறிய குடியேற்றவாசிகள். 'ஐரிஷ் அமெரிக்கர்கள்' எனும் இந்த செல்வந்தக் குழுவின் ஆதரவு இருந்தால் ஒருவர் வெள்ளை மாளிகைக்குள் புகுந்துவிடலாம். தனது சொந்த அரசியல் எதிர்காலத்தை உறுதிப்படுத்திக்கொள்ளவே அதிபர் கிளின்டன் ஜெரி அடம்ஸை தாஜா செய்வதாகவும் சிலர் கருதுகிறார்கள். எது எவ்வாறாயினும், சின் பெயின் தலைவர் ஜெரி அடம்ஸ் அமெரிக்க அதிபரினால் கௌரவிக்கப்பட்டமை ஓர் உலகத் தலைவர் அந்தஸ்துக்கு அவரை உயர்த்திவிட்டிருக்கிறது.

'தீண்டாமையோடு தள்ளி வைக்கப்பட்டவர் பகிரங்கமாக கௌரவிக்கப்பட்டார்' என்று பிரிட்டனின் கார்டியன் பத்திரிகை தலைப்பிட்டு எழுதியிருந்தது. அது ஒரு வெற்றிப் பயணம். பிரச்சார உத்தி. தொலைக்காட்சியில் ஜெரி அடம்ஸ் அதிபர் கிளின்டனை வாயாரப் புகழ்ந்தார்.

அமெரிக்க அரங்கில் இந்தக் காட்சிகள் நடைபெற்று வர, பிரிட்டனில், காரிருளில் கானகத்தே காதலனால் தனித்துவிடப்பட்ட காரிகையைப்போல பிரிட்டிஷ் அரசு மனம் வெதும்பிக் கொண்டிருந்தது. தனது உள்ளக்கிடக்கையை பிரிட்டனுக்கு விளக்க பிரதமர் மேஜருக்கு நேரடியாக அதிபர் கிளின்டன் தொலைபேசி அழைப்பு விடுத்தார். ஆனால், பிரிட்டிஷ் பிரதமர் தொலைபேசியில் பேசவர மறுத்தார். இருதடவைகள் கிளின்டனின் அழைப்புகளை மேஜர் இப்படி புறக்கணித்து மறுத்தது அரசியல் பண்பற்ற செயல் என்று பரவலாகக் கருதப்பட்டது.

*காட்சி - 3*

'பயங்கர வாதிகளுடன் அமர்ந்து பேச்சுவார்த்தைகள் நடாத்த பிரிட்டன் ஒருபோதும் தயாரில்லை' என்பது பிரிட்டிஷ் அரசு கிளிப்பிள்ளை போல திரும்பத் திரும்பச் சொல்லிவரும் ஒன்று. மாக்கிரட் தச்சர் காலத்திலிருந்து அவர் கர்ஜனை செய்த சொற்றொடர் இது. ஆனால், அவருக்கு முன்னரேயே ஆயுதம் தாங்கிய போராளிகளுடன் பிரிட்டன் பேச அமர்ந்திருக்கிறது என்பதற்கு இந்திய, கென்ய, சைப்பிரஸ், சிம்பாப்வே, தென் ஆபிரிக்க வரலாறுகள் சான்று.

பிரிட்டிஷ் அமைச்சர் மட்ட பேச்சுவார்தை ஒன்று சின் பெயின் இயக்கத்துடன் நடாத்தப்படுமுன்னதாக போர் நிறுத்தப்பட வேண்டும்; ஆயுதங்கள் கைவிடப்பட வேண்டும் என்பது பிரிட்டனின் நிபந்தனை. போர் நிறுத்தப்பட்டாயிற்று. ஆனால், ஐ.ஆர்.ஏ. இன்னமும் ஆயுதங்களைக் கைவிடவில்லை. எனவே, பேச்சுவார்த்தைகள் நடக்குமா?


அமைச்சர் மட்ட பேச்சுவார்த்தைகள் நடந்தால் அதில் என்ன விடயங்கள் விவாதிப்பது என்று நிகழ்ச்சி நிரல் ஒன்றை பிரிட்டிஷ் அரசுசின் பெயினுக்கு அனுப்பி வைத்திருப்பது நல்ல செய்தியாகும்.

மறுபுறத்தில், வட அயர்லாந்தின் புரட்டஸ்தாந்து பயங்கரவாதிகளுடனும் பிரிட்டிஷ் அமைச்சர் பேசியிருக்கிறார். புரட்டஸ்தாந்து தரப்பில் அரசியல்வாதிகளும் சரி, பயங்கரவாதிகளும் சரி ஐ.ஆர்.ஏ. போர் நிறுத்தம் கண்டு கதிகலங்கிப்போயிருக்கிறார்கள். 25 வருட கால யுத்தத்தின்போது கலங்காத இவர்கள் கடந்த ஏழே எழு மாத யுத்த நிறுத்தம் கண்டு அதிர்ந்துபோயிருக்கிறார்கள். பிரிட்டிஷ் அரசு அவர்களுக்கு எதனை விட்டுக் கொடுக்கப்போகிறது என்பது பற்றி

- சோவியத் யூனியன் என்ற பொது எதிரி இருந்த நாள்களில் அமெரிக்க – பிரிட்டிஷ் உறவுகள் மிகவும் சீராக இருந்தன. இன்று அந்த பொது எதிரி இல்லை. அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்குமிடையிலான விருப்பு வெறுப்புகளும் வெவ்வேறு திசைகளில் திரும்பிவிட்டன.
- அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் இடையிலான உறவுகளில் இன்பகரமான கூடல்களும் பின்னர் வேதனை தரும் ஊடல்களும் ஏற்படுவது புதிதல்ல. உலகப்போர் காலத்தில் நேச நாடுகளாக ஒத்துழைத்த அந்த நாள்களிலேயே, அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்டுக்கும் பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சிலுக்கும் இடையில் கசப்பு நிலை நிலவியதாக போர்க்கால ஆவணங்கள் அறிவிக்கின்றன. அதிபர் கிளின்டன் பிரிட்டனில் படித்து பட்டம் பெற்று, பிரிட்டனை நன்கு அறிந்திருந்தும், பிரிட்டனுடன் உறவுகளை கசப்படைய செய்வதில் அவர் அஞ்சவில்லை. அதே போல், பிரிட்டனை நன்கு அறிந்த இன்னொருவர் அதிபர் ஐசன் ஹோவர். பிரிட்டனின் விடயத்தில் 1950களில் மிக வும் கெடுபிடிகள் காட்டியவர்.
- பிரிட்டன்மீது மிகுந்த அன்பு காட்டியவர் ஜோன் கெனடி. தனது வெள்ளை மாளிகை அதிகாரிகளை அலட்சியம் செய்து ஆலோசனைகளை உதறித் தள்ளிவிட்டு, பிரிட்டனுக்கு "டிடயசளை ஏவுகணைகளை வழங்க இணங்கியவர். அவரது நடவடிக்கையால் கடந்த 35 ஆண்டுகளாக அணு ஆயுத விடயங்களில் இரு நாடுகளும் கூட்டாக ஒத்துழைத்துவருகின்றன. 1970களில் பிரிட்டிஷ் பிரதமர் எட்வர்ட் ஹீத் ஐரோப்பிய நாடுகளுடன் உறவுகளை வளர்க்க விரும்பியதோடு, பிரிட்டிஷ் – அமெரிக்க உறவு கள் தளர்வடைய ஆரம்பித்தன. 1980களில் அமெரிக்காவில் ரேகன்; பிரிட்டனில் தச்சர். இருவருக்குமிடையில் இருந்தது கவர்ச்சியா? ஆகர்ஷ சக்தியா? காந்தமா? காதலா? எது என்னவோ, பாதுகாப்பு, உளவுத்துறை விடயங்களில் தீவிர ஒத்துழைப்பு இரு நாடுகளிடையேயும் அப்போது நிலவியது. 1981இல் ஆர்ஜன்ரைனாவுடன் பிரிட்டன் போர்புரியப் புறப்பட்டபோது அமெரிக்காவின் உளவுத்துறை உதவி மற்றும் உதவிகள் ஏற்கனவே அனுப்பப்பட்டன (வெள்ளை மாளிகை அதிகாரபூர்வமாக அறிவிக்க முன்னரேயே).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டேவிட் எர்வின்

இவர்கள் மத்தியில் பீதி ஏற்பட்டுள்ளது.

புரட்டஸ்தாந்து அரசியல் தலைமைப் பீடம் நடுத்தர வர்க்க மக்களையே பிரதிநிதித்துவம் வகிக்கிறது; குண்டுகளைத் தயாரித்து, கொலைகளைச் செய்து, சிறைசென்று வேதனைப்படும் கீழ் மட்டத்தினரை - தொழிலாள வர்க்கத்தினரை இது பிரதிநிதித்துவம் செய்வதில்லை என்பது இப்போது புதிதாக காணப்பட்டிருக்கும் குறைபாடு. இந்தக் குமைச்சல்களினால் ஒரு சில தொழிலாள வர்க்கத்தினர் தமக்கென சில ஆதரவாளர்களைத் திரட்டி, பழமைவாத நடுத்தர வர்க்கத்தினரை எதிர்த்து வருகிறார்கள். தலைவர்கள் என தம்மைக் கருதும் இப்போதைய தலைவர்கள் தமது கொள்ளைகளை எம்மீது திணித்து விட்டு தமது பெரும் ஆடம்பர வாசஸ் தலங்களுக்கு சென்றுவிடுகிறார்கள்; நாங்களோ எமது குடிசைகளுக்குத் திரும்புகிறோம். எமது எதிரியான கத்தோலிக்க ஐ.ஆர்.ஏ. யுடன் பேசுவதில் தவறில்லை; எமது சின்னஞ்சிறிய அயர்லாந்தில் அமைதியை ஏற்படுத்த ஆயுதங்களைக கைவிட்டுவிட்டு அரசியல் பேசவேண்டுமானால், நாம் அதற்கும் தயார் என்று கூறிவருகிறார்கள் டேவிட் எர்வின் தலைமையிலான தொழிலாள வர்க்க புரட்டஸ்தாந்து போராளிகள். ஐ.ஆர்.ஏ.யுடன் பேச தயார் என்று அறிவித்துவிட்ட இந்த புரட்டஸ்தாந்து போராளிகளைத் தேடி தொலைக்காட்சி நிருபர்கள் படையெடுக்கிறார்கள். காலம் காலமாக கத்தோலிக்க மக்கள்மீது துவேஷ உணர்ச்சியை தூண்டிவிட்டுக் கொண்டிருந்த இயன் பெயின்சி, றொபின்சன் போன்ற தலைவர்களை உதறிவிட்டு, டேவிட் ஏர்வின் போன்ற புதிய அரசியல் வாதிகளை, பயங்கரவாதத்தைக் கடைப்பிடித்து அதிலிருந்து அரசியலுக்கு வந்து சமாதானம் பேசத் தயாராகிவிட்ட புதிய அரசியல் வாதிகளை மக்கள் செவிமடுக்க தயாராகிவிட்டார்கள்.

ஐ.ஆர்.ஏ.யுடன் சமரசம் பேசத் தயாராகிக்கொண்டிருக்கும் பிரிட்டிஷ் அரசும் புரட்டஸ்தாந்து தரப்பில் யாருடன் அமர்ந்து பேசுவது என்பதை உணர்ந்து வருகிறது.

எது எவ்வாறாயினும் வட அயர்லாந்தில் சமாதானம் நாளை காலையிலேயே ஏற்பட்டுவிடப் போவதில்லை. இன்னமும் கடக்கவேண்டிய பாதை கரடு முரடானது என்பதை எல்லோருமே உணர்ந்திருந்தாலும் புதிய வட அயர்லாந்து ஒன்று உருவாகிக்கொண்டிருப்பதை தமது மனக்கண்களில் கண்டு மகிழ்கிறார்கள். ❑


# VETTI & CO
## SOLICITORS

For
IMMIGRATION &NATIONALITY MATTERS
HOME OFFICE & AIRPORT INTERVIEWS
ASYLUM APPLICATION - WORK PERMITS
WORKING HOLIDAYS - WELFARE BENEFITS
POLICE INTERVIEWS
CRIMINAL & CIVIL LITIGATION
LEGAL AID WORKS UNDERTAKEN

400 - 402 BRIXTON ROAD, BRIXTON, LONDON SW9 7AW
TEL: 0171-274 0100, FAX: 0171- 738 4655
(Nearest Tube: Brixton - Victoria line)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொரார்ஜி தேசாய்: ஓர் அரசியல் திருப்பம்

'அவர்கள் வயதுபோன இரு மடையர்கள்.'

யார் அவர்கள்?

ஒருவர் இந்தியப் பிரதமராகவிருந்த மொரார்ஜி தேசாய்; மற்றையவர் இலங்கை ஜனாதிபதியாகவிருந்த ஜே. ஆர். ஜயவர்த்தன.

சொன்னவர் இந்திரா காந்தி. அப்போது அவர் எதிர்க்கட்சியிலிருந்தார்.

மொரார்ஜி தேசாய் பிரதமராகவிருந்த அக் காலத்தில், இந்திய



குடியரசு தினத்தையொட்டி இலங்கையிலிருந்து ஒரு பாராளுமன்ற தூதுக்குழு புதுடில்லி சென்றிருந்தது. காமினி திசாநாயக்க தலைமையில் சென்ற அக் குழுவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வி. தர்மலிங்கமும் ஒருவராகவிருந்தார்.

குடியரசு தினத்தன்று இரவு ராஷ்டிரபதி பவனில் நடைபெற்ற விருந்து வைபவத்தில் காமினி திசாநாயக்கவுக்குத் தெரியாமல் இந்திரா காந்தியுடன் திரு தர்மலிங்கம் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அவரிடம்தான் இந்திரா காந்தி இப்படிக் கூறியிருந்தார்.

**1977** பொதுத் தேர்தலில் இலங்கையில் சிறிமாவோ பண்டாரநாயக்க தோல்வியடைந்து ஜே. ஆர். ஜயவர்த்தன பிரதமரானதும், டில்லி - கொழும்பு உறவிலும் சற்று விரிசல் ஏற்பட்டது. அரசியல் கொள்கைகள் எப்படியோ ஆனால், 'நேரு - பண்டாரநாயக்க குடும்ப உறவு' என்ற ஒன்று எப்போதுமே உரிமைகோரப்படுகிறது.

பின்னர், இந்திரா காந்தியும் தோல்விகண்டு மொரார்ஜி தேசாய் பிரதமரானதும் இலங்கையுடனான அந்த உறவு மீண்டும் நெருக்கமடைந்தது.

இந்தோ - பாகிஸ்தான் உறவில் மொரார்ஜி தேசாயினுடைய ஆட்சிக் காலம் 'சமாதானம் நிறைந்த பொற்காலம்' என்று வர்ணிக்கப்படுகிறது. அதேவேளை, இலங்கைத் தமிழர் தொடர்பிலும் 'அகில இந்திய ரீதியில் இந்தியா ஒன்றுபட்ட ஒரு விடயம்' என்று ஒரு கட்டத்தில் பேசப்பட்ட ஒரு நிலைக்குக் கால்கோள் அமைத்ததும் மொரார்ஜி காலத்தில்தான். அது நிகழ்ந்த விதமும் கூட சுவாரஷ்யமானது.

இலங்கையில் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாகி, இளைஞர்களின் வன்முறை நடவடிக்கைகளும் துரிதமடைந்துகொண்டிருந்த அக்காலத்தில், இந்தியாவில் தமிழகத்தில்கூட இலங்கைத் தமிழர் விவகாரத்தில் அக்கறையோ, அல்லது பிரச்னை பற்றிய அறிவோ அதிகம் இருக்கவில்லை. மாறாக, சென்னை 'இந்து' அக்காலங்களில் இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகளுக்கு எதிரான, தாக்கமான பல ஆசிரிய தலையங்கங்களையும் எழுதிக்கொண்டிருந்தது. அந்த தலையங்கங்களை இலங்கை அரச தகவல் திணைக்களம் நூல் வடிவில் மறுபிரசுரம் செய்து விநியோகித்தது. அப்போது மொரார்ஜி தேசாய் இலங்கைக்கு விஜயம் செய்தார். தமிழர் பிரச்னையில் அவருக்கும் பெரும் அக்கறை இருக்கவில்லை. அவரின் அந்த விஜயத்தை தமிழர் பிரச்னைக்கு எதிரான விதத்தில் பயன்படுத்தவும் இலங்கை அரசு முயற்சித்தது. அப்போது எதிர்க்கட்சித் தலைவராகவிருந்த அ. அமிர்தலிங்கத்தின் அலுவலகம் எவ்வளவோ முயன்றும், எதிர்க்கட்சித் தலைவர் என்ற ரீதியில் சம்பிரதாயபூர்வமான ஒரு சில நிமிடநேர சந்திப்பைத் தவிர வேறு சந்திப்பு எதற்கும் இந்திய அதிகாரிகளுடன் ஏற்பாடு செய்துகொள்ள இயலவில்லை. அந்த அளவுக்கு இலங்கை அரசின் வற்புறுத்தல்தான் அதற்குக் காரணமாகவிருந்தது. ஆனால், பின்னர் அமிர்தலிங்கமும் மொரார்ஜி தேசாயும் மூன்று சுற்றுப் பேச்சுக்களில் ஈடுபட்டார்கள். அமிர்தலிங்கம்தான் அதனைச் சாதித்தார்.

பாராளுமன்றத்தில் மொரார்ஜி தேசாய்க்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் அமிர்தலிங்கமும் பேசினார். அந்தப் பேச்சு மொரார்ஜியின் மனத்தை ஈர்த்தது; மாற்றியது. இந்தியாவுக்கு வரும்படி அழைப்பொன்றையும் அவர் அமிர்தலிங்கத்துக்கு விடுத்தார். அந்த அழைப்பிலான அமிர்தலிங்கத்தின் இந்திய விஜயமே இந்தியாவில்

> **"இலங்கையில் தமிழர்களுடைய பிரச்னை நியாயமான முறையில் தீர்க்கப்படவேண்டும்"**

இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பில் கணிசமான அக்கறையை ஏற்படுத்த காரணமாக இருந்தது. 'இந்து'வும் தனது கொள்கையை முழுமையாக மாற்றிக்கொண்டது.

மொரார்ஜி தேசாய் இலங்கையிலிருந்து புறப்படுமுன்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில், 'தமிழர்களுடைய பிரச்னை நியாயமான முறையில் தீர்க்கப்படவேண்டும்' என்று சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவின் நடவடிக்கைகளில் பின்னர் ஏற்பட்ட குழப்பங்கள் கவலையளிப்பனதான்.

ஆக, 1986 லீப் வருடத்தில், பெப்ரவரி 29ஆம் தேதி குஜராத்தில் வறிய குடும்பம் ஒன்றில் பிறந்த மொரார்ஜி தேசாய், இந்திய சுதந்திரப் போராட்டத்தோடு இணைந்து அறியப்பட்ட மிகப் பிரபலமானவர்களின் வரிசையில் இறுதியானவராக அவருடைய நூறாவது வயதில் அண்மையில் காலமானார். நேருவையடுத்து இந்தியாவின் பிரதமராக வல்லவர் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் நேரு மறைந்து 13 ஆண்டுகளுக்குப் பின்னர் 1977இல், இந்தியாவின் நான்காவது பிரதமராகத்தான் அவர் பதவியேற்க முடிந்தது. அப்போது அவருக்கு வயது 81. உலகில் வயதில் மிக மூத்த பிரதமர் என்பதோடு, காங்கிரஸ் கட்சியைச் சாராத இந்தியாவின் முதலாவது பிரதமராகவும் அவர் பதவியேற்றார்.

நேரு மறைந்ததும் 1964இல் லால் பகதூர் சாஸ்திரியும், சாஸ்

> **இந்திய சுதந்திரப் போராட்டத்தோடு இணைந்து அறியப்பட்ட மிகப் பிரபலமானவர்களின் வரிசையில் இறுதியானவர்**

திரி மறைந்தபோது 1966இல் இந்திரா காந்தியும் பிரதமர்களான போது 1967இல் தலைமைப்பதவிக்காக இந்திரா காந்தியுடன் போட்டியிட்டு தோல்வியடைந்தார். அமைச்சரவையில் துணைப் பிரதமராகவும் நிதி அமைச்சராகவுமிருந்தபோது 1969இல் அமைச்சர் பதவியிலிருந்து அவர் நீக்கப்பட்டதும் அரசாங்கத்திலிருந்து அவர் வெளியேறியதுடன் காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிளவடைந்தது. ஆனாலும், பங்களாதேஷ் யுத்தத்தின் பின்னர் 1971 தேர்தலில் இந்திரா காந்தி மீண்டும் மிகுந்த ஆதரவுடன் பதவிக்கு வந்தார். தேர்தல் முறைகேடுகளில் அலஹாபாத் மேல் நீதிமன்றம் இந்திரா காந்தியைக் குற்றவாளியாகக் கண்டதையடுத்து, அவருக்கும் அரசுக்கும் எதிரான மக்கள் எழுச்சி நடவடிக்கைகளில் 1975இல் ஜெயபிரகாஷ் நாராயணுடன் இணைந்து ஈடுபட்டபோதுதான் இந்திரா காந்தியின் 'பிரசித்தமான' அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டு, மொரார்ஜி உள்பட பல்லாயிரக்கணக்கானோர் சிறையிலிடப்பட்டார்கள். 18 மாத சிறைவாசத்தின் பின்னர், 1977 ஜனவரியில் அவசரகால நிலை நீக்கப்படுவதற்கு சில மணிநேரங்களுக்கு முன்னதாக விடுதலைசெய்யப்பட்டார். அதே ஆண்டு மார்ச்சில் நடைபெற்றதேர்தல் மொரார்ஜி பிரதமரானார்.

நூறு வயதுவரை வாழ்ந்த மொரார்ஜி தேசாயின் சிறுநீர் அருந்தும் வழக்கம் பலர் மத்தியிலும் 'ஒருமாதிரியாக'ப் பேசப்படும் ஒன்றாகவே எப்போதும் இருந்தது. அமெரிக்க தொலைக்காட்சி நிருபர் ஒருவர் இதுபற்றிக் கேட்டபோது, 'உங்கள் நாட்டில் இருதய நோய்க்கு மருந்தாக மற்றையவர்களின் சிறுநீரை நீங்கள் அருந்துகிறீர்கள்; நான் என்னுடைய சிறுநீரையே அருந்துகிறேன்' என்று சற்று கோபமாகவேதான் அவர் பதிலளித்தார். ஆனால், அவரின் இலங்கை விஜயத்தின்போது அவர் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தன்னுடைய ஆரோக்கிய வாழ்வின் இரகசியம் அது என்றார்.

'ஈழநாடு' ஆசிரியர் கே. பி. ஹரனும் அந்தப் பத்திரிகையளர் மாநாட்டுக்கு வந்திருந்தார். பலரும் அவரின் இந்த சிறுநீர் சிகிச்சை குறித்து கேட்க ஆவலாக இருந்தபோதும் ஹரன்தான் அதனைப் பக்குவமாகக் கேட்டார். பக்குவமாகவே பதிலளித்தார் மொரார்ஜி.

ஆக, திரு தர்மலிங்கத்திடம் இந்திரா காந்தி கூறியது 'அரசியல்'. மக்கள் செல்வாக்கைப் பெற்ற ஒரு பெரும் தலைவராக மொரார்ஜி தேசாய் இருக்கவில்லை; ஆனால், மக்களால் பெரிதும் மதிக்கப்பட்ட ஒருவராகவே அவர் விளங்கினார். ❑

– மாலி

The travel agency which makes sure that their passengers are really taken care of

Skylink



NON-STOP FLIGHTS TO COLOMBO ON EVERY SATURDAY

SPECIAL BAGGAGE ALLOWANCE OF 40 KILOS TO COLOMBO AND SOUTH INDIA

PLEASE CONTACT: TRISHA, SHEELA OR SIVA

Skylink

10-16 Rathbone Street

TEL: 0171-396 9944 OR 0171-396 9922

London W1 P1 AH

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழக்காகிப் போன வாழ்க்கை

காதைத் திருகினாலும் கக்கத்தைக் கிள்ளினாலும்முனகலோ முறுவலோ இல்லாமல் நாற்காலியில் நாள்களைக் கடத்தும் பிரதமர் 'நரசும்மா ராவ்'. யாரும் எதையும் செய்வதற்கு முன்னால் அவருக்கு அந்த அதிகாரம் இல்லை என்று துள்ளிக் குதித்து அநாகரிக வார்த்தைகளை அள்ளி வீசும் தமிழக முதல்வர் ஜெயலலிதா. காலம் கனிவதற்கு முன்பு தேவையில்லாத வார்த்தைகளை உதிர்த்துவிட்ட காரணத்தினால், செயல்பட்ட பொழுது அவதூறுக்கு உள்ளாகும் ஆளுநர் சென்னா ரெட்டி. ஆக்குவதைக் காட்டிலும் அழிப்பதில் திறமைசாலியான விடாக்கண்டர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி. அலுவலகங்களுக்கு ஏதோ ஒரு நேரம் வந்துசென்றால் போதும் என்று காலம் கடத்தும் அதிகார வர்க்கம். ஆட்சி யாளர்களுக்கு மட்டுமே எடு பிடிகளாகிப் போய்விட்ட காவல் துறையினர். அழுகிய முட்டைகள், கற்கள், கைத்தடிகள், கறுப்புக் கொடிகள், 'ஒழிக' முழக்கத்துக்கே பழகிப் போன தொண்டர்களின் திருத் தொண்டை; மர்மக் கதைகளைப் போலச் செய்திகளை வெளியிடும் பத்திரிகைகள். இவை எல்லாவற்றையும் மீறி மக்கள் தமிழ் நாட்டில் ஒழுங்காகச் சாப்பிடுகிறார்களோ இல்லையோ, சீராக மூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். காரணம், கடவுள் கொடுத்திருக்கும் காற்று மண்டலத்தை இவர்கள் இன்னமும் வேலி கட்டி, கூறு போட்டு, குத்தகைக்கு விட்டுவிடவில்லை. மற்றபடி, கோவில் வாசலில் காலணிகளைக் கழற்றிவிட்டுச் செல்லவும், பொதுக் கழிப்பறைகளுக்குச் செல்லக் கட்டணம் செலுத்துவது முதல் கோட்டையில் கோப் புகளைத் துரத்துவது வரை எல்லா இடங்களிலும் அரசியல் மற்றும் அதன் உடன் பிறப்பாகிய லஞ்சம். இது தான் இன்றைய தமிழ்நாடு. அரசுக்குச் சொந்தமான நிலத் தினைத் தான் பங்குதாரராக உள்ள பதிப் பகத்துக்கு குறைந்த விலையில் கிரயம் செய்தது; வெளிநாட்டிலிருந்து நிலக்கரி இறக்குமதி செய்ததில் கமிஷன் என்ற சில புகார்களின் அடிப்படையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா மீது வழக்குத் தொடர சுப் பிரமணியம் சுவாமி ஆளுநர் சென்னா ரெட்டியின் அனுமதியைப் பெற்றிருக் கிறார். அனுமதி வழங்க ஆளுநருக்கு உரிமை இல்லை என்று ஜெயலலிதா உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். காழ்ப்புணர்வு காரணமாக அவர் அனுமதி அளித்திருக்கிறார் என்ற வாதம் உயர் நீதிமன்றத்தில் எடுபடவில்லை. எதிர் வழக்கு தள்ளுபடி யானது. அம்மையார் உச்ச நீதிமன்றம் செல்லவிருக்கிறார். மனு தாரர் என்ற முறையில் தன் தரப்பைச் சொல்வதுடன் நிறுத்திக்கொள்ளாமல் 'சட்டம் இப்படி இருக்கவேண்டும்' என்று அவர் 'வியாக்கியானம்' அளித்திருக்க வேண்டாம் என்றும் நீதிபதிகள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அது பற்றியெல்லாம் ஜெயலலிதா அலட்டிக்கொள்ளப் போவதில்லை. 'மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்டுள்ள தேவதை நான்; அரசியல் நிர்ணயச் சட்டப் பிசாசுகள் ஆளுநர், ஜனாதிபதி உள்பட யாரும் என்னை எதுவும் செய்யமுடியாது' என்று அவர் சொன்னால், அது வாதம் அல்ல, விதண்டா வாதம் என்று எடுத்துச் சொல்லும் துணிவு அம்மையாரின் வழக்கறிஞர்களுக்கு இல்லை. இயற்றப்பட்டுள்ள சட்டங்களின் வட்டத்தினுள்தான் நிற்க வேண்டும் என்று அரசியல் சாசனம் சொன்னால் ஜெயலலிதா சொல்கிறார்: 'நான் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டவள்' என்று.

இப்படிப்பட்ட நபரை ஊழல் குற்றச் சாட்டுகளுக்காக கூண்டில் ஏற்ற படாத பாடு படுகிறார் சுப்பிரமணியம் சுவாமி. அற்பமான, பொருத்தமில்லாத காரணங்களுக்காக அவர்மீது வழக்குத் தொடர மறைமுகமாக முயன்றார் ஜெயலலிதா. காவல்துறை உயர் அதிகாரிகள் தாம்



**யாரும் எதையும் செய்வதற்கு முன்னால் அவருக்கு அந்த அதிகாரம் இல்லை என்று துள்ளிக் குதித்து அநாகரிக வார்த்தைகளை அள்ளி வீசும் தமிழக முதல்வர் ஜெயலலிதா.**



**காலம் கனிவதற்கு முன்பு தேவையில்லாத வார்த்தைகளை உதிர்த்துவிட்ட காரணத்தினால், செயல்பட்ட பொழுது அவதூறுக்கு உள்ளாகும் ஆளுநர் சென்னா ரெட்டி.**



**ஆக்குவதைக் காட்டிலும் அழிப்பதில் திறமைசாலியான விடாக்கண்டர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிசில்
அனைத்து இலங்கை, இந்திய பொருள்களுக்கு

# காயத்திரி




# GAYATHIRI

210 RUE DU FG. SAINT DENIS,
75010 PARIS
TEL: 42 09 22 43
Metro: La Chapelle Ou Gare Du Nord

லீலா உற்பத்திப் பொருள்களுக்கான
மொத்த இறக்குமதியாளர்கள்,
விற்பனையாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கி உடுப்பு போட்டுக்கொண்டிருப்பதே ஜெயலலிதாவுக்குப் பணிசெய்து கிடப்பதற்கே என்ற கொத்தடிமைத்தனம் மிகுந்து, போகுமிடமெல்லாம் சுவாமியைத் துரத்தினார்கள். ஏறிய விமானத்திலிருந்து இறக்க முயன்றார்கள். கல்லடி, சொல்லடி என்று சுவாமி எதிர்க்கப்பட்ட பொழுதெல்லாம் ஆளும் கட்சியின் விசுவாசிகளாகக் காவல் துறையினர் கண்களை மூடிக்கொண்டு கைகளைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். வேட்டி, சேலையைத் தூக்கிக்கொண்டு குதித்தாடுவது தமக்கு மானம்போகும் சமாச்சாரம் என்று அ.இ.அ.தி.மு.க. தொண்டர்கள் நினைக்கவில்லை. சுவாமியை அவமானப்படுத்துவதாக நினைத்துச் செயல்படுகிறார்கள்.

இதற்கிடையே ஜெயலலிதா பதவி விலகவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் கூப்பாடு போடுகிறார்கள். சுவாமியைத் தொடர்ந்து தி.மு.க. தலைவர் கருணாநிதி, ம.தி.மு.க. தலைவர் ராமதாஸ் என்று வரிசையாக ஆளுநரிடம் முதல்வர் பற்றி புகார்ப் பட்டியல் கொடுத்து வழக்குத் தொடர அனுமதி கேட்டிருக்கிறார்கள். தொடர்ந்து பலர் இப்படிச் செய்தால் புகார், வழக்கு அனுமதி என்பதே கேலிக்கூத்தாகிவிடும். எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் சுவாமிக்குத் துணையாகவிருந்தால் போதும், ஜெயலலிதாவை வீழ்த்திவிடலாம். எதிர்க்கட்சிகள் என்பவை சாலை ஓரங்களில் மட்டுமே. சட்ட சபையில் அவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அந்த ஒருசிலரும் கொட்டாவிவிட வாயைத் திறந்தால் போதும் - கொட்டாவி, குறட்டை ஒலியை எல்லாம் சபைக்குறிப்பிலிருந்து நீக்கிவிட்டு, சம்பந்தப்பட்டவர்களை குண்டுக்கட்டாகத் தூக்கி வெளியே வீசி வருகிறார் சாபநாயகர் மன்னிக்கவும் சபாநாயகர் முத்தய்யா. அதுமட்டு மல்ல, ஆளுநரைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று மாநில சட்ட சபை ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக் கிறது. அதை ஜனாதிபதிக்கும் அனுப்பியிருக்கிறது. பாவம் ஜனாதிபதி, இது விஷயத்தில் அவர் ஜெயலலிதா மனம் கோணாமல் முடிவு எடுக்கவில்லை என்றால் நாட்டுக்கு ஜனாதிபதி தேவையில்லை என்று சட்டசபை தீர்மானம் நிறைவேற்றி, அதை ஐக்கியநாடுகள் சபைக்கு அனுப்பிவைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இவையெல்லாம் வெளியே தெரிய வரும் கூத்துக்கள். ஆனால், உள்ளுக்குள்ளே பல அமைச்சர்களும் அதிகாரிகளும் பயந்து நடுங்கிக்கொண்டிருக்கிறார்கள். தனி நீதிமன்றத்தில் ஜெயலலிதாமீது வழக்கு தொடரப்பட்டால் மந்திரிகளில் பலர் 'அப்ரூவர்கள்' ஆக மாறலாம். அதிகாரிகளில் சிலர் குற்றச்சாட்டுகளுக்குப் போதிய ஆதாரங்களைத்தர முன்வரலாம். முன்னாள் நடிகையான முதல்வர் அந்தச் சமயத்தில் எப்படி நாடகமாடப் போகிறாரோ தெரியாது. ஏற்கனவே சென்னா ரெட்டி மீது அவதூறு கிளப்பி இருக்கிறார். அதாவது, இரண்டு வருடங்களுக்கு முன்பு சென்னா ரெட்டி தன்னிடம் தவறாக நடந்துகொள்ள முயன்றார் என்று பாதுகாப்பான வார்த்தைகளில் சொல்லியிருக்கிறார். அதாவது, 'கவர்ணர் என்னைக்கையைப் பிடித்து இழுத்தார்' என்பதை அதே வார்த்தைகளில் அல்லாமல் வேறு வார்த்தைகளில் சொல்லியிருக்கிறார். ஓர் அமைச்சர் உள்பட அம்மையாரின் அடிவருடிகள் சென்னா ரெட்டியை 'சப்பாணி, கிண்டியின் நொண்டி' என்று பொதுக் கூட்டங்களில் வெகு நாகரிகமாக விமரிசித்திருக்கிறார்கள். இதுதான் இன்று தமிழ்நாட்டின் அரசியல் நாகரிகம்.

●●●

**காக்கி உடுப்பு போட்டுக் கொண்டிருப் பதே ஜெயலலிதாவுக்குப் பணிசெய்து கிடப்பதற்கே என்ற கொத்தடிமைத்தனம்**

●●●

**இரண்டு வருடங்களுக்கு முன்பு சென்னா ரெட்டி தன்னிடம் தவ றாக நடந்துகொள்ள முயன்றார் என்று பாதுகாப்பான வார்த்தைகளில் சொல் லியிருக்கிறார்.**

●●●

**இவ்வளவு காலமும் எதிர்க்கட்சிகளின் பலவீனத்தில் ஆட்சியில் தொடர்ந்து வந்திருக்கும் நரசிம்ம ராவ், சொந்தக் கட்சிக்காரர்களின் எதிர்ப்பினால் பதவிவிலக நேரிடலாம்.**

●●●

**மக்களின் தகுதிகளுக்கேற்பவே தலைவர்கள் கிடைப்பார்கள்." எனவே, அரசியல்வாதிகளை நொந்து கொள்வதில் என்ன பயன்?**

தெற்கே இவ்வளவு நடந்துகொண்டிருக்கிறது. டெல்லியில் நரசிம்ம ராவ் கொஞ்சமும் அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. அதற்காக அவர் தமிழ்நாடு பற்றிக் கவலைப்படவில்லை என்று சொல்லிவிட முடியாது. அவருக்கு அதற்கெல்லாம் நேரமில்லை. அவரது நாற்காலியே ஆடிக்கொண்டிருக்கிறது. ஆட்டுபவர்கள் சொந்தக் கட்சிக்காரர்கள். இவ்வளவு காலமும் எதிர்க்கட்சிகளின் பலவீனத்தில் ஆட்சியில் தொடர்ந்து வந்திருக்கும் நரசிம்ம ராவ், சொந்தக் கட்சிக்காரர்களின் எதிர்ப்பினால் பதவிவிலக நேரிடலாம். அப்படிப்பட்ட முயற்சிகளுக்கு ஜெயலலிதா மறைமுகமாக ஆக்கமும் ஊக்கமும் அளித்துவருகிறார் என்று நம்புவதற்கு நிறையவே இடமிருக்கிறது. இதே விஷயத்தில் சில தேசியக் கட்சிகள் தம் பிழைப்புக்காக ஜெயலலிதாவுக்குத் தமிழகத்திலும் மாநிலம் தாண்டியும் மறைமுக ஆதரவை அளித்துவருகின்றன. அவரது அ.இ.அ.தி.மு.க. தேசிய முன்னணியில் சேர்த்துக்கொள்ளப்படலாம். அதை தி.மு.க. எதிர்க்கிறது. அந்த எதிர்ப்பு எடுபடாமல் போகலாம். அதற்காக தி.மு.க. வருத்தப்படாமலும் இருக்கலாம். புதிய கூட்டணிகள் உருவாகலாம். அந்த அளவுக்கு காலச் சக்கரம் இங்கு தலைகீழாகச் சுற்றுகிறது. எந்த தி.மு.க. ஆட்சியை விடுதலைப் புலிகளுடனான அதீத, தேசத் துரோக உறவு கொண்டவர்கள் என்று பதவி நீக்கம் செய்யப் பாடுபட்டாரோ அதே தி.மு.க.வுடன் இன்று புது உறவு காண்கிறார் சுப்பிரமணியம் சுவாமி. எந்த அ.இ.அ.தி.மு.க. வைப் பதவியில் ஏற்ற உறுதுணையாக இருந்தாரோ அந்த ஆட்சியை அகற்ற அஸ்திரத்தைக் கையில் எடுத்துக்கொண்டுவிட்டார். புலிகள் - ஜெயலலிதா மறைமுக உறவு பற்றிப் புதிய தகவல்கள் வெளிப்பட்டாலும் வியப்பதற்கில்லை. புலிகளோ, எலிகளோ, தமிழ்நாட்டின் தலைவிதியைத் தமிழர்கள் நிர்ணயிப்பதில்லை என்றாகிவிட்ட பிறகு, யார் தலையில் யார் கைவைத்தால் என்ன?

தமது விதி, வேதனை, வேடிக்கை எல்லாமுமே அரசியல், கீழ்த்தரமான அரசியல் என்று நொந்துபோய் நாள்களை நகர்த்திக்கொண்டிருக்கிறார்கள் கனக விஜயர் முடித்தலை நெறித்த மறத்தமிழர்களின் மானமிக்க வாரிசுகள். அதே தமிழ் மக்கள் நினைவில் கொள்ளவேண்டிய ஓர் அரசியல் சாத்திர அமர வாக்கியம் எது தெரியுமா? 'மக்களின் தகுதிகளுக்கேற்பவே தலைவர்கள் கிடைப்பார்கள்.'

எனவே, அரசியல்வாதிகளை நொந்துகொள்வதில் என்ன பயன்? ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்திலிருந்து
சுப்பிரமணியன் ஸ்ரீகுமாரன்

# போரில் குளிப்பினும் சோராத யாழ்ப்பாணம்

## அடிமாற்றப்பட்ட பொருளாதார வாழ்வு

**1990** ஜூனில் 'ஈழ யுத்தம் - 2' ஆரம்பமானதைத் தொடர்ந்து, யாழ்ப்பாணச் சமூக வாழ்வு அடி மாற்றப்பட்டு, புதிய பரிமாணங்களை எடுக்க ஆரம்பித்தது. யாழ்ப்பாண பொருளாதார வாழ்வில் வேளாண்மையும், மீன்பிடியும் பிரதான தொழில்களாக இருந்தன. ஏனைய தொழில் சார்ந்தவர்களோடு, அரச, கூட்டுறவுத் துறை ஊழியர்களும் பெருமளவினராக இருந்தார்கள். முக்கியமாக, காங்கேசன்துறை சீமெந்து ஆலை ஆயிரக்கணக்கானவர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தொழில் வாய்ப்பை வழங்கி வந்தது.

ஈழ யுத்தம் 2 முடிவடைந்தபோது, இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கரையோரப் பிரதேசங்களும், வலிகாமம் வடக்கு பிரதேசத்தின் வேளாண்மை நிலங்களும் அகப்பட்டன. முக்கியமாக, மயிலிட்டி, காங்கேசன்துறை, பலாலி, கீரிமலை, மாதகல் என நீண்ட கடலோரப் பகுதிகளும், கொல்லங்கலட்டி, பன்னாலை,தெல்லிப்பழை, வசாவிளான், ஆதி மயிலிட்டி, பலாலி போன்ற வேளாண்மை நிலங்கள் கொண்ட பிரதேசங்களும் இராணுவத்தின் பிடிக்குள் சிக்கின. பின்னர், வடமராட்சி கிழக்கு பிர தேசமும், தீவுப் பகுதியும் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் உள்பட்டன.


இவ்வாறு இராணுவம் கைப்பற்றிய பகுதிகளிலிருந்து வெளியேறிய மீனவர்கள் பலர் தமது தொழில் உபகரணங்களை இழந்து வந்திருந்தனர். வேறு சிலர் கடற் தடைச்சட்டத்தின் மத்தியில் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு, கடற்படையினரின் தாக்குதல்களில் தமது உடைமைகளை இழந்திருந்தனர். உயிர்களைக்கூட அவர்களில் சிலர் தமது 'வயிற்றுக்காக' இழந்தனர்.

தமது சொந்த இடங்களில் கமத் தொழில் செய்தவர்கள் இடம் பெயர்ந்து உறவினர், நண்பர்களது வீடுகளிலும், முகாம்களிலும் தங்கியிருந்தனர். அவர்களில் பலருக்கு கமச் செய்கைக்கு நிலம் கிடைக்கவில்லை. கிடைத்தவர்களும் மண்ணெய் விலையேற்றம், சந்தைப்படுத்த இயலாமை போன்ற காரணங்களால் நஷ்டமடைந்தனர்.

காங்கேசன்துறை சீமெந்து ஆலை இயங்காமையையடுத்து பலர் வேலையிழந்தபோது, வேறு பலருக்கு அரைவாசி சம்பளமே கிடைத்தது. சீமெந்து இல்லாததால் கட்டடத் தொழிலாளர் பாதிப்படைந்தனர். அலுமீனியம், இரும்புப் பொருள்கள், கடதாசி எல்லாமே தடை செய்யப்பட்டதால் எண்ணற்ற தொழில்கள் கைவிடப்பட்டன. பல தொழிலகங்களுக்கு மூடுவிழா நிகழ்ந்தது.



இந்தப் பகைப்புலத்திற்றான் யாழ்ப்பாணத்தில் புதிதாக தொழில்கள் முளைத்தன. நிவாரண 'அம்மாப் பச்சை' அரிசியுடன் காலந்தள்ள முடியாத குடும்பங்களுக்கு புதிதாகத் தொழில்கள் தேவைப்பட்டன. எத் தொழிலைச் செய்வதானாலும் யாழ் குடாநாட்டுக்குள்ளேயே செய்யவேண்டும். யாழ்ப்பாணத்தைச் சுற்றிலும் இராணுவ வேலி. அதற்குள்ளாக, கடற்புலிகளின் பாதுகாப்புடன் கிளாலி பாதை மட்டுமே ஏனைய பகுதிகளுடன் குடாநாட்டை இணைக்கும் ஒரே வழி.



படங்கள்: தி. தவபாலன்

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் தோற்றம் பெற்ற புதிய தொழில்களுள் தலையாயது மிதிவண்டி விறகு வியாபாரம். அதிகாலை இரண்டு மணிக்கு யாழ்ப்பாண நகரை அண்மித்த பகுதிகளிலிருந்து மிதி வண்டிகள் புறப்படும். கடுமையான காற்றையும், குளிர், மழையையும் எதிர்த்து ஐம்பது மைல்கள் அவர்கள் பயணப்படுவார்கள். சைக்கிளின் பின் 'கரியரி'ல் நீண்ட நான்கு தடிகள் உயரமாக நிமிர்த்திக் கட்டப்பட்டிருக்கும். ஒரு கோடரியும், கத்தியும், குடி நீர்ப் போத்தலும் அவர்களுடன் இருக்கும். ஐம்பது மைல் பயணம் வடமராட்சி கிழக்கிலோ அல்லது தென்மராட்சிப் பக்கமோ நிற்கும். அங்குள்ள பற்றைகளை வெட்டுவார்கள். இக் கிரி முள் தைக்க, புல்லாந்தி உடலைக் கிழிக்க பற்றைகளுள் நுழைந்து அவர்கள் விறகுகளை வெட்டி எடுத்துச் சேர்ப்பார்கள். கண்டல், பொற்பத்தை, மஞ்சமுன்னா, புளி எல்லாமே விறகாகும். வேறு சிலர் பனை, தென்னை மட்டைகள் போன்றவற்றையும் வாங்கி வருவார்கள்.

இப்படி, அதிகாலையில் புறப்பட்டவர்கள் விறகுகளை எடுத்துவந்து, அவற்றை விற்று, பின்னர் வீடு திரும்ப சிலசமயங்களில் இரவு ஒன்பது மணி ஆகும். தென்மராட்சிப் பகுதியில் பத்து சதம் விற்ற தென்னம் மட்டைகள் இப்பொழுது இரண்டு, மூன்று ரூபா வரை விற்கிறது. அவை, யாழ்ப்பாண நகரத்தில் நான்கு, ஐந்து ரூபா என்று விலை போகின்றன.

யாழ்ப்பாண வீதிகளில் அநேகம் விறகு வியாபாரிகளைத் தான் தரிசிக்கமுடியும். ஒரு 'காலத்தின் குறியீடாக' இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளங் கொண்டு நிற்கிறார்கள். விறகு மட்டுமல்ல, தேங்காய் வியாபாரம் போன்றனவும் மிதி வண்டிகளிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. புத்தூரைச் சேர்ந்த 12 வயதுச் சிறுவனொருவன் ஒரு விறகு வியாபாரி. தனது குடும்ப வறுமையைப் போக்குவதற்காக விறகு வியாபாரத்தில் ஈடுபடுகிறான்.

'எங்கட வாழ்க்கையை இண்டைக்கு இதுதான் நிச்சயிக்குது. நாளைக்கு உலையேத்த வேணுமெண்டா இண்டைக்கு யாவாரம் நடக்கவேணும்' என்கிறார் பலாலியிலிருந்து இடம் பெயர்ந்து வந்த விறகு வியாபாரி சின்னராசா.

'நான் அகதியா வந்தபிறகு அளவெட்டியில தோட்டஞ் செய்தன்; நட்டந்தான் வந்தது. அதை விட்டிட்டு இப்ப இதைச் செய்யிறன், இதாலை நட்டமெண்டுமில்லை, லாபமெண்டு மில்லை; ஏதோ, வயித்துப்பாட்டைப் பார்க்க உழைக்கத்தானே வேணும்' என்று பெருமூச்செறிந்தார் மயிலிட்டி வாசியான முருகையா என்ற தேங்காய் வியாபாரி.

■ நிவாரண 'அம்மாப் பச்சை' அரிசியு டன் காலந்தள்ள முடியாத குடும்பங்களுக்கு புதிதாகத் தொழில்கள் தேவைப்பட்டன.

■ யாழ்ப்பாணத்தில் தோற்றம் பெற்ற புதிய தொழில்களுள் தலையாயது மிதிவண்டி விறகு வியாபாரம். அதிகாலை இரண்டு மணிக்கு யாழ்ப்பாண நகரை அண்மித்த பகுதிகளிலிருந்து மிதி வண்டிகள் புறப்படும். கடுமையான காற்றையும், குளிர், மழையையும் எதிர்த்து ஐம்பது மைல்கள் அவர்கள் பயணப்படுவார்கள்.

■ பற்றரி, எரி பொருள் என தடைகள் பல வந்தபோது, அத் தடைகளை உடைத்துப் புதிய கண்டுபிடிப்புகள் பல தோற்றம் பெற்றன. அதி லொன்று, ஜாம் போத்தல் விளக்கு.

தொழில்கள் இப்படி புதிது புதிதாய் மாறியது போல, யாழ்ப்பாணச் சமூகச் செயல்பாடுகளும் மாறித்தான்விட்டன. மின் மோட்டார்கள் ஆக்கிரமிக்க ஒதுங்கிக் கிடந்த நீர் இறைக்கும் இயந்திரங்கள், சூத்திரங்கள், பட்டை துலா எல்லாம் புதிய வேகமெடுத்துள்ளன. ஒரு காலத்தில் செம்மண் தெருக்களில் புழுதி கிளப் பிக்கொண்டு ஓடி, பின் அச்சாணி உடைந்து கிடந்த மாட்டு வண்டிகள் அலங்காரப் பதுமைகளாகி, வீதிகளில் உலா வருகின்றன. சைக்கிள் ரிக்ஷாக்களும்கூட முக்கிய இடத்தை வகிக்கத் தலைப்பட்டுள்ளன.

'தேவைதான் கண்டுபிடிப்புகளின் அன்னை.' பற்றரி, எரி பொருள் என தடைகள் பல வந்தபோது, அத் தடைகளை உடைத்துப் புதிய கண்டுபிடிப்புகள் பல தோற்றம் பெற்றன. அதிலொன்று, ஜாம் போத்தல் விளக்கு. இதை, 'காற்றையும் வென்று போத்தலுள் நின்று கண் சிமிட்டுகிறது...' என்று கவிஞர் ஒருவர் குறிப்பிட்டார். இச் சிக்கனவிளக்கு, மண்ணெய் விலை வானளவு உயர்ந்திருந்தபோது மக்களுக்குக் கைகொடுத்தது. அதே போன்று, பற்றரி தடையையடுத்து, காற்றாலை, சைக்கிள் சக்கரம் மூலம் சிறிய டைனமோக்களை இயங்கச் செய்து, ஆடலோட்ட மின்னை நேரோட்டமாக்கி வானொலி கேட்டார்கள். விறகுத் தட்டுப் பாட்டை கருத்தில் கொண்டு இரட்டைச் சூட்டடுப்பு போன்ற சிக்கன அடுப்புகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சீமெந் துக்கு மாற்றீடாக உள்ளூரில் சீமெந்துக் கலவை தயாரிக் கப்படு கிறது.

போர் யாழ்ப்பாணத்தில் விளைத்த அநர்த்தங்கள் அநந்தம். ஆயினும், அப் போரில்அது சோர்ந்து போய்விடவில்லை. தன்னுடைய இருப்பைப்பேண அது பல வழிகளிலும் தொடர்ந்து இயங்கிக்கொண்டேஇருக்கிறது. ❑


# யாழ்ப்பாணத்துச் சிறுவர்கள் படைத்த அற்புதம்

# மௌனத்தில் வடிந்த கண்ணீர்

சௌஜனா

ஒவ்வொரு கலாச்சாரத்திலும் குழந்தைகள்தான் அதி உன்னத சொத்துக்கள். முழுச் சமூகத்தினதும் அக்கறையும் ஈடுபாடும் இவ்வரும்பெரும் சொத்துக்களை நோக்கிச் செலுத்தப்படவேண்டும். அருட்திரு என். எம். சவேரி அடிகளாரின் திருமறைக் கலாமன்றத்தைச் சேர்ந்த 12 வயதுக்குட்பட்ட 14 சிறுவர்கள் கொழும்பு, ஜோன் டி சில்வா மண்டபத்தில் மேடையேற்றிய சிறுவர் நாடகத்தில் இழையோடும் பின்னணிக் கருத்து இது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்தடைய இக் குழந்தைகள் 36 மணி நேர பயணத்தை மேற்கொண்டிருந்தனர். யுத்தத்தால் சின்னாபின்னப்படுத்தப்பட்டிருக்கும் யாழ்ப்பாண வாழ்க்கையே இந் நாடகத்தின் களம். இந்த அரங்க தயாரிப்பு, வார்த்தைகளே இல்லாத ஒரு நாடகமாகும்; உண்மைதான். செயற் பாடுகள் வார்த்தைகளைவிட உரத்துப் பேசுகின்றன. ஒரு வார்த் தையேனும் உதிர்க்காமல் ஷெல் தாக்குதல்களாலும் தரை, கடல், வான் வழியாகவும் தொடரும் இராணுவத் தாக்குதலில் ஒவ்வொரு குழந்தையும் எவ்வாறு பாதிப்படைகிறதென்பதை மிகவும் அற்புதமாகத் தங்களின் அசைவியக்கத்தில், நடிப்பில் வெளிப்படுத்தி, சபையோரை இறுதிவரை இறுகப்பிணித்த இச் சிறுவர்களின் நடிப்பாற்றல் உண்மையிலேயே மனதைத் தொடுவதாக இருந்தது. பார்வையாளர்களில் ஒருவர் சொன்னார்: 'கொழும்பில் இதனை மேடையேற்றுவதன்மூலம் இக் குழந்தைகள் சமாதானத்தினதும் புரிந்துணர்வினதும் இணைப்புப் பாலமாக விளங்கு கிறார்கள்.'



முதலாவது காட்சியில் குழந்தைகள் அனைவரும் குதூகலித்து விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். திடீரென்று மேடையை இருள் கவ்விக் கொள்கிறது. மின்னல்போல ஒரு வெளிச்சம்; பயங்கர இரைச்சல். மீண்டும் மேடையில் ஒளி மெல்லிதாக படர்கையில், வீழ்ந்துகிடந்த குழந்தைகள் ஒவ்வொருவராக எழுகிறார்கள். ஆனால், கண்ணிழந்தவர்களாக, கையிழந்தவர்களாக, காலிழந்தவர்களாக, இப்படி அவர்கள் இப்போது அங்கவீனர்களாக்கப்பட்டுவிட்டார்கள்.. தமக்கு நேர்ந்துவிட்ட கதியை எண்ணி அவர்கள் அழுகிறார்கள். அவர்களிடையே ஒரு சிறுவன், அந்த உக்கிரத்தைப் புரிந்துகொள்ளமுடியாமல் சிரித்தும் முகத்தைச் சுழித்தும் நின்றுகொண்டிருக்கிறான். நடந்ததே புரியாமல் அவனின் மூளை பாதிப்படைந்து போயிற்று. தங்கள் உணர்வுகளை, மன எழுச்சிகளை அழகாக வெளிப்படுத்தினார்கள் அச்சிறுவர்கள். அவர்களின் வேதனை நன்கே புரிந்தது. அது பார்வையாளர் கண்களில் நீர்த் திவலைகளாக வெளிப்பட்டன. ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை ஆக்கிரமிக்கும் ஆங்கிலம்

## அடுத்த நூற்றாண்டில் 600 மொழிகள் அருகிவிடும்

பொன். பாலசுந்தரம்

ஆங்கிலம் அடுத்த நூற்றாண்டில் உலக மொழியாகிவிடும் என்று வேல்ஸ் இளவரசர் சாள்ஸ் தெரிவித்திருக்கிறார். உலகளாவிய பிரிட்டிஷ் நூலக சேவையின் '2000ஆம் ஆண்டில் ஆங்கிலம்' என்ற திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் அவர் இப்படிக் கூறி யிருப்பது உலக மக்களின் சிந்தனையை ஈர்ப்பதாகும்.


ஆங்கிலத்தின் உலகரீதியான வளர்ச்சிக்காக பிரிட்டிஷ் நூலக சேவை 50 கோடி பவுண்களை ஒதுக்கியிருக்கிறது. வர்த்தகம், பொதுசனத் தொடர்பு, வேலைவாய்ப்பு, சர்வதேச நட்பு, விண்வெளி ஆய்வு, விஞ்ஞான அபிவிருத்திபோன்ற இன்னும் பல்வேறு துறைகளிலும் ஆங்கிலஅறிவு அவசியம் என்பது இன்று பெரும்பாலான உலக நாடுகளின் நம்பிக்கையாக இருக்கிறது. இதுவும் இந்த ஆங்கில உலகாதிக்கத்துக்கு உந்துகோலாகிறது. உலகின் அஞ்சல் போக்குவரத்தை அவதானிக்கையில் ஐந்தில் மூன்றுபங்கு மக்கள் ஆங்கிலத்தையே உபயோகிக்கின்றனர். கம்பியூட்டர் பாவனையில் ஐந்தில் நான்கு பங்கு ஆங்கில மயமாக இருக்கிறது.

ஆங்கிலம், அது வேர்கொள்ளும் இடங்களின் மண்வாசனைக்குச் சொந்தமான கலாச்சார பாரம்பரியங்களில் ஆதிக்கம் செலுத்தாமல் ஒதுங்கிக்கொண்டால், அடுத்த நூற்றாண்டு ஓர் ஆங்கில மயமான யுகமாக ஆகிவிடலாமென்று மொழி வல்லுநர்கள் கருதுகிறார்கள்.

உலகில், பெரும் அரசியல் சாம்ராஜ்யமாக விளங்கியதும், அந்தஸ்து பெற்றிருந்ததும் பிரிட்டன்தான். சரித்திர சுவடிகளைப் புரட்டுகிறபோது, 1497ஆம் ஆண்டில் ஜோன் காபொற் என்பவர் அந்நிய மண்ணாசை கொண்ட பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு அஸ்திவாரமிட்டார். இது படிப்படியாக 18, 19ஆம் நூற்றாண்டுகளில் மலர்ச்சி கண்டது. அதன் பலாபலன்கள்தாம் இந்திய உபகண்டமும், ஆபிரிக்கக் கண்டமும் பிரித்தானிய முடியாட்சிக்கு அடிபணிந்தமை. 1897ஆம்ஆண்டு, பிரிட்டனின் மகாராணி விக்டோரியா தங்கவிழாவைக் கொண்டாடியபோது, இந்த சாம்ராஜ்ய ஆசைக்கும் அது பூர்த்தி விழாவாக அமைந்தது.

உலகின் மண்வளம் மட்டுமல்ல, பிரமாண்டமான மனித வளமும் பிரித்தானிய ஆட்சியுள் அப்போது வந்தது. அப்போதைய 370 மில்லியன் மக்கள் தொகையில் 50 மில்லியன்தான் வெள்ளையின மக்கள். மிகச் சிறுபான்மையினரான அவர்கள் மிகப் பெரும்பான்மையோர்மீது சவாரிசெய்த காலம் தான் அது. 'விக்டோரியா ராணியின் மகுடத்தில்தான் உலகமே தங்கியிருக்கிறது' என்று வெள்ளைக்காரர்கள் மார்தட்டிய காலம். இந்தியாவும், ஆபிரிக்காவும் அவரது 'முடியை அலங்கரித்த வைரங்கள்' என்று அவர்கள் கூறிப் பெருமைப்பட்டார்கள்.

### என்ன பேசுகிறார்கள்




Source: Cambridge Encyclopedia of Language

பிரிட்டனின் ஏவுகணைகளான அந்தக்கால வைஸ்ராய்களும், ஆராய்ச்சியாளர்களும், புத்திஜீவிகளும் - இவர்களுள் முக்கியமாக லிவிங்ஸ்டன், பேர்டன், சிசில் றோட்ஸ் போன்றவர்கள் நாடுபிடிப்பதுடன் மட்டும் திருப்திப்பட்டுவிடாது தம் மொழியையும் அறிமுகப்படுத்தினார்கள். ஆங்கில மொழியைக் கற்றுத்தானாகவேண்டும் என்ற ஒரு வலுக்கட்டாய நிலை, வற்புறுத்தல் எதுவுமில்லாமலேயே ஏற்படத் தொடங்கியது. சிறிய, பெரிய நாடுகள் என்ற பேதமின்றி, நிலைகொண்ட நாடுகளெல்லாவற்றிலும் ஆங்கில மொழி ஆதிக்கத் துக்கு வித்திடப்பட்டது. அது இன்று விருட்சமாகியுள்ளது. பல்வேறு இனத்தவர்களாக இருந்தாலும் அவர்கள் தமது தாய் மொழியோடு ஆங்கிலத்தையும் ஒரு துணை மொழியாக ஏற்றுக்கொண்டிருக் கிறார்கள். இது, ஆங்கிலத்தை ஒரு வலுப்பெற்ற மொழியாகவும், வாய்ப்பான மொழியாகவும், வாழ்க்கைக்கு அவசியமான ஒரு மொழியாகவும், சர்வதேச தொடர்பு மொழியாகவும் ஆக்கியது.

இப்படி வேரூன்றிய ஆங்கில மொழி, இன்று சனத்தொகையில் குறைந்த மக்களின் சொந்த மொழியை விழுங்கி, கடலில் திமிங்கிலம்போல ஆகிவருவது தெரிய வந்திருக்கிறது. அமெரிக்க அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள ஓர் ஏற்பாடு இதற்கு ஆதாரமாகும். 'அமெரிக்காவின் ஒரே மொழியாக ஆங்கிலம்தான் இருக்கவேண்டும்' என்று குறிப்பிடப்பட்டுள்ள அந்த ஏற்பாடு சட்டமாகிறது. அதே வேளை, இதர மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும், அம் மொழிகள் தொடர்பான நடவடிக்கைகளுக்கும் செலவுசெய்யப் பட்டுவந்த பணம் உடனடியாக நிறுத்தப் படவேண்டும் என்றும் அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

அமெரிக்காவில் பல மொழி பேசும் மக்கள் வாழ்கிறார்கள். அம் மொழிகளைப் பேசுபவர்கள் காலப்போக்கில் அமெரிக்க ஆங் கில சாகரத்தில் மூழ்கிவிட வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். இதற்கு தென்னமெரிக்கா நல்லதோர் உதார ணமாகும். பல மொழிபேசும், பல கலாச்சாரங்களுக்கு வாரிசான மக்கள் அங்கு வாழ்கிறார்கள். ஒரு காலத்தில் 2 ஆயிரம் மொழி கள் அங்கு வழக்கில் இருந்தன. சிறிய சனத் தொகையினராக இருந்தாலும் மொழிப்பற்றில்லாதவர்களாக எவரும் வாழ்ந்தி ருக்கமாட்டார்கள். அப்படியிருந்தும், ஆங்கிலத்துக்குத் தாக்குப் பிடிக்கமுடியாமல் அதன் ஆதிக்கத்துக்கு ஈடுகொடுக்க முடியா மல், காலப்போக்கில் 600 மொழிகள் மாத்திரமே எஞ்சியி ருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இந்த 600 மொழிகளின் எதிர்காலங்களிலும்கூட நம்பிக்கையின்மையே ஏற்படுகிறது. ஆங்காங்கே ஆதிவாசிகள் பேசும் மொழிகளை விட, உலகில் முக்கியமாக இன்று 6000 மொழிகள் வழக்கிலிருப் பதாக கணிப்பிடப்பட்டிருக்கிறது. அடுத்த நூற்றாண்டில் 10 வீதமான மொழிகள் அருகிவிடு மென அமெரிக்காவில் நடை பெற்ற மொழியியல் மாநாடொன்றில் அறிஞர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். மொழிகள் அழிந்துவரும் வேகம் முன்ன ரெப்போதுமில்லாத ஒரு காலகட்டத்தை அடைந்துள்ளதாக அலாஸ்காவின் தாய்மொழி ஆராய்ச்சி நிலைய பொறுப்பாளர் பேராசிரியர் மைக்கல் குறோஸ் கூறுகிறார். 'சனத்தொகைப் பெருக்கம் பெருமளவில் உயர்கிறது; ஆனால், மொழிகளின் வளர்ச்சியோ கீழ்நோக்கியே செல்வது வேதனையளிக்கிறது' என்கிறார் இவர்.

'உலக மொழி ஒன்றைநாடி உலகம் சென்றுகொண்டிருக் கிறது. அந்த மொழி ஆங்கிலமாகத்தான் இருக்கப்போகிறது' என் கிறார் மியாமி பல்கலைக்கழக ஆய்வாளர் கலாநிதி கிம்பிறவ் ஒல் லர். இவர் தெரிவித்துள்ள கருத்து புலம் பெயர்ந்தும், பலமற்றும், உலக வலம் வந்துகொண்டிருக்கும் தமிழ் மக்களின் வாழ்வுக்கும் சிந்தனையாக அமைகிறது.

புலம் பெயர்ந்து இதர நாடுகளில் வாழும் தமிழ்க் குழந்தைகள் தம் தாய்மொழியை இள வயதில் கற்றுக்கொள்வதுமில்லை; பேசு வதுமில்லை. இது காலப்போக்கில் தாய்மொழி மறைந்து, பிற மொழி சொந்த மொழிபோலாகிவிடும் நிலையை ஏற்படுத்தும். இம் மா றுதலை பெரும்பாலும் இப் போது அவதானிக்கக்கூடியதாகவே இருக்கிறது. கலாநிதி ஒல்லரின் ஆய்வும் இதைத்தான் பிரதிபலிக் கின்றது.

வருடத்துக்கு ஒரு மொழி என்ற அளவில் அமெரிக்காவில் மொழி கள் அருகிவருவதாகவும், இவற்றில் சிலவற்றையாவது காப்பாற்றிவிட வேண்டும் என்றும் கலிபோர் ணிய பல்கலைக் கழக பேராசிரி யர் லீன் கின்ரன் ஆசைப்படு கிறார்.

இப்படி, மொழியை இழப்ப வர்கள் ஆங்கில மொழிக்குள் தஞ் சம் புகுந்துவிடுகின்றனர். அமெ ரிக்காவில் மட்டும்தான் இந்த ஆங் கில ஆதிக்கம் வலுவடைகிறது என்று கூறிவிடுவதற்கில்லை. உல கம் முழுமையுமே அது பொதுவாக நடைபெறுகிறது. விஞ்ஞான ரீதியில் மிகவேக வளர்ச்சி கண்டு வரும் உலகின் தொடர் புசாதன சேவை, கம்பியூட்டர் யுகம், வர்த்தகம், விண் வெளி ஆய்வுகள்-இப்படி எதற்குமே ஆங்கி லமே உபயோகத்தில் இருக் கிறது. ஜப்பான் மொழியைப் பேசும் ஜப்பானியர்களோ, ஆங்கில அறிவிருந் தாலும் பேசப் பின்னிற்கும் பிரெஞ்சுக் காரர் களோ, ஜேர்மனியர்களோ உலக நாடுகளின் இணைப்புக்கு ஆங்கிலத் தைத்தான் பாவிக்கிறார்கள். இவை தவிர, மத்திய கிழக்கு நாடுகளைப் பார்த்தால், வர்த்தக ரீதியில் வளரும் நாடுகள் இவை. சர்வதேச மட்டத்தில் அவர் களுக்கு தொடர்பு அவசியமாகிறது. இவற்றின் எண்ணெய் வாணிபம் ஆங்கில நாடுகளு டனேயே தொடர்பைக் கொண்டி ருக்கிறது. வங்கிகளின் கம்பி யூட்டர்கள் ஆங்கில மொழியிலேயே இயங்குகின்றன. ஆங்கிலத்தைக் கைவிட்டால் நாட்டுக்கே பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்ற நிலை. இதற்காக அரபு மொழி யைக் கைவிட்டு ஆங்கி லத்தை அவர்கள் தழுவிக்கொள்ளப் போகிறார்கள் என்பதல்ல. ஆனால், அங்குள்ள ஆங்கில ஆதிக் கத்தை இது வெளிக்காட்டுகிறது.

இனி, இந்தியாவைப் பார்த்தால், ஆங்கிலமே இணைப்பு மொழியாக இருக்கவேண்டும் என்று குரல் எழுப்பப்பட்ட காலத்தை மறந்துவிட இயலாது. இந்தி மொழியை தேசத்தில் ஒரே மொழியாக ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் ஆங்கிலம் இருந்தால் பரவாயில்லை என்கிறார்கள். அதற்கு அவர்கள் சொல்லும் சமாதானம் 'ஆங்கிலம் உலக மொழி' என்பதுதான்.

இந்தியா இன்று வளர்ச்சிப் பாதையில் வேகமாகச் செல்லும் ஒரு நாடாக கணிக்கப்படுகிறது. இதற்கு ஆங்கிலம் அவசிய மென்பது மட்டுமல்ல, முக்கியமானது என்பதும் வெளிநாடுக ளால் உணர்த்தப்படுகிறது. ஆங்கிலம் எப்படி ஒரு தென்னிந்திய மாநிலத்தை செல்வம் நிறைந்த மாநிலமாக மாற்றியிருக்கிறது என்பது இதற்கு உதாரணமாகக் காட்டப்படுகிறது. அது கேரள மாநிலம். சில வருடங்களுக்கு முன்னர்வரை வறுமையான ஒன் றாகத்தானிருந்தது. ஆனால், ஆங்கில மொழிக்கு முக்கியத் துவம் அளித்து, அங்குள்ளவர்கள் படிக்க ஆரம்பித்ததும் அந்த மொழியறிவின் வாயிலாக வெளிநாடுகளில் வேலை வாய்ப் புகள் பெற வசதி கிடைத்துவிட்டதாக கணிக்கிறார்கள். இது வெளிநாட்டவர் கணிப்பாக இருந்தாலும் அது உண்மையென் பதும் தெரிகிறது. ஆங்கிலத்தை உலக மொழி யாக ஆக்கிவிட விரும்புகிறவர்களின் சமாதா னம் இதுதான்: 'ஓர் இனம் ஆங் கிலத்தைத் தனது மொழியாக ஏற்றுக்கொள்வதில் தவறி ல்லை. அப் படி ஏற்றுக்கொண் டாலும், அவர்களின் சொந்த கலாச் சார, பாரம்பரியங்களை அது அழித்துவிடாது' - என் பதே.

இதுதவிர, ஆங்கில மொழி யில் 26 எழுத்துக்களே உள் ளன; சுலபமானது. அதனால் தான் அதனைச் சர்வதேச மொழியாக ஏற்றுக்கொள்ள உலக நாடுகளும், மக்களும் விரும் புகிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

வரப்போகும் நூற்றாண் டில் 3 ஆயிரம் மொழிகள் ஆங்கிலத்துக்கு வழிவிடலா மென்று மதிப்பிடப்படுகிறது. ஒவ்வொரு 20 வருடங் களிலும் 600 மொழிகள் இறந்துவிடு கின்றன என்று அந்நிய முது மொழி ஒன்று உரைக்கிறது. ❑

**பிரித்தானிய ஆட்சி நிலைகொண்ட நாடு களெல்லாவற்றிலும் ஆங்கில மொழி ஆதிக்கத்துக்கு வித்திடப்பட்டது. அது இன்று விருட்சமாகியுள்ளது. பல்வேறு இனத்தவர்களாக இருந்தாலும் அவர்கள் தமது தாய் மொழியோடு ஆங்கிலத்தையும் ஒரு துணை மொழியாக ஏற்றுக்கொண்டி ருக்கிறார்கள்.**

●●●

**தென்னமெரிக்காவில் ஒரு காலத்தில் 2 ஆயிரம் மொழிகள் அங்கு வழக்கில் இருந் தன. சிறிய சனத் தொகையினராக இருந்தாலும் மொழிப்பற்றில்லாதவர்க ளாக எவரும் வாழ்ந்திருக்கமாட்டார்கள். அப்படியிருந்தும், ஆங்கிலத்துக்குத் தாக் குப் பிடிக்கமுடியாமல் அதன் ஆதிக்கத் துக்கு ஈடுகொடுக்க முடியாமல், காலப் போக்கில் 600 மொழிகள் மாத்திரமே எஞ் சியிருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக் கின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HILLS TRAVEL

**Special Fares to Worldwide Destinations on schedule Airlines**

## COLOMBO

**APRIL 95 - JUNE 95**

| Airline | Return |
|---|---|
| AIR LANKA ( Non-stop ) | £410 |
| ROYAL JORDANIAN | £395 |
| GULF AIR | £405 |
| KUWAIT AIRWAYS | £390 |
| EMIRATES | £490 |

## MADRAS

**APRIL 95 - JUNE 95**

| Airline | Return |
|---|---|
| AIR LANKA | £410 |
| GULF AIR | £405 |
| BRITISH AIRWAYS | £455 |
| LUFTHANSA | £405 |
| AIR INDIA | £410 |

## Special Fare to Bangalore

| Airline | | Return |
|---|---|---|
| AIR-INDIA | APRIL - JUNE | £410 |

## SUMMER 1995 FARES TO COLOMBO

### AIR LANKA

| | Return |
|---|---|
| 02 JULY - 10 JULY | £445 |
| 11 JULY - 22 JULY | £555 |
| 23 JULY - 31 JULY | £600 |
| 01 AUG - 10 AUG | £555 |
| 11 AUG - 31 AUG | £445 |
| 01 SEPT - 30 NOV | £430 |

### ROYAL JORDANIAN

| | Return |
|---|---|
| 01 JULY - 10 AUG | £495 |
| 11 AUG - 31 AUG | £445 |
| 01 SEPT - 08 DEC | £430 |
| 09 DEC - 25 DEC | £525 |
| 27 DEC - 31 DEC | £445 |

30 Kg baggage allowance
Special discount for 3 or more tickets

*Call* ***Raj Puspanandan*** *on*

**TEL: 0171 434 4242**

14 Hills Place, Oxford Circus, London W1R 1AF


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன சாப்பாடு?

## பழைய நினைவுகள்

சோ. சிவபாதசுந்தரம்



அன்றொரு நாள், குரோய்டன் லண்டன் ரோடிலுள்ள தமிழ்க் கடையில் கத்தரிக்காய், புடலங்காய், வெண்டைக் காய், காராமணி, சாம்பார் வெண்காயம் (ஈர வெண்காயம்), பச்சை மிளகாய், வல்லாரை, கறிவேப்பிலை, கொத்த மல்லித் தளை முதலியவற்றை வாங்கிக்கொண்டு பஸ் ஏறி வரும்போது, நாற்பத்தெட்டு வருடங்களுக்கு முன்பு லண் டனில் நானும் மனைவியும் வசித்திருந்த நாள்களில், சைவச் சாப்பாட்டுக்காரராகிய நாங்கள் எதிர்கொண்ட வேடிக்கை யான அநுபவங்கள் நினைவுக்கு வந்தன.

1947ஆம் ஆண்டு இலங்கை வானொலி தமிழ்ப்பிரிவு நிகழ்ச்சி தயாரிப்பாளராகவும், அறிவிப்பாளராகவுமிருந்த என்னை, லண்டன் பி.பி.ஸி. பிரதிநிதி ஒருவர் தமிழ் ஒலிபரப்புக்காகத் தேர்ந்தெடுத்த விஷயம் சிங்கள அதிகார வர்க்கத்துக்குப் பிடிக்கவில்லை என்பது தெரிந்த விஷயந்தான். திறைசேரியில் அப்போதிருந்த எனது நண்பர் தியாகராஜாவின் மூலமாக அந்தச் செய்தி எனக்குக் கிடைத்தது. அப்போது கொழும்பு 'ரைம்ஸ்' பத்திரிகையில் நிருபராயிருந்த லக்ஷ்மன் சில்வா என்ற சிங்கள நண் பருடன் பேசும்போது, 'பி.பி.ஸி நிறுவனத்துக்கு இலங்கை வானொலியிலிருந்து ஒருவரைப் பயிற்சிக்காக அனுப்ப இருக் கிறார்கள் என்று கேள்வி' என்று காதோடு காதாக சொல்லி வைத்தேன். அவ்வளவுதான், அந்த வாரம் வெள்ளிக்கிழமை ரைம்ஸ் இதழ் கலை, விமர்சனப் பகுதியில், பெரிய தலைப்பில், 'வானொலித் தமிழ் அறிவிப்பாளர் சிவபாதசுந்தரம் லண்டன் பி.பி.ஸி.க்குச் செல்கிறார்' என்ற செய்தி பகிரங்கமாகியது. தமிழ்ப் பகுதிக்கு ஒர் ஆள் தேவை என்று கேட்டதாலும், தமிழ் அறிவிப்பாளர்களாக இருந்த இருவரில் நான் 'சீனியர்' என்ற காரணத்தாலும் என் பெயர் சிபார்சு செய்யப்பட்டிருந்தது, அவசர அவசரமாக காரியங்கள் நடந்தன. மூன்று வருட ஒப்பந்தம் கையெழுத்தாகியது. என்னுடன் ரேடியோ நிகழ்ச்சிகள் நிகழ்த்திய என் மனைவி, ஒரு வயதுப் பெண் குழந்தையைப் பிரிந்து உடனே என்னுடன் பிரயாணப்பட முடியாதாகையால் மூன்று மாதம் கழித்து வரலாம் என்று ஏற்பாடாகியது. அதனால், லண்டன் வாழ்க்கைக்குத் தேவையான நம்மூர்ச் சாமான்களையெல்லாம் மனைவி மூலம் எடுத்து வரலாம் என்ற ஏற்பாட்டில், நான் இரண்டு சூட்கேசுகளுடன், செப்டம்பர் மாதம் முதல் தேதி, வூஸ்டர்ஷயர் என்ற கப்பலில் ஏறினேன். பம்பாய், போட் சையிட் எல்லாம் தாமதித்து, இருபத்தேழு நாள் கழித்து லிவர்பூல் துறைமுகத்தில் சேர்ந்தது கப்பல்.

ஆரம்பத்தில் இரண்டு வாரம் பி.பி.ஸி. தலைமை நிலையமான போட்லன்ட் பிளேஸ் கட்டிடத்து மாடியில் தங்கியிருந்தபோதும், பின்னர் வேறு இலங்கை மாணவர் சிலருடன் ஒரு டிக்சில் தங்கியிருந்தபோதும், வாய்க்கு ருசி தராத உணவைச் சமாளித்துக்கொண்டு ஊரிலிருந்து எனது மனைவியுடன் வரப்போகும் சாப்பாட்டுச் சாமான்களுக்காகக் காத்திருந்தேன். மூன்று மாதம் கழித்து மனைவியுடன் மூன்று பெரிய மரப் பெட்டிகள் வந்திறங்கின. ஊர் அரிசி, அரிசி மா, பலவகையான காய்கறி வற்றல்கள், பருப்பு வகைகள், சமையலுக்கு வேண்டிய பலவகைப் பாத்திரங்கள், தோசைக் கல், இட்லிப் பாத்திரம், புட்டுக் குழல், இடியப்ப உரல், தட்டுகள் - இப்படியாக, புதுக் குடும்பம் நடத்துவதற்கேற்ற பொருள் பண்டங்கள் வந்து சேர்ந்தன. ஏழ்ஸ்கோட்டில் ஒற்றையறை வாடகையில் இருந்து மாறி, பாண்ஸில் மூன்று அறை கொண்ட வீட்டில் மாறியதும் எங்கள் இல்லத்தை நாடி இலங்கை, இந்திய நண்பர்கள் வார இறுதியில் சோறும், கறியும் சாப்பிட்டு மகிழப் படையெடுப்பது வாடிக்கையாயிற்று. யுத்தத்துக்குப் பிறகு அரிசி கிடைக்காமலிருந்து பின்னர் ரேஷனில் கொடுத்தார்கள். நமது மாணவர் கூட்டம் தமது பெயருக்குக் கிடைக்கும் ரேஷன் அரிசியை எங்களிடம் சமர்ப்பித்துவிடுவார்கள்.

தோசையும், இட்லியும் தயாரிக்க உபகரணமிருந்தும், உழுந்தை அரைக்க ஆட்டுக் கல்லுக்கு என்ன செய்வது என்ற பிரச்னை இருந்தது. கொழும்பிலே பிரதம இரசாயன பரிசோதகராயிருந்த குலநாயகம் அப்போது லண்டனில் உயர் பட்டப் பயிற்சிக்காக வந்திருந்தார். அவரும் நானும் ஒரே கப்பலில் தான் வந்தோம். அபூர்வமான அநுபவங்களைச் சொல்லுவார். உழுந்தை அரைப்பதற்கு அவர்தான் உபாயம் சொல்லித் தந்தார். 'ஊறப்போட்டு அரைப்பதும் ஒன்றுதான்; அரைத்துப்போட்டு ஊறப்போடுவதும் ஒன்றுதான்' என்ற தந்திர வாக்கியத்தைச் சொன்ன அந்த நண்பர் விளக்கினார்: 'சுலபமாகக் கிடைக்கும் காப்பிக்கொட்டை அரைக்கும் கிரைண்டரிலே உழுந்தை அரைத்து, செமலீனா என்ற ரவையை சேர்த்து ரொட்டிக் கடையில் கிடைக்கும் யீஸ்டில் சிறிது சேர்த்து சூடான இடத்தில் வைத்திருந்தால் தோசை மாவோ, இட்லி மாவோ ரெடியாகிவிடும்.' இந்த அற்புதமான யோசனையில் அந்த நாள்களில் எங்கள் வீட்டில் தோசையும் இட்லியும் பிரசித்தம்.

பி.பி.ஸி. தமிழோசை ஒலிபரப்பு அந்த நாள்களில் ஒக்ஸ்போட் ஸ்ரீட்டில் இருந்தது. எனது வேலையை முடித்த பின்னர், கடைகளைச் சுற்றிப்பார்ப்பேன். ஒரு நாள் எதிர்பாராத வகையில் 'சோகோ' பகுதிக்குச் சென்றபோது ஒரு கடை வாசலில் கத்தரிக்காயும் குடமிளகாயும் இருக்கக் கண்டேன். பிரான்சின் தென்கரையிலிருந்து வந்தவை. விலை சொல்லத் தேவையில்லை. ஆசை விடவில்லை, வாங்கினேன். ஆனால், அபூர்வமாகத்தான் கிடைக்கும். பாண்சில் எங்கள் தெருவிலிருந்த ஒரு கடையில்தான் ரேஷன் வாங்குவோம். ஒருநாள் அங்கு போனபோது கடை வாசலில் தோட்டத் தொழிலுக்குத் தேவையான பொருள்கள் செடிகளோடு, ஒரு மரப்பெட்டி நிரம்ப சின்ன வெண்காயம் இருக்கக்கண்டேன். இது என்ன என்று விசாரித்தபோது, 'அது தோட்டத்தில் அழகுக்கு நடப்படும் பல்ப். 'ஷலட்' என்று சொல்வோம் என்றார் கடைக்காரர். விலையோ மிகவும் குறைச்சல். நமது சாம்பாருக்கும், சொதிக்கும், வெந்தயக் குழம்புக்கும் இன்றியமையாத தோழன் என்பதை சொல்லாமல் இரண்டு றாத்தல் வாங்கிச் சென்றேன்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு வந்தபோது, சௌத்ஆலில் பஞ்சாபியரின் கடைகளில் நமக்கு வேண்டிய சரக்குச் சாமான்களும் சில காய்கறிகளும் கிடைத்தன. பின்னர் இலங்கைத் தமிழர்கள் இடம் பெயர்ந்து வரத் தொடங்கியதும் அவர்களுக்குத் தேவையான சகலவிதமான பொருள்களும் இப்போது தெருவுக்குத் தெரு தமிழ்க் கடைகளில் கிடைக்கின்றன. கொழும்பில் பத்து கடைகளைத் தேடிச் செல்லவேண்டிய வேலையை இங்கே ஒரு கடையிலேயே முடித்துக்கொள்ளலாம். பிரான்சிலும் ஜேர்மனியிலும் சுவிற்சர்லாந்திலும் இதே பந்தாவென்பதை விளம்பரங்களிலிருந்து தெரியலாம். கனடாத் தமிழர் அநுபவம் 'அசல் யாழ்ப்பாணம்' என்று சொல்கிறார்கள்; போய்ப் பார்க்கவேண்டும். ❑

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூன்று திரைப்படங்கள்

யமுனா ராஜேந்திரன்

பூலான் தேவி (Bandit Queen) திரைப் படம் தொடர்பாக வெளியான விவாதங்கள், விமர்சனங்கள், விவகாரங்கள் அனைத்தையும் தொகுத்துப் பார்க்கின்ற போது அது தொடர்பாக மூன்று முக்கியமான -மையமான விடயங்கள் தெரியவருகின்றன.

1. இது இந்திய கிராமப்புறங்களில் பாலியல் மற்றும் ஜாதீய வன்முறை தொடர்பான படம்.

2. உண்மை வாழ்வுக்கும் அதன் அடிப்படையில் சினிமா புனைவுக்கும் இடையிலான பிரச்னையை தூண்டியிருக்கும் படம்.

3. இந்தியா மற்றும் மூன்றாம் உலக நாடுகளின் அடிப்படையான, நிஜமான பிரச்னைகள் சினிமாவில் முன்வைக்கப் படும்போது அது எதிர்கொள்ளும் அரசியல், தணிக்கைப் பிரச்னைகள் பற்றிய விவாதத்தைத் தொடக்கியிருக்கும் படம்.

இம் மூன்று பிரச்னைகளையும் ஒவ்வொன்றாக இங்கு பார்க்கலாம்.

முதலில் இதை முழுக்க முழுக்க ஒரு சினிமாக் கதையாக கருதிக் கொள்வோம். நிஜப் பெயர்களை மறந்துவிடுவோம்.

## பாலியல் மற்றும் ஜாதீய வன்முறையின் அழகியல்

கதை உத்தரப் பிரதேசத்தின் சம்பல் நதிப் பள்ளத்தாக்கின் கிராமங்களுக்கிடையில் நிகழ்கிறது. மேல்ஜாதி தாக்கர்கள், கீழ் ஜாதி மல்லாக்கள், பொலிஸ், பால்ய விவாகம், கீழ்ஜாதி பெண்கள் மீதான பாலியல் ஒடுக்குமுறை போன்றவற்றைப் படம் சொல்கிறது.

இந்தியாவில் இன்றும் நிலவும் நடைமுறைதான் என்ன?

பெண்கள் திருட்டுக் குற்றம் சுமத்தப் பட்டதற்காக முகத்திலும் உடலிலும் பச்சை குத்தப்பட்டு, நிர்வாணப்படுத்தப் பட்டு தெருக்களில் ஊர்வலமாக இழுத்துச் செல்லப்பட்டது சமீபகால வரலாறு. தமிழகத்தின் தஞ்சை மாவட்டத்தில் 44 அரிஜனப் பெண்களும் குழந்தைகளும் கூலி

1

### இந்தியாவில் தடைசெய்யப்பட்ட

# பண்டிற் குயீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நான் பலாத்காரப்படுத்தப்படும் காட்சி மறுபடி பார்க்கப் படுவதை நான் விரும்ப வில்லை. இப்படம் இந்தியாவில் திரையிடப் பட்டால் நான் தீக்குளித்து இறப்பேன்.
>
> – பூலான் தேவி



உயர்வு கேட்டதற்காக மேல்ஜாதி (கோபாலகிருஷ்ண நாயுடு) காரர்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது வரலாறு.

பத்மினி போன்ற பெண்கள் பலாத்காரப் படுத்தப்படுவதும், பொலிஸ் நிலையத்தில் அவர்கள் பலாத்காரப்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டதும் மிகமிகச் சமீபத்திய காலத்தில்தான். ஜீவனாம்சம் மறுக்கப்பட்ட ஷபானு; உடன் கட்டையேற நிர்ப்பந்திக்கப்பட்டு உயிரோடு கொழுத்தப்பட்ட ரூப்கன்வர்; இந்திரா காந்தி இறந்தபோது சூறையாடப்பட்ட சீக்கிய பெண்களின் உடல்கள்; பம்பாய் கலவரத்தில், அயோத்தி கலவரத்தில் பலாத்காரப்படுத்தப்பட்ட முஸ்லிம் பெண்களின் வேதனை எல்லாமுமே சமகால இந்திய வரலாறுதான்.

அபர்ணா சென்னின் 'சதி' படமும், தீபா தன்ராஜின் What happened to this city படமும் அனந்த் பட்டவர்த்தனின் Father, Son and Holywar படமும் இதே பாலியல், மத, ஜாதீய வன்முறையைத்தான் தத்தமது தளங்களில் முன்வைக்கின்றன.

பூலான்தேவி படம் கதை நிகழ்கின்ற காலத்திலும், பாத்திரங்களிலும் மட்டும் தங்கியிராது, பிரச்னைகளின் வேர்களுக்குப் பின்நோக்கிப் போகின்றது. அவர்களின் அன்றாட வாழ்வுப் பழக்கவழக்கங்களுக்குள், அவர்கள் உரையாடும் சொற்றொடர்களுக்குள், அவர்களின் நிறுவன அமைப்புகளுக்குள் நிலவும் பாலியல், ஜாதிய வன்முறையை தோலுரிக்கிறது.

ஒரு காட்சி: பஞ்சாயத்து கூடியிருக்கிறது. பூலானைப் பலாத்காரப்படுத்திய மேல்ஜாதி தலைவன் மகன் சொல்கிறான்: 'பூலான்தான் கூப்பிட்டாள். அவளுக்கு நான் தேவைப்படுகிறேன் என்று சொன்னாள்' என்கிறான்.


பூலான் ஊரிலிருந்து ஒதுக்கிவைக்கப்படுகிறாள்.

ஓர் உரையாடல்: பொலிசுக்கு பூலானைக் காட்டிக் கொடுக்கும் ஸ்ரீராம் மெக்காபோனில் பொலிஸ்படை புடைசூழ பேசுகிறான்.

'பூலான், எங்கே போயிருந்தாலும் வந்துவிடு. என்மீது வந்து உட்கார்.'

பஞ்சாயத்து, பொலிஸ், மேல்ஜாதி தாக்கர் தமது அமைப்பு மூலமும் சொற்கள் மூலமும் செய்ய விளைவது ஒன்றேதான்: பாலியல் வன்முறை. இப்படத்தில் உடல் சார்ந்த பாலியல் வன்முறை பல்வேறு சந்தர்ப்பங்களில் காட்சிரூபமாகிறது.

1. பதினொரு வயது சிறுமி பூலான் அவளது 34 வயது கணவனால் பலாத்காரப்படுத்தப்படுகிறாள்.



2. திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்டு பொலிஸ் நிலையத்தில் காவலர்களால் பலாத்காரம் செய்யப்படுகிறாள்.

3. பெமாய் கிராமத்துக்கு மேல்ஜாதி கொள்ளையர்களால் இழுத்துவரப்பட்டு முழுக் கொள்ளைக்கூட்ட ஆண்களாலும் பலாத்காரப்படுத்தப்படுகிறாள்.

4. மேல்ஜாதிக்காரர்களின் கையாள்களான கொள்ளையர்களால் கடத்தப்பட்டு மலைப் புழுதியில் சூரியன் எரிக்க பலாத்காரப்படுத்தப்படுகிறாள்.

இந்தக் காட்சிகளில் ஒன்றில்கூட ரசனை நோக்கம் இல்லை. சின்ட்லர் லிஸ்ட் படத்தில் gas chamber க்குப் போகிற பெண்களின் நிர்வாணம் எழுப்பும் வேதனையும் கோபமுமே இந்தக் காட்சிகளிலும் எழுகிறது. Close up காட்சிகள் முற்றிலும் தவிர்க்கப்பட்டிருக்கிறது. பாலுறவு அநுபவம் காட்டப்படவில்லை. ஆண் உடல்களின் brutality தான் காட்டப்பட்டிருக்கிறது.

மொழிசார்ந்த வன்முறையும்சரி, உடல் சார்ந்த வன்முறையும்சரி இந்த இரண்டு விதமான பாலியல் வன்முறைகளும் பூலான் எனும் கீழ்ஜாதிப் பெண்ணின் மீது மேல்ஜாதி ஆதிக்கம் எனும் ஜாதீய வன்முறையின் வழியேதான் நிகழ்கிறது.

இங்கே வன்முறை என்பது ஒரு பெண்ணாக அவளது ஆன்மாவை, ஆன்மீக பலத்தை முற்றிலும் உடைத்து நொறுக்கும் ஆதிக்கமாக நிகழ்கிறது. இவற்றை எதிர்த்துப் பேசிய ஒரு பெண், செயல்பட்ட ஒரு பெண்ணின் கோபமான எதிர்ப்புணர்வு, வாழ்வு, நியாயம் சார்ந்த வன்முறை சினிமாவாகியிருக்கிறது. 11 வயதில் தன்னைப் பலாத்காரப்படுத்திய கணவனை இரத்தம் சொட்டச் சொட்ட அடித்து நிம்மதி கொள்கிறாள். தன் உடலை, ஆன்மாவை சிதறடித்த முழுக்கிராமமும் பார்க்க, அக்கிராமத்து ஆண்கள் கொல்லப்படுகிறார்கள். உறைந்த இரத்த வெள்ளத்தின் நடுவே அழுகையை நிறுத்திய அமைதியான நிர்வாணக் குழந்தையொன்று நடந்துபோகிறது.

பூலான் தேவியென்றால் 'பூக்களின் கடவுள்' என்று பொருள். சம்பல் நதிக் கிராமத்து மக்கள் அவளை வெறி கொண்ட காளிமாதாவாகவே பார்த்தார்கள். பெமாய் கிராமத்தில் அவளது முழு ஆடைகளையும் களைந்துவிட்டு, கூந்தலைப் பிடித்து உலுக்கிச் சித்திரவதை செய்யும்போது தாக்கர் ஸ்ரீராம் சொல்வான்: 'பூலான் தேவியாம் இவள். கீழ்ஜாதி மக்களின் கடவுளாம் இவள்; கீழ்ஜாதி மக்களின் கடவுளுக்கு இதுதான் கதி.'

படம் தொடங்கும்போது 'மனுஸ் மிருதி'யிலிருந்து ஒரு மேற்கோள் காட்டப்படுகிறது. 'பெண்களும் மிருகங்களும் அடிக்கப்படுவதற்குப் பிறந்தவர்கள்.'

படத்தின் இறுதியில் 11 வயது சிறுமி பூலான் தேவி கமராவை நேராகப் பார்த்து (நம்மைப் பார்த்து) சொல்வாள்: 'நான் பூலான் தேவி. சகோதரியுடன் கலவிசெய்

பவர்களே - நான்தான் அவள்.'

சினிமாவின் இலக்கணத்துள் சினிமா மொழியின் ஆளுமைக்குள் அசலான, தீவிரமான படம் பூலான் தேவி. நஸ்ரத் படே அலிகானின் இசை பூலான் தேவியின் கோபத்தையும் ஆவேசத்தையும் உக்கிரத்துடன் மறுபடைப்புச் செய்திருக்கிறது. பூலான் பலாத்காரப்படுத்தப்படும் இடங்களில் வானம் பூமி அதிர்ந்துவிட ஓங்கி ஒலிக்கும் அந்த தீனக் குரல், அந்த வேதனைக் கதறல் நெஞ்சத்தைப் பிளந்துவிடுகிறது. அசோக் மேத்தாவின் கமரா நதியின் சலசலப்பை, சம்பல் பள்ளத்தாக்கின் வெம்மையை ஓரிடத்தும் நின்று நிலைக்காது, ரசனை காட்டாது, பூலானின் கோபமே போன்று வேகமாக நகர்ந்து கொண்டே இருக்கிறது. ஜீவனுள்ள ஒளிப்பதிவு.

இரண்டாவது பிரச்னை; பூலான்தேவியின் உண்மை வாழ்வுக்கும் சினிமாக் கதைக்கும் உள்ள முரண்பாடு தொடர்பாக எழும் பிரச்னை.

பூலான் தேவியின் பிரச்னை இது தான்:'நான் விக்ரமோடு அவனின் மேலிருந்து கலவிசெய்வதான காட்சியொன்று வருகிறது; அம்மாதிரி நான் நடந்துகொள்ளவில்லை. 22பேர் சுட்டுக்கொல்லப்பட்ட பெமாய் கிராமத்தில் நான் இருக்கவில்லை. பெமாய் கிராமத்தில் நான் பலாத்காரம் செய்யப்பட்டதை மறுபடியும் நான் பார்க்



## சேகர் கபூர்

சேகர் கபூர் இங்கிலாந்தில் பயின்ற பட்டய கணக்காளர். பூலான் தேவி அவருடைய மூன்றாவது படம். முதல் படம் மஸூம். 1983இல் வெளியான இப்படம் மத் தியதரவர்க்க வயது வந்தவர்களின் அறவியல் ஒழுக்க நியதிகளுக்கிடையில் அகப்பட்ட ஒரு குழந்தையின் அநுபவங்கள் பற்றியது. இவரது இரண்டாவது படம் 'மிஸ்டர் இந்தியா' ஸ்ரீதேவி, அனில் கபூர், ஓம்பூரி நடித்து வெளியான வியாபார ரீதியில் வெற்றிபெற்ற படம். இதை ஒரு குழந்தைகள் கற்பனைப் படம் என்கிறார் கபூர். பாக்கியராஜ், நடித்து வெளியான 'இரத்தத் தின் இரத்தமே' இப்படத்தின் தமிழ்த் தழுவலே.

முரண்பாடுகளின் உருவமாக மனிதனைக் காணும் கபூர், தன்னுள் இருந்த முரண்பாடுகளை வெளிப்படுத்திய இரு துருவங்கள்தான் இப் படங்கள். ஒன்று தீவிரமான பிரச்னைப் படம். மற்றையது, வியாபார நோக்கிலானது. இந்த முரண்பாடுகளைக் கடந்துபோக முயல்கிறவர் கபூர். லண்டன் 'சனல் 4' தொலைக்காட்சி நிகழ்ச்சியான On the other Hand நிகழ்வில் பிரிட்டிஷ் சிறுபான்மை மக்களின் பிரச்னைகளைப் பேசியவர். பாம்பாய் திரைப்பட உலகில் நம்பிக்கையற்று பெர்டால்ட் பிரெக்ட், இப்சன், மில்லர் நாடகங்களில் நடித்தவர். கோவிந் நிஹ்லானியின் 'திருஷ்டி' பட நாயகன். புகழ்வாய்ந்த பம்பாய் பிரபலங்களை ஒதுக்கி, சீமா பிஸ்வாஸ் எனும் நாடக நடிகையை தனது பூலான் தேவியில் நடிக்க வைத்தவர்.

மாலா சென் எனும் பெண்ணிலைவாதியால் எழுதப்பட்ட நூலும், திரைப்படத்துக்கான திரைக்கதையும் தன்னிடம் வந்ததும், அதைப்படித்துப் பார்த்தபோது பூலான் தேவியின் வாழ்க்கைப் பிரச்னையின் பின் வேரோடியிருக்கும் ஜாதீய ஆதிக்கமும், பாலியல் ரீதியான வன்முறையும் பற்றிய புதிய தரிசனங்களை அவை தனக்குத் தந்ததாக சொல்கிறார்.

பூலான் தேவியின் விடுதலைக்கு முயன்றவர் மாலா சென். சனல் 4 Asian Films commissioning Editor பரூக் தோண்டியின் முன்னாள் மனைவி; இப்போது அவரது நண்பர். இவர்தான் பூலான் தேவிக்கான வழக்கறிஞரை அமர்த்தியவர். பூலான் சொல்லச் சொல்ல எழுதப்பட்ட சிறைக் குறிப்புகளின் துணைகொண்டு எழுதப்பட்ட இவரது Indian Bandit Queen நூலை அடிப்படையாகக்கொண்டே திரைக் கதை அமைக்கப்பட்டது.

நாலரை மணிநேர பிரதி பரூக் தோண்டியினால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பின்னர் இரண்டு மணிநேரத்துக்கு அது ஆக்கப்பட்டது. இக் கதைபற்றி கபூரிடம் சொல்லப்பட்டபோது இதனை ஒரு விவரண நாடகமாக அல்லது முழுக்கதைப்படமாகவே தர விரும்புவதாக அவர் சொல்லியிருக்கிறார்.

வரலாற்றின் அடிப்படைகளைக் கொண்டிருந்தாலும் இப் படம் படம் வரலாறு அல்ல. அந்த வரலாறு நிகழ்ந்த காலகட்டம் பற்றிய ஓர் அரசியல் சமூகச் சித்திரம். பூலான் தேவியின் பிரச்னை முழு இந்தியக் கிராமங்களுடையதும், கீழ் ஜாதி மக்களுடையதுமான பிரச்னை. பெண் ஒடுக்குமுறையும் மேல் ஜாதி ஆதிக்கமும் பற்றிய பிரச்னை. பூலான் தேவியின் முக்கியத் துவம், அதை அப்பெண் எதிர்த்து நின்று போராடி நிமிர்ந்தாள் என்பதுதான்.

பூலானின் வார்த்தைகளுக்குப்பின் கட்டமைக்கப்படாத சிந்தனைகளையும் சார்புத்தன்மை பெற்றிராத சொற்களையும் மீறி, அவள் சொல்லத்தவறிய -சொல்ல வேண்டிய - உணர்ந்து அநுபவித்த விடயங்களையேதான் இப்படத்தில் சொல்ல விரும்பியதாக குறிப்பிடுகிறார் கபூர்.

பூலான் தேவி கதையைச் சொல்லும் போக்கில் இந்திய சமூகத்துக்கும் இந்தியாவின் கிராமப் புறங்களில் சித்திரவதைப் படும் பெண்களுக்கும் ஒரு செய்தி சொல்லவும் விரும்பிய கபூர், படத்தின் துவக்கக் காட்சியிலிருந்து இறுதிக் காட்சிவரை ஜாதீய மேலாதிக்கம் மற்றும் பாலியல் வன்முறைக்கெதிராக போராடவேண்டிய அந்தச் செய்தியைச் சொல்லியிருக்கிறார். எந்தப் படைப்பும் அது நிலைகொண்டிருக்கும் காலத்தையும் பிரச்னையின் உக்ரத்தையும் உணர்ச்சிக் கொந்தளிப்பையும் சொல்லாதுவிட்டால் அதில் அர்த்தமேதுமில்லை என்று குறிப்பிடும் கபூர், பூலான் தேவியின் தீராத கோபத்தை இப்படத்தின் அடி நாதமாக நான் கையாண்டேன் என்கிறார்.

ஆகவேதான், பூலான்தேவி சம்பந்தமான பிரச்னை மூன்றாம் நபரின் கதைசொல்லல் பார்வையில் சொல்லப்படாமல் அவளுடைய பார்வையிலேயே சொல்லப்பட்டிருக்கிறது என கபூர் குறிப்பிடுகிறார்.

பூலான்தேவியின் வாழ்க்கையை ஜாதிய, பாலியல் வன்முறையினூடே சொல்ல முயன்ற அவர், வேறொரு முக்கியமான பிரச்னையையும் எதிர்கொள்ளவேண்டியிருந்தது. இப்படம் இந்தியரால் தயாரிக்கப்படவில்லை. லண்டன் சனல் 4 தொலைக்காட்சி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டிருப்பதால் இயல்பாகவே இதன் பார்வையாளர்கள் பெரும்பாலோர் மேலைத்தேயத்தவர்களே. இவர்கள் வர்க்க ஒடுக்குமுறையை புரிந்துகொள்கிற முறையில் ஜாதீய ஒடுக்குமுறையைப் புரிந்து கொள்ளமாட்டார்கள் என்பதுதான் அது. ஆகவேதான், படத்தின் ஒவ்வொரு பிரேமிலும் இந்த ஜாதீய கட்டமைப்பின் முற்றிலும் விரவிய தன்மையையும் அதன் பயமுறுத்தலும் இருக்குமாறு காட்சிகளை அமைத்தேன் என்கிறார் கபூர்.

வர்க்கப் பிரச்னை போலல்லாது, ஒரு குடும்பம் ஜாதீயப் பிரச்னையிலிருந்து பல்வேறு தலைமுறைகளுக்கு தப்பித்துக் கொள்ளவே இயலாது என்பதையேதான் மேற்கத்திய பார்வையாளர்களுக்கு வலியுறுத்த விரும்பினேன் என்கிறார். அதில் அவர் வெற்றி பெற்றிருக்கிறார் என்பதைத்தான் உலக அளவில் இப்படம் பெற்றிருக்கும் மதிப்பு சாற்றுகிறது. ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவோ, பார்வையாளர்கள் பார்ப்பதையோ நான் விரும்பவில்லை; அது பெண்ணுக்கு, இந்தியப் பெண்ணுக்கு அகௌரவமானது'.

பலாத்காரப்படுத்தப்பட்டுவிடுவதென்பது



இந்திய கலாச்சாரத்தில் அப் பெண்ணின் முழு வாழ்வுக்குமான அவச்செயலாக நிகழ்ந்துவிடுகிறது. சமூகம் அவளை மிகக் கேவலமாகவும் நடத்துகிறது. மேலும், பூலான் இப்போது கௌரவமான குடும்பத்துப் பெண்; வியாபாரியின், மேல் ஜாதிக்காரரின் மனைவி. அரசியல் கட்சியைத் துவக்கிவிட்டவர் (ஏகலைவன் படை).

சேகர் கபூர், பரூத் தோண்டி, மாலா சென் போன்றவர்களால் வைக்கப்படும் விவாதம் இதுதான்: இப்படத்துக்கான கதைக்கு பூலானிடம் ஒப்புதல் பெறப்பட்டது. அதற்கான தொகையும் வழங்கப்பட்டது. நாங்கள் 'வாழ்க்கை வரலாற்றை' படமாக்கவில்லை; அந்த வாழ்க்கைக்குப் பின்னிருக்கிற சமூக வரலாற்றை சினிமா இலக்கணத்துக்குள், சினிமா பிரதிக்குள் (cinema text) சொல்லியிருக்கிறோம்.

பெமாயில் பூலான் இருந்ததற்கான காட்சிகள் உண்டு. அக் காட்சியில் பூலான் எவரையும் கொலைசெய்ததாக நாங்கள் காட்டவில்லை. இருவரை முழங்கால்களில் சுடுவதாகத்தான் காட்டியிருக்கிறோம். மேலும், சினிமாவின் அடிப்படையில் நீதிமன்றம் தீர்ப்பு வழங்குமென்பது அபத்தம் என்கிறார் தோண்டி.

'உண்மைக் கதையின் அடிப்படையிலான படம்' என்கிற விளம்பரத்தைத் தவிர்த்திருக்கலாம் என் கிறார் கபூர்; காலம் கடந்துவிட்டது.

இப்பிரச்னையில் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன:

1. பூலானின் கலாச்சாரம் சார்ந்த குடும்பப் பெண் அறவியல் பிரச்னை.

2. தனது வழக்கு சம்பந்தமான சட்டப் பிரச்னை.

விடுதலையை நோக்கமாகக் கொண்ட பெண்ணுக்கு பூலான் எழுப்பும் அறவியல் பிரச்னை அத்தனை முக்கியமானதல்ல என்றே தோன்றும். தனது சிறுவயதில் பலாத்காரப்படுத்தப்பட்டு, கருச்சிதைவுக்கு உள்ளாகி, வஞ்சிக்கப்பட்டு மறுபடி வாழ்வை மீளமைத்துக்கொண்ட Opreh Winfrey அமெரிக்க மக்களுக்கு அண்டை வீட்டு உண்மைப் பெண். Judie Foster மது விடுதியில் பல ஆண்களால் பலாத்காரப் படுத்தப்படுவதாக Accused படத்தில் நடித்திருக்கிறார். சீமா பிஸ்வாஸ் பூலானாகவே மாறி பலாத்காரப்படுத்தப்பட்டிருக்கிறார். நிர்வாணமாக கிராமச் சதுக்கத்தில் நடந்திருக்கிறார். இந்திய கலாச்சார அளவு கோல்களின்படி நடிகைகள் எல்லோருமே ஒழுக்கங் கெட்டவர்கள். கொஞ்சம் உடல் தெரிந்தாலும் அவச்செயல் செய்தவர்கள். சனாதனியான காந்தி கூட பலாத் காரப்படுத்தப்பட்டவர்களை விமர்சித்தோரை, ஒதுக்கித் தள்ளியோரை நிராகரித்தவர். கீழ்ஜாதி ஒடுக்கப்பட்ட மக்களிடையில் இந்த பலாத்காரப்படுத்தலை எதிர்த்து வாழ்வது அவச்செயல் அல்ல; ஏனெனில் அவர்கள் விடுதலையை விழைபவர்கள்; போராடுபவர்கள். பூலான் தேவியின் பிரச்னை அவரது அரசியல் நோக்கங்கள்; வியாபாரியான மேல் ஜாதி கணவன்; குடும்பப் பெண் வடிவம் ஆகியன சார்ந்தது. இந்த அறவியல் பிரச்னை, கோடானுகோடி இந்தியப் பெண்கள் தொடர்பான இப்படத்தை வெளியிட முடியாது செய்வது உண்மையில் இந்திய மக்களின் துரதிருஷ்டமே. மேலாக பணம் தான் அடிப்படைப் பிரச்னை என்பதை அவரது மேல்ஜாதிக் கணவர் நிரூபிக்கிறார்.

சட்டப் பிரச்னை சம்பந்தமாக சொல்லப்படும் வாதமும் அபத்தமானதே. பூலான் தேவிமீது சுமத்தப்பட்டிருக்கும் 48 குற்றங்கள் இன்னமும் விசாரணையில் இருக்கின்றன. அவைபற்றியோ, பெமாய் பற்றியோ இப்படம் எதுவும் இறுதியாகச் சொல்லவில்லை. அந்த சம்பவங்கள் பற்றிய விவாதங்களுக்குள்ளும் விளக்கங்களுக்குள்ளும் இப்படம் போகவில்லை. இப் பிரச்னைக்குப் பின்னுள்ள இந்திய ஆளும் வர்க்கத்தின் அரசியலையும், பார தீய ஜனதா கட்சியின் அரசியலையும்தான் இப்போது கேள்விக்குள்ளாக்குகிறார்கள் சேகர் கபூரும், பரூக் தோண்டி போன்றவர்களும்.

மூன்றாவதான பிரச்னை; தணிக்கைக் குழு, அரசியல்வாதிகள், இந்திய மக்களின் நிஜமான வாழ்வுபற்றிய சினிமா தொடர்பான பிரச்னை. இப்படத்தில் இடம்பெறும் மூன்று காட்சிகள்தான் இந்தியத் தணிக்கைக் குழுவின் பிரச்னை:

1. பெமாயில் 22 பேர் கொல்லப்படும் காட்சி.

2. பொலிஸ் நிலையத்திலும் பின்னர் பெமாய் கிராமத்திலும் பூலான் பலாத்காரப்படுத்தப்படும் காட்சிகள்.

3. பூலானும் விக்ரமும் தொடர்பான கலவிக் காட்சி.

இந்திய, தெலுங்கு, தமிழ் மசாலா சினிமாக்களை எடுத்துக்கொண்டால், ஐம்பது பேரை ஒருவன் கண்மண் தெரியாமல் சுட்டுக் கொல்வான். தலை வேறு, முண்டம் வேறு, கை வேறு, கால் வேறாக வெட்டிக் கொல்வார்கள். அண்மித்த காட்சிக



"இப்படத்தை எதிர்ப்பவர்கள் ஜாதி ஆதிக்கக்காரர்களாகவோ, பாரதிய ஜனதாக் கட்சியின் ஆதரவாளர்களாகவோதான் இருக்கமுடியும்"

— பாரூக் தோண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளில் ஆடைகளை ஒவ்வொன்றாக கிழித்து கற்பழிப்பார்கள். ரசனையாக (suggestive) ஒவ்வோர் உள்ளாடையாகக் கழற்றி பல்வேறு தினுசுகளில் சத்தம் போட்டுக் கொண்டு உறவு கொள்வார்கள். பொலிஸ் நிலையத்தில் வில்லன், பெண் பொலிஸ் அதிகாரியைப் பலாத்காரம் செய்வான். காமசாஸ்திரா நிலைகளை நாயகனும் நாயகியும் ஆடை அணிந்தபடியிருந்தே நிகழ்த்திக் காட்டுவார்கள். இதையெல்லாம் தணிக்கைக் குழு பெரிதாகக் கண்டுகொள்ளாது. இந்த உரிமைகளுக்காக நடிக நடிகையர் ஊர்வலமும் போவார்கள்.

பூலான்தேவி படத்தில் வருகிற இக் காட்சிகளில் ஒன்றில்கூட அண்மித்த காட்சிகள் (close up shots) இல் லை. பெண்ணின் மார்பு, நாபி, அடி வயிறு, மழையில் நனைந்த பின்புறம், மார்புகளின் இடைவெளி (இவை யெல்லாம் இப்போது இந்தியப் படங்களில் இருக்கும் சமாச்சாரம்) போன்றவற்றைப் பற்றிய காட்சி ரூபம் இல்லை.

பெமாய் பலாத்காரக் காட்சி இருட்டில் அதன் வேதனையுடன், குரூரத்துடன் சொல்லப்பட்டிருக்கிறது. குஜ்ஜார் பலாத்காரப்படுத் தும் காட்சியும் பெமாய் கிராமத்தில் நிர்வாணமாக அவமானப்படுத்தப்படும் காட்சி யும் top shots (elevation shots) களாக மேலிருந்து long shots ஆக எடுக்கப்பட்டிருக்கிறது. கிளர்ச்சியூட்டும்படியான உடல் வெளிப்பாடுகள் முற்றிலும் நிராகரிக்கப்பட்டிருக் கின்றன.

பெமாயில் 22 பேர் சுட்டுக்கொல்லப்படும் காட் சிகூட top shot ஆக எடுக்கப்பட்டிருக்கிறது. அதை action scene ஆக ஆக்கிவிடக்கூடாதென ஜாக்கிரதையாக செயல்பட்டிருக்கிறார்கள் சேகர் கபூரும், அசோக் மேத்தாவும். அக்காட்சியில் பூலான் வெறிகொண்டு கோபத்துடன் இயங்கும் காட்சி slow motion இல் மங்கலாக்கப்பட்டு அதை ஒரு ரசனைமிக்க காட்சியாவதிலிருந்து தவிர்த்திருக்கிறார்கள். வாழ்வுக்கும் சாவுக்குமிடையிலான mythical quality ஐ காட்ட விரும்பியதாக குறிப்பிடுகிறார் சேகர். அக் காட்சியில் செயல்படும் ஒரே நபர் ஆக்ரோஷத்துடன் இயங்கும் பூலான்தேவிதான். அதுதவிர அக் காட்சி மங்கலாக்கப்பட்டுவிடுகிறது.

மேலிருந்து பூலான் கலவிகொள்ளும் காட்சி இரண்டு மனங்களின் குதூக

## விகாரங்களும் விவாதங்களும் விமர்சனங்களும்

*1.* பாலியல் வன்முறை, நிர்வாணம், படுகொலை போன்றவற்றுக்காக இத் திரைப்படம் இந்தியாவில் தடைசெய்யப்படுகிறது. உலகெங்கும் திரையிடுவதும் தடையிடப்படுகிறது.

- இந்திய நீதிமன்றம் (Sight and Sound Feb 1995)

*2.* பாலியல் பலாத்காரக் காட்சிகளையும், 22 பேர் கொல்லப்படும் காட்சிகளையும் நீக்கிவிட்டால் படத்தை வெளியிடலாம்.

- இந்திய தணிக்கைக் குழு (Sight and Sound Feb 1995)

*3.* இப்படம் இந்தியாவில் திரையிடப்பட்டால் நான் தீக்குளித்து இறப்பேன்.

- பூலான் தேவி (Every Woman Feb 1995)

*4.* இப்படம் தணிக்கை வெட்டுக்களுடன் இந்தியாவில் திரையிடப்பட்டால் நான் சாகும்வரை உண்ணாவிரதம் இருப் பேன்.

- இயக்குநர் சேகர் கபூர். (Guardian Feb. 16, 1995)

*5.* இப்படம் ஒஸ்கார் விருதுக்கான போட்டிக்காக இந்திய அரசின் படமாக தேர்வு செய்யப்படுகிறது.

- Film Federation of India (Sight and Sound Feb. 1995)

*6.* பூலான் தேவியின் வழக்கின்படி இப்படம் ஒஸ்கார் விருதுக்கு செல்வது தடைசெய்யப்படுகிறது.

- இந்திய நீதிமன்றம். (Reuters News December 1995)

*7.* 22 பேர் கொல்லப்பட்ட பெமாயில் நான் இருக்க வில்லை. நான் பலாத்காரப்படுத்தப்படும் காட்சி மறுபடி பார்க் கப்படுவதை நான் விரும்பவில்லை. நான் விக்ரமோடு மேலிருந்து கலவிகொள்ளவில்லை. என்னை அகௌரவப்படுத்தியதன்மூலம் இவர்கள் இந்தியப் பெண்கள் எல்லோரையுமே அகௌரவப் படுத்தியுள்ளார்கள்.

- பூலான் தேவி (பிபிசி விவரணப்படம் Feb. 1995)

*8.* பூலான் தேவிக்கு வெளியில் நடப்பது ஒன்றுமே தெரியாது. அவருக்கு அரசியல் தெரியாது. மேல்ஜாதிக்காரர்கள் அவரை ஆட்டிப் படைக்கிறார்கள்.

- மாலா சென் (பிபிசி விவரணப்படம் Feb. 1995)

*9.* இப்படத்தை எதிர்ப்பவர்கள் ஜாதி ஆதிக்கக்காரர் களாகவோ, பாரதிய ஜனதாக் கட்சியின் ஆதரவாளர்களாகவோ தான் இருக்கமுடியும்.

- பாருக் தோண்டி (Commissioning Editor, Chanal 4, 25 Sep 1995)

*10.* பூலான் தேவி படிக்காதவர்; விவரம் தெரியாதவர். அவரை ஏமாற்றி ஆவணங்களில் கையொப்பம் பெற்றுவிட்டார்கள் மாலா சென்னும் பரூக் தோண்டியும்.

- அருந்ததி ரே (Electric Moon தயாரிப்பாளர் Sunday 11-17 Sep. 1994)

*11.* பூலான் தேவி விவரமறியா அப்பாவி அல்ல. பலியாளும் அல்ல. ஏழை விவசாயியும் அல்ல. இதுவெல்லாம் அரசியல் விளையாட்டு; இதற்குப் பலியாகும் குற்றவாளி. இவர் எதையும் எவருக்கும் செய்யக்கூடியவர்.

- பரூக் தோண்டி (Sunday 25 Sept. 1994)

*12.* பூலானின் இப்போதைய கணவர் பெரும் வர்த்தகர்; மேல் ஜாதிக்காரர். அவர் படத் தயாரிப்பைவிட அதிகமான பணத்தையும், வசூலில் ஒரு பகுதியையும் கொடுத்தால் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளலாமென்று என்னைத் தொடர்புகொண்டார்.

- சேகர் கபூர் (Guardian, Feb. 16, 1995)

மீரா நாயரின் 'சலாம் பாம்பே'க்கு பின்னர் உலக அளவில் அங்கீகரிக்கப்படும் படம் பூலான்தேவி. சலாம் பாம்பே போலவே இப்படமும் இதன் துணிச்சலான சித்தரிப்பு, சொந்த நாட்டைப் பற்றிய விமர்சனம் போன்றவற்றால் வெற்றி பெறுகிறது. இதன் கதையில் வலியுறுத்தப்பட்டிருக்கும் விடயம் உலகெங்குமுள்ள பெண்களுக்கு மிகவும் முக்கியமானது.

- டெரக் மால்கம் (Guardian Feb. 16, 1995)

*14.* பூலான் தேவியாக சீமா பிஸ்வாஸ் நடித்திருக்கிறார். சேகுவேராவுக்கும் றொபின் ஹுட்டுக்கும் இடையில் எங்கேயோ நாம் காணக்கூடிய வர்க்கப்போராளி பூலான் தேவி.

- பிலிப் பிரெஞ் (Observer Feb. 12, 1995)

*15.* பண்டிற் குயின் காட்டுமிராண்டித்தனமான இந்திய ஜாதீய அமைப்பைத் தாக்குகிறது. இப்போதும் ஒடுக்கப்பட்ட கீழ்வர்க்கமான பெண்களின் பிரச்னையைச் சொல்கிறது. இப்படம் நிலப்பிரபுத்துவ யுகத்துக்கு உரியதும் இன்றும் நடைமுறையில் உள்ளதுமான பாலியல் ரீதியில் துன்புறுத்தி இன்பம் காணும் காட்சிகளையும் உடல்ரீதியான துன்புறுத்தலையும் சித்தரிக்கிறது. இது ஓர் உண்மைக்கதை.

- அலெக்ஸாந்தர் வாக்கர் (London Evening Standard Nov. 19994)

*16.* படம் முடிந்து வெளியே வந்தபோது சிலிர்ப்புடனும் மன தாக்கத்துடனும்தான் வந்தேன். நான் எடுத்துக்கொண்ட இறுதிச் செய்தி பெண் வெற்றி பெறுதல். தனது நிபந்தனைகளின்படி அமைப்பை எடுத்துக்கொண்ட ஒரு பெண் அந்த அமைப்பில் போராடி, வாழ்ந்து வெற்றிபெற்றிருக்கிறாள்; உணர்ச்சிபூர்வமானது.

- பமேலா நோவிக்கா (Every Woman Feb. 1995)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லத்தை - ஒன்றிணைவை வலியுறுத்தும் வண்ணம் நிகழ்கிறது. அக்காட்சியின் குதூகலமும், உடல் சுதந்திரமும் பூலான் பலாத்காரப்படுத்தப்படும் வேதனையான காட்சிகளுடன் ஒப்புநோக்கத்தக்கது.

பிரச்னை இதுதான்; இந்திய வாழ்வுக்கு பெண்ணுக்கு orgasm என்று ஒன்று இருப்பதையே தெரிந்துகொள்வது கூடாது. மேலிருந்து பெண் கலவிசெய்வது ஒழுக்கப்பிரச்னை. அவளது பாலியல் கிளர்ச்சியை வெளிப்படையாகக் காட்டுவது ஒழுக்கப் பிரச்னை.

தி. ஜானகிராமனின் 'மரப்பசு'வின் அம்மணி, தனது இறுதி நினைவுகளில் 'பெண் மேலே இருக்கும்' உலகம் வேண்டும் என நினைப்பாள். இந்தியத் தணிக்கைக் குழுவுக்கு அதை இப்போது சத்தம் போட்டுச் சொல்லவேண்டும் போலிருக்கிறது.

இப்படத்தில் உணர்ச்சிபூர்வமான (sentimental) காட்சிகள் சிலவும் உண்டு.

பூலான் தேவி தலைமையேற்றுக் கொண்ட பின்னர் பஜ்ரம்பூரில் கொள்ளையொன்று நடத்தப்படுகிறது. அறிவிப்பு இது: 'பெண்களும் குழந்தைகளும் பயப்படவேண்டாம். அவர்கள் வீடுகளுள் சென்றுவிடுங்கள். ஏழைகளும் பயப்படத்தேவையில்லை.'

நகைக்கடைகள், பட்டுத்துணிக் கடைகள் சூறையாடப்படுகின்றன. பொலிஸ் வாகனங்கள் சீறி வருகின்றன. கொள்ளையர்கள் தப்பிக்க ஓடுகிறார்கள். ஒருவன் சுடப்பட்டு இறக்கிறான். பூலான் அமைதியாக நடந்து வருகிறாள். முகத்தில் பெருமிதம். 'நான்தான் பூலான் தேவி. வாங்கடா, புடிங்கடா; நான்தான் பூலான் தேவி.' ஒரு குழந்தை பரட்டைத் தலையுடன் ஓடி வருகிறது, பெண் குழந்தை. பூலான் கொள்ளையடித்த கால் சலங்கையை அக் குழந்தைக்கு அவளின் திருமணப் பரிசாக கொடுக்கிறாள். 'என்னோடு வருகிறாயா' என்று கேட்கிறாள். தாய் வந்து குழந்தையை அழைத்துக்கொள்ள, காலடிகளின் ஓசை கேட்கிறது.....

மற்றொரு காட்சி: பொலிஸ் நிலையத்தில் நடைபெறும் ஓர் உரையாடல். உரையாடலில் இடம்பெறுபவர்களும் பார்வையாளர்களும் கவனம் கொள்ளாத ஒரு சம்பவமும் அங்கே நிகழ்ந்துகொடிருக்கிறது. அமானுஷ்யமான பெண்ணின் தீனக் குரலும் கதறலும் கேட்கக் கேட்க அவள் பொலிசாரால் அடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறாள். காரணம் தெரியவில்லை. அவள் கோடானுகோடி இந்தியப் பெண்களில் ஒருத்தி. அவள் குரல்தான் அது.

பிற இந்திய மசாலா படங்கள் பாலியல் வன்முறையை ரசனை நோக்கில் காட்டும் படங்கள். குறிப்பான வரலாற்றுச் சம்பவங்களையோ, குறிப்பிட்ட பிரச்னை



## பண்டிற் குயின்:
# கதையும் காட்சிகளும்

பூலான், 'மல்லா' (Malla) என்னும் கீழ் ஜாதி ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள். ஆற்றில் சிறுமியரோடு நீராடிக்கொண்டிருக்கும்போது தனது பெற்றோரால் அழைக்கப்பெற்று, வாங்கிய கடனுக்கு ஈடாக 34 வயது ஆணுக்கு மணமுடித்து வைக்கப்படுகிறாள். தான் வாழப்போன இடத்தில் கிணற்றில் நீரள்ளச் செல்கையில் மேல்ஜாதி தாக்கர் (Thakar) களுக்கும் கீழ்ஜாதி மல்லாக்களுக்கும் தனித் தனியே நீர் மொள்ள இடம் ஒதுக்கப்பட்டிருப்பதைக் காண்கிறாள். அதை எதிர்த்து சுடுசொல் வீசுகிறாள் சிறுமி பூலான்.

அக் கிராமத்தின் சிறுவர்களால் மண்பானை உடைக்கப்பட்டு, வெறுங்கையோடு வீடுவரும் சிறுமி மாமியாரின் ஏச்சுக்குள்ளாகிறாள். கணவனால் அடிக்கப்பட்டு, கதறக் கதற பலாத்காரத்துக்கு உள்ளாகிறாள். கணவனை விட்டு ஓடி வரும் சிறுமியை பெற்றோர் ஏற்க மறுப்பதால் தனியே வாழத் தலைப்படுகிறாள்.

கூலிவேலை செய்து விறகு சுமக்கும் அவள், அந்த ஊர் மேல்ஜாதி தலைவரின் மகனால் பலாத்காரப்படுத்தப்படுகிறாள். அவள் கூச்சலிடும்போது, தன்னை அவள் கலவிக்கு அழைத்ததாக குற்றம் சுமத்தப்பட்டு, கிராமத்து ஆண்களால் அடிக்கப்படுகிறாள். பஞ்சாயத்து கூடி அவளைக் கேவலப்படுத்துகிறது. மேல்ஜாதிக்காரர்களால் திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு சென்ற அவள், அங்கு காவலர்களால் திரும்ப திரும்ப பலாத்காரத்துக்குள்ளாகிறாள். மேல்ஜாதிக்காரர்களின் பாலியல் இச்சைகளுக்காக பணப் பிணையில் வெளிவரும் பூலான், மேல்ஜாதிக்காரர்களின் கையாளான குஜ்ஜார் எனும் கொள்ளைக்காரனால் பலவந்தமாக கடத்தப்பட்டு பலாத்காரப்படுத்தப்படுகிறாள். அக்குழுவிலிருக்கும் குஜ்ஜாரின் இரண்டாம் மட்டத் தலைவனும் கீழ்ஜாதி மல்லாவுமான விக்ரம், குஜ்ஜாரின் இந்த ஈனத்தனத்தை எதிர்க்கிறான். அவன் செவிமடுக்காதபோது அவனைச் சுட்டுக் கொன்றுவிட்டு அவன் குழுவுக்கு தலைமை ஏற்கிறான். விக்ரத்துக்கும் பூலான் தேவிக்கும் நேசம் துளிர் விடுகிறது.

நிஜமான கொள்ளைக்கூட்டத் தலைவர்களும் மேல்ஜாதிக்காரர்களும் பொலிசின் கூட்டாளிகளுமான லாலுராமும் ஸ்ரீராமும் விடுதலையாகி தாம் தலைமையை ஏற்கிறார்கள். விக்ரம் சுடப்படுகிறான். கன்பூருக்கு விக்ரத்தோடு வரும் பூலான் அவன் காயத்துக்கு வைத்தியம் செய்கிறாள். இருவரும் குலவி மகிழ்கிறார்கள்.

பூலான் தேவியும் விக்ரமும் மறுபடி கூட்டத்தோடு இணைகிறார்கள். விக்ரம் சுடப்பட்டு இறக்கிறான். ஸ்ரீராம் பூலானை இழுத்துக்கொண்டு ஓடுகிறான். பெமாய் கிராமத்தின் இருண்ட குடிசையில் கைகள் பின்புறமாக கட்டப்பட்ட நிலையில் முழுக் கொள்ளைக்கூட்ட ஆண்களாலும், கிராமத்து ஆண்களாலும் குரூரமாக பலாத்காரப்படுத்தப்படுகிறாள். அக்கிராமத்து சதுக்கத்தில் நிர்வாணமாக்கப்பட்டு துன்புறுத்தப்படுகிறாள்.

பூலான் அவளது உறவினனான கைலாசிடம் அடைக்கலமாகி, அவன் மூலம் மான்சிங் எனும் கொள்ளைக்காரனுக்கு அறிமுகப்படுத்தப்படுகிறாள். அவன் பெரும்பாலும் முஸ்லிம் மதத்தைச் சார்ந்த கொள்ளைக்காரர்களின் கூட்டத் தலைவனான பாபா முஸ்டாக்கின் தலைமையில் இயங்கும் கீழ்ஜாதியைச் சார்ந்தவன். முஸ்டாக்கின் பின்பலத்தோடு பூலான்தேவி மான்சிங்கின் உதவியுடன் தன் சொந்தக் கொள்ளைக் கூட்டத்தை உருவாக்குகிறாள். ஜங்கராஜ்பூரில் நடந்த அவளின் கூட்டத்தின் தாக்குதலின்பின் பூலான் தேவி எனப் பெயர் பெறுகிறாள் பூலான்.

லாலுராமும், ஸ்ரீராமும் பெமாய் கிராமத்தில் ஒரு திருமண வைபவத்தில் கலந்துகொள்வதாகக் கேள்விப்பட்டு அக் கிராமத்தைத் தாக்குகிறார்கள் பூலான் குழுவினர். அவர்கள் தப்பித்துவிடுகிறார்கள். 24 தாக்கர்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள்.

அரசும், பொலிசும் அவளை வேட்டையாடுகின்றன. ஸ்ரீராம் கொடுத்த தகவலின்படி அவளது ஆட்கள் தேடிக் கொல்லப்படுகிறார்கள். சரணடைந்தவர்கள் பொலிசாரால் கொல்லப்படுகிறார்கள்.

*1983* பெப்ரவரி *12*ஆம் தேதி *10* ஆயிரம் பொதுமக்களின் முன், தனது நிபந்தனையின்படி மான் சிங்கும் பூலான் தேவியும் சரணடைகிறார்கள்.

இறுதிக் காட்சி: பதினாறு வயது பூலான்தேவி சொல்கிறாள்: 'நான் பூலான் தேவி; சகோதரியுடன் கலவி கொள்பவர்களே, நான்தான் அவள்.' ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்று பெண்கள்:

### பூலான் தேவி

*1983*இல் தனது நிபந்தனைகளின்படி சரணடைந்த பூலான் தேவி, *11* ஆண்டுகளின்பின் *1994* பெப்ரவரியில் உயர் நீதிமன்றத்தின் சிறப்பு ஆணையின்படி விடுதலைசெய்யப்பட்டாலும் அவர்மீதான வழக்குகள் இன்னமும் நீதிமன்றத்தில் இருக்கின்றன. இதில் மிக முக்கியமானது, பெமாய் கிராமத்தில் 22 மேல்ஜாதி தாக்கர்கள் கொல்லப்பட்ட நிகழ்ச்சி. விடுதலைசெய்யப்பட்டபோது பூலானின் வயது *34*. ஐந்து ஆண்டுகள், *1979 - 1983* வரை அவர் சம்பல் நதிப் பள்ளத்தாக்கின் ஒடுக்கப்பட்ட மக்களின் காளி மாதாவாக இருந்தார். *1994*இல் இரண்டாம் முறை உமத்சிங் என்கிற மேல்ஜாதி இந்துவை மணந்துகொண்டுள்ளார். சேகர் கபூரின் சொற்களின்படி, பூலான் தேவி இன்னமும் படத்தைப் பார்க்கவே இல்லை. ஆனால், தடை கோருகிறார். இப்போது பூலான் தனது விடுதலைக்கு உதவியவரும், வாழ்க்கை வரலாற்றை எழுதியவருமான மாலா சென்னை தான் சந்தித்ததே இல்லை என்கிறார். தான் பலாத்காரப்படுத்தப்படவில்லை என்கிறார்.

பூலானின் 'குடும்பப் பெண்' பிரமையும், அரசியலில் இருக்கும் ஆசையும், கணவனின் பணம் சேர்க்கும் பண்பும்தான் அவரை இவ்வாறு கூற வைக்கின்றன என்கிறார்கள் விமர்சகர்கள்.

### சுனிதாபட்:

*11* வயது பூலான் தேவியாக படத்தில் நடித்த சிறுமி சுனிதாபட், பம்பாயின் சேரிப்புறத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டவர். அம்மாதிரியான திருமணக் காட்சிகள் நடப்பதை மறுத்துவிட்டாள் சிறுமி. காரணம் கேட்டபோது, தனக்கு ஏற்கனவே திருமணமாகிவிட்டதாகவும் தனது கணவன் வீட்டுக்குத் தான் அனுப்பப்படவிருப்பதாகவும் பயத்துடன் சொல்லியிருக்கிறாள் சுனிதா. சுனிதாவின் பயம் உண்மையில் அவள் வாழ்க்கையில் கணவனிடம் திரும்புவது பற்றிய பயம்தான் என்கிறார் கபூர்.

பலாத்காரப்படுத்தப்படும் காட்சியில் நடிக்க மறுத்துவிட்டபோது, கபூர் அக்காட்சி படப்பிடிப்பை ரத்துச் செய்துவிட்டு, சிறுமியைத் தன்னருகில் இருத்திக்கொண்டு மற்றைய படப் பிடிப்புகளை பார்க்கச் செய்திருக்கிறார். சீமா பிஸ்வாசின் நடிப்புக் காட்சிகள் அனைத்தையும் பார்த்தபின்னர் சிறுவயது பூலானாக தான் நடிக்கவேண்டியதை உணர்ந்த சிறுமி, தனது உண்மையான பயத்தையும் - நடுக்கத்தையும் எல்லா அற்புதமான நடிகைகளையும்போலவே நடிப்பாக வெளிக்கொணர்ந்தாள் என நினைவுகூர்கிறார் கபூர்.

### சீமா பிஸ்வாஸ்:

சீமா பிஸ்வாஸ் நடிப்பு பயின்ற நாடக நடிகை. பெர்டால்ட் பிரெக்ட், இப்சன், மில்லர் போன்றோரின் நாடகங்களில் நடித்தவர். தான் பலாத்காரப்படுத்தப்படும் காட்சிகளிலும், நிர்வாணமாக மக்கள் கூட்டத்தின்முன் நடந்துபோகும் - சித்திரவதைப்படுத்தப்படும் காட்சிகளிலும் அவரால் நடிக்கமுடியாது போய்விட்டது; துக்கம் தாளாது அழுதுவிட்டார். இந்திய வாழ்வில் பொது இடத்தில் பெண்ணின் நிர்வாணம் ஏற்படுத்தும் வேதனை - அவமானம் அத்தகையது. ஒரு பெண்ணாக நடிப்புக்கும் வாழ்வுக்கும் இருக்கும் இடைவெளியை மறந்துவிட்டார் சீமா பிஸ்வாஸ். ஏனெனில், இந்திய சினிமாக்களில் நிர்வாணமாக வருவதும், பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்படுவதாக நடிப்பதும் இழிசெயல். அப்பெண்ணைக் கேவலமாகப் பார்ப்பதுதான் ரசிகனிலிருந்து, பத்திரிகையாளன், அரசியல்வாதிவரை வழக்கம். மேலும், இந்திய சினிமா, நாடக பயிற்சிப் பள்ளிகளில் இத்தகைய நிஜத்துக்கும் நிழலுக்கும் இடையிலான முரண்பாடுகளை கற்பிப்பதும் இல்லை.

பெமாய் நிர்வாண இழிவு காட்சியின் மக்கள் கூட்டக் காட்சியை மட்டும் எடுத்துவிட்டு, அந்த ஏற்பாட்டை ரத்துச் செய்துவிட்டார் கபூர். படம் முழுவதையும் எடுத்துவிட்ட இறுதியில், இத்திரைப்படக் கலை ஒருவகை விளையாட்டு என்பதை சீமா உணர்ந்தபின், வாழ்வுக்கும் நடிப்புக்குமான இடைவெளியை படம் முழுவதும் அவர் உணர்ந்தபின், மக்கள் கூட்டத்தின் முன் அந்த நிர்வாணக் காட்சியை எடுத்து முடித்ததாக சொல்கிறார் கபூர்.

சீமா பிஸ்வாஸ் ஓர் அற்புதமான ஆளுமையுள்ள நடிகை என்பதை நிரூபித்திருக்கிறார். இப்படம் உலகின் சிறந்த படங்களில் ஒன்றாக தன்னை நிலைநாட்டிக்கொண்டிருப்பதற்குக் காரணம் சீமா பிஸ்வாசின் நடிப்புத்தான் என்கிறார் கார்டியன் விமர்சகர் டெரக் மால்கம். சீமா பிஸ்வாசும், சேகர் கபூரும் பிரெஞ்சு கேன்ஸ் திரைப்படவிழாவில் பூலான்தேவி திரையிடப்பட்டபோது கலந்துகொண்டார்கள். சீமாவுக்குக் கிடைத்த அங்கீகாரமும் பெருமிதமும் மனிதர்கள் எல்லோரும் பெருமிதப்படத் தக்கது. குறிப்பாக, இந்தியப் பெண்கள் பெருமிதப்படத் தக்கது என்பது முக்கியம். ❑

களையோ, குறிப்பிட்ட ஜாதிகளையோ பற்றி கேள்விக்கு உள்ளாக்காத படங்கள். ஆனால், பூலான்தேவி படம் *1970 - 80*களில் உத்தரப் பிரதேசத்தின் சம்பல் பள்ளத்தாக்கில் நிகழ்ந்து வந்த மேல்ஜாதி பாலியல் ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்த, கீழ்ஜாதி பெண்ணொருத்தியின் சமூக வரலாற்றுச் சித்திரம். புனைவுகள் புகைமூட்டம் போன்றவை. அது கண்களையும் சிந்தனையையும் மறைக்கும். நிஜத்தை அடிப்படையாகக்கொண்ட குறிப்பான சித்தரிப்புகள் ஆதிக்க வர்க்கங்களை கேள்வி கேட்கும்; ஆட்டம் காணவைக்கும். அரசியலைச் சவாலுக்கு அழைக்கும். இதுதான் பூலான்தேவி படம் தணிக்கைக்குழுவின் முன்வைத் திருக்கும் மிகப் பெரும் நெருக்கடி.

காலனித்துவ எதிர்ப்பு, ஆதிக்க எதிர்ப்புச் சினிமாவை தோற்றுவித்த Cinema Novo இயக்கத்தின் பிதாமக ரான பிரேசில் நாட்டு இயக்குநர் கிளாபர் ரோச்சா சொல்வார்: 'காலனித்துவ ஆதிக்கத்துக்கு எதிரான ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்ட அழகியல், வன்முறையின் அழகியல்; பசியின் அழகியல்.'

மேல்ஜாதி ஆதிக்கத்தின் பாலியல் ஜாதி வன்முறை அழகியல்தான் இப்போது நிலவும் அழகியல். இந்திய சினிமாவில் ஆதிக்கம் செலுத்தும் அழகியல் அதுதான். தணிக்கைக் குழுவின் அழகியலும் அதுவேதான். அதற்கு எதிரான எதிர் வன்முறை அழகியல்தான் பூலான் தேவி சினிமா முன்வைக்கும் அழகியல்.

இது, பசியினதும் வன்முறையினதும் போராட்டத்தினதும் அழகியல்; இதனை உலகெங்குமுள்ள நல்ல விமர்சகர்களும், இடதுசாரிகளும், பெண்ணிலைவா திகளும் உணர்ந்திருக்கிறார்கள். இப்படம் பற்றிய பிரச்னைகளை சிந்திக்கையில் ஏற்படும் முழுமையான ஒரே ஆறுதல் இதுவேதான். ❑



"எந்தப் படைப்பும்
அது நிலைகொண்டிருக்கும்
காலத்தையும்
பிரச்னையின் உக்ரத்தையும்
உணர்ச்சிக் கொந்தளிப்பையும்
சொல்லாதுவிட்டால்
அதில் அர்த்தமேதுமில்லை"

- சேகர் கபூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2

# மணிரத்தினத்தின் பம்பாய்

> **தமிழ் சினிமாவை புதிய பிரதேசங்களுக்குக் கொண்டு போயிருக்கிறார் மணிரத்தினம்**

'பம்பாய்' படம் கடைசியில் வந்தே விட்டது. இரண்டு வருடங்களாக தணிக்கைக்குழு, இந்திய அரசியல் வாதிகள், மத அடிப்படைவாதிகள், காவல் துறையினர் போன்றவர்களுக்கிடையில் இழுபட்டு, அந்தக் 'காயங்களுடன்' அது வெளிவந்திருக்கிறது. மணிரத்தினம், சினிமாவை தொழில்நுட்பச் சாதனமாகவும் சமூக விமர்சன ஊடகமாகவும் நன்கு உணர்ந்தவர். மௌனராகம், ரோஜா இப்போது பம்பாய் படத்தின் மூலம் தமிழ் சினிமாவை புதிய பிரதே சங்களுக்குக் கொண்டு போயிருக்கிறார்.

பம்பாய், 1992ஆம் ஆண்டு அயோத்தியில் இடிக்கப்பட்ட முஸ்லிம் பாபர் மசூதி சூறையாடலைத் தொடர்ந்து பம்பாயில் 1992, 1993 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மதக் கலவரம் பற்றிப் பேசினாலும், இந்தியாவெங்கும் நிலவுகின்ற மத உணர்வுப் பதட்டம் பற்றி விரிந்த அளவில் அது பேசுகிறது.

தமிழகத்தின் நெல்லை மாவட்டம் மாங்குடியில் காதலர்களைப் பிரிக்கும் மத உணர்வு, பம்பாயில் மத அடிப்படை வாதிகளால் விசிறிவிடப்பட்ட மதவெறி, அரசியல் பூகம்பமாக வெடித்து ஆயிரக் கணக்கான மக்களின் உயிர்களைப் பலி கொள்கிறது.

வரலாற்று ரீதியில் இந்திய - பாகிஸ்தான் பிரிவினையின் பின்னாலும் வேரோடிப்போன மதத் துவேஷத்தின் ஆழ் மனத்தைப் படம் பேசுகிறது. இந்து வாலிபனுக்கும் முஸ்லிம் யுவதிக்கும் ஏற்படும் காதலினூடே மதவெறியின் கொடுமை விவரிக்கப்படுகிறது. மதங்களின் அருவருப்பு தீண்டமுடியாத இரட்டைக் குழந்தைகளின் வாழ்வுக்கு நேர்கிற கொடூரமான சோகம் சூழ்ந்த இடிபாடுகளிடையில் மதவெறியினால் சிந்தப்படும் இரத்த நெடியும், நிணமும் நாறும் தெருக்களுக்கிடையில் மனிதம் மாண்டு போயிருப்பதை படம் கோபத்துடன், தார்மீக ஆவேசத்துடன் விசாரணை செய்கிறது.

இயல்பான மனிதர்கள், இயல்பான அளவான குணசித்திர விவரிப்பு, ரஹ்மானின் இந்துஸ்தானி - அராபிய synthetic இசை, ராஜீவ் மேனனின் காமரா என தொழில்நுட்பமெனும் அளவில் படம் புதிய சர்வதேச எல்லைகளைத் தொடுகிறது. படம் தொடங்கிய அரைமணிநேரக் காட்சிகள் அழகும், குதூகலமும், கடல் அலைகளின் நீர்த் தெளிப்பும், ஆங்காரமும், நளினமும் கொண்டவை. நாஸர், மனிஷா கொய்ராலா, அரவிந்சாமி, மற்றும் முஸ்லிம் தந்தையாக வருபவர் போன்றோரின் நடிப்பு வாழ்க்கையாகியிருக்கிறது.

படத்தில் சில காட்சிகள் மிகமிக நுட்பமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. காதலனைத் தேடி ஓடிவரும் முஸ்லிம் பெண் பர்தாவை உதறுவது, நாஸர் வீடு தேடிவந்த முஸ்லிம் பெண் சீர்வரிசையுடன் வீட்டுக்குள் நுழைகையில் குழந்தைகள் மதிப்பீடுகளற்று கரம் பிடித்துக் கொள்வது, பம்பாய்க்கு வந்த புதுமண மகள் சந்தோஷத்துடன் சந்தையில் பொருள்கள் வாங்கிவருகையில் இடி போல ஸ்வஸ்திக் சின்னங்களுடனும் இந்து வெறிக் கூச்சலுடனும் ஊர்வலம் நுழைவது, ஆணும் பெண்ணுமற்று, மதம் இனம் அற்று, அலி மனித உன்னதம் பற்றி குழந்தையிடம் உரையாடுவது, முஸ்லிம் சம்பந்தியைக் காப்பாற்றி குரானைப் பத்திரமாக எடுத்துத் திரும்பும் திருநெல்வேலி சைவப் பிள்ளை நாஸர் 'காஸ்' வெடித்து மரணமுறுவது என உன்னதமான வாழ்வின் க்ஷணங்கள் படத்தின் போக்கிலேயே நம்மை உலுக்கும் காட்சிகள்.

ஆயுத மோதல்களுக்கிடையிலும் உலகப் போர்களுக்கிடையிலும் பந்தாடப்படும் மனிதர்களின் வாழ்வையும், குழந்தைகளின் உலகையும் சித்தரிப்பதென்பது உலக சினிமாவில் நிகழ்ந்துவரும் முக்கியமான கருநிகழ்வு. வியட்நாம் யுத்தத்தில் காலிழந்த, வாழ்விழந்த மனிதர்களின் வாழ்வின் துயரம் பற்றிப் பேசும் Tom Cruis நடித்த Oliver Stone படம் Born 4th of July. ஆனந்த் பட்டவர்த்தனின் இந்திய வாழ்வு பற்றிய Triology மத அடிப்படைவாதிகளின் பொய்முகத்தை திரை விலக்குகிறது.

இவ்வகையில் துன்பமயமான குழந்தைகளின் சிதறுண்ட உலகம் பற்றி இப்படம் பேசுகிறது. வாழ்வின் மேன்மை பற்றி, குழந்தைகளைக் கொல்வதில் எவருக்கு இவ்வுலகில் எதன்பெயரில் சம்மதம் என்று உரத்த குரலில் கேள்வி எழுப்புகிறது. ஒரு கொந்தளிப்பான பிரச்னையை அக்கறையுடன் சொல்ல முயன்ற படத்தில் எதிர்மறை காயாக காண்கிற இரு விடயங்கள்:

1. படம் இந்து ஆண்மகனின் பார்வையில் சொல்லப்பட்டிருப்பதால் அதற்குரிய பலவீனங்களோடு படம் வந்திருக்கிறது.

2. மத அடிப்படைவாதம் பற்றி யதார்த்த நிகழ்வுகளிலிருந்து கேள்வி எழுப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் யதார்த்தத்துக்கு மாறாக மனம் திருந்தும் மதத் தலைவர்கள் உபதேசத்தால் மாறிவிடும் மக்கள் கூட்டம்பற்றி விருப் பார்வத்துடன் படத்தை முடித்து வைக்கிறது.

சமீபத்திய இந்து-முஸ்லிம் பிரச்னையின் அடிப்படைத் தீக் கங்கு, அயோத்தி பாபர் மசூதி இடிப்புப் பிரச்னைதான். இது இந்துக்களின் வெறியாட்டம். இதைத் தொடர்ந்துதான் பம்பாய்க் கலவரங்கள். இப்படத்தில் கலவரக் காட்சி அமைப்புக்களும் சூறையாடுதலும் மிகத் தெளிவான காட்சிகளாக சித்தரிக்கப்பட்டிருப்பது மூன்று காட்சிகளில்:

1. பம்பாயில் பாபர் மசூதி இடிப்பைத் தொடர்ந்து முஸ்லிம்கள் (குல்லா அணிந்தவர்களாக சித்தரிக்கப்படுகிறது) சூறையாடலில் இறங்குகிறார்கள்.

2. ஸ்வஸ்திக் சின்னம் போட்ட வீட்டில் சக்கர நாற்காலியில் இருக்கும் குழந்தை உள்பட மனிதர்கள் எரிக்கப்படுகிறார்கள். எரித்தவர் முஸ்லிம். எரிக்கப்பட்டவர்கள் இந்துக்கள்.

3. அரவிந்சாமியின் குழந்தை, மற்றும் நாஸரைக் கொல்ல வருபவர்கள் நீண்ட வாள்கள் ஏந்திய முஸ்லிம்கள்.

இக்காட்சிகள் தெளிவான மனிதர்கள் அடையாளம் காணக்கூடிய தனிக் காட்சிகள். இந்துக்கள் சூறையாடும் காட்சிகள் கூட்டமாக, முகங்களற்று, தொடர்ந்த காட்சியமைப்பு அடுக்குகளாகவே சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. மசூதி இடிக்கப்பட்ட காட்சிகள் cinematic காட்சிரூபமாக இல்லை. பத்திரிகைச் செய்திகளாகவும் symbolic shots ஆகவுமே இருக்கின்றன.

ஆக, ஸ்தூலமாக சூறையாடல் காட்சிகளில் சித்தரிக்கப்பட்ட சம்பவங்கள் முஸ்லிம்கள் சம்பந்தப்பட்டவை. இந்துக்களின் சூறையாடல் மங்கலாக சித்தரிக்கப்பட்டிருக்கிறது. மிகவும் கொந்தளிப்பான பிரச்னையை சமநிலையுடன் சித்தரிக்க முயன்றிருக்கும் மணிரத்தினத்தின் நேர்மையில் நாம் சந்தேகப்படமுடியாது. ஆயினும் இந்த சமனற்ற சித்தரிப்பு இந்து இளைஞனின் வழி கதை சொல்லல் மூலம் நேர்ந்திருக்கிறது. இந்நிலையோடு மேலும் சிக்கலடைந்திருப்பதற்கான காரணமாக இந்திய தணிக்கைக்குழுவின் தலையீடுகள், சிவசேனைத் தலைவர் பால் தாக்கரேயின் தலையீடுகள், பம்பாய் பொலிஸ்துறை போன்றவை இருக்கக் கூடும் என்றே கருத முடிகிறது.

இந்து மதத் தலைவரின் பாத்திரமே முற்றிலும் நீக்கப்படவேண்டுமென பால் தாக்கரேயினால் நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறது. வசனங்கள், காட்சிகள் வெட்டப்பட்டிருக்கின்றன. இந்தவகையில் வெட்டப்பட்ட 'காயங்கள்'தான் படத்தின் சமத்துவமற்ற நிலைக்கான ஒரு காரணமாக இருந்திருக்கிறது. பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் ஏன் அதிகமாக முஸ்லிம்கள் மட்டுமே கொல் லப்ப ட்டார்கள் என்கிற கேள்வியெல்லாம் நியாயமாக படத்தில் எழுப்பப்பட் டிருக்கிறது.

படத்தின் இறுதிக்காட்சி நம்பிக்கையளிப்பதாகவும் மானுட நேயத்தை உயர்த்திப் பிடிப்பதாகவும்தான் இருந்திருக்க வேண்டும். கலைஞனின் நோக்கமும் இறுதியில் அதுவேதான். வலியுறுத்தப்பட வேண்டியது தேசபக்தியும் ஒருமைப்பாடும் அல்ல, மாறாக மானுட நேயம், மானுட அன்பு. மானுட நேயத்தில் கிளை விடுவதுதான் ஒருமைப் பாடும் தேசபக்தியும். உபதேசங்களில் தீர்வு வந்துவிடமுடியாது. சமாதானத்துக் கான பாதை மிக நீண்டது.

இறுதிக்காட்சிகளில் குங்குமப் பொட்டிட்ட பெண்ணையும் குழந்தையையும் காப்பாற்றும் முஸ்லிம் பெண்ணின் ஆவேசம்; வேறுபாடற்ற மனிதரைக் காக்கும் அலியின் உத்வேகம்; மசூதியில் அடைக்கலமான இந்துவைக் காக்கும் முஸ்லிம் பெரியவர்; தன்னைக் கொல்லக் கூச்சலிடும் அரவிந்சாமியின் தார்மீகக் கோபம் போன்றவை மானுட நேயத்திலிருந்து எழுவன. தேசபக்தி பற்றிய உபதேசம் அரசியல். உயிர்வாழ்தலின் மகத்துவம் பற்றிய ஆவேசம் - மானுடப் பெருமிதம் - மனித நேயம். ஆவேசமும் தார்மீக நியாயமும் கொண்ட மனிதர்கள் திரையில் நிறைவதோடு படம் முடிந்திருந்தால் அது படைப்பாயிருக்கும். தேசபத்தி பற்றிய உபதேசத்தோடு உரத்த பாடலுடன் படம் முடிவதால் பிரச்சாரத்தின் எல்லையைப் படம் தொடுகின்றது. தீர்வு அரசியல்வாதியின் வேலை. மானுட நேயமே கலைஞனின் உலகு. மணிரத்தினம் அசலான படைப்புகளைத் தரவல்லவர் என்பதை பம்பாய் படம் மறுபடியொருமுறை நமது நம்பிக்கையைப் புதுப்பிக்கக் கோடிடுகிறது. ❑

# 3 தி. ஜானகிராமனின் மோகமுள்

A Time to Dance எனும் நாவல் மெல்வின் பிராக்கினால் (Melvyn Bragg) எழுதப்பெற்றது. பிரிட்டிஷ் தொலைக்காட்சி நிறுவனத்தின் திரைப்படம் இது. மெல்வின் பிராக் மிகச் சிறந்த நாவலாசிரியர். நவீன ஆங்கில விமர்சகர். தொலைக்காட்சி நிகழ்ச்சியாளர். அறிவாளி. போரிஸ் பாஸ்டர்நாக் பற்றிய திரைப்படம், வனஸா ரெட்கிரேவ், ஜூடி போஸ்டர் போன்றவர்களுடனான இவரது நேர்முகங்கள் புகழ்வாய்ந்தவை.

A time to dance திரைப்படம் ஓர் ஆங்கிலேய கிராமிய நகரத்தில் நிகழும் கதை. அமைதியாக வாழ்ந்துவரும் ஒரு மத்தியதர வர்க்க வங்கி அதிகாரி தனது வீட்டிலேயே தனக்கேயான மிகப்பெரும் நூல்நிலையம் கொண்டவர். அவருக்கு அன்பான, அவர் மிக நேசிக்கும் நோயாளி மனைவி. இவர்களது வாழ்வில் குறுக்கிடுகிறாள் பள்ளி செல்லும் ஓர் இளம் பெண். அவரிடம் புத்தகங்கள் வாங் கவரும் அப் பெண் அவருக்கு புதிய உல கங்களை அறிமுகப்படுத்துகிறாள். குதூகலமும், இளமையும், புல்வெளிகளும், கவிதையும் நிறைந்த உலகம் அது. அவள் தரும் உடல் சார்ந்த அநுபவம் அவரது உடலளவிலும் ஆன்மீக அளவிலும் உன்மத்த உலகங்களுள் அவரை மிதக்கவைக்கிறது. பிரமிப்பும் சந்தோஷமும் பரவலும் நிறைந்த புது உலகம் அவரை அறவியல் கடந்த மனிதனாக ஆக்கிவிடுகிறது. புற உலகம் அவரை அதன் குரூரத்துடன் தாக்குகிறது. அப்பெண்ணின் புறநகர்க் குடும்பம் அவரிடமிருந்து பணம் பறிக்கிறது. அவரால் கர்ப்பமுறும் அப்பெண் அவருக்கு அறிவித்துக்கொள்ளாமல் கருச்சிதைவு செய்கிறாள். அவளைத் தேடி அம்மனிதர் அலைகிறார். மத்தியதர வயதுக்காலத்தில்

## மானுட ஜீவனின் மாறாத துயரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தன் உடலையும் ஜீவனையும் மறு கண்டு பிடிப்புச் செய்து தருகிறாள் அப்பெண். அப்பெண் இப்போது அவரைக் காண மறுத்து, விலகி ஓடுகிறாள். ஒரு சந்தைக் கடையில் அவளைக் கண்டுவிட்ட அவர், அவள் பின்னே கதறி கொண்டே ஓடுகிறார். தெருக்கள் தாண்டி, சாலை வண்டிகளைத் தாண்டி, குடியிருப்புகளைத் தாண்டி பைத்தியம் பிடித்த மனிதர் மாதிரி அவள் பின்னே அவர் ஓடிக் கொண்டிருக்கிறார். அவர் அந் நகரத்தின் மரியாதை மிக்க, மிகப் படித்த, அன்பான கணவனாயிருக்கும் பிறரைத் துன்புறுத்தாத மனிதர். என்ன நேர்ந்து விட்டது அவருக்கு?

ஆண், பெண் உறவில் உறுத்திக்கொண்டிருக்கும் மோகமுள் ஏற்படுத்தும் ரணம் உலகெங்கும் ஒன்று தான் என்பதை இப்படம் நிரூபணம் செய்கிறது.

ஜானகிராமனின் 'அம்மா வந்தாள்' இந்து, 'மோகமுள்' யமுனா, 'மரப்பசு' அம்மணி போன்றவர்கள் சனாதனிகளுக்கும், ஒழுக்கவாதிகளுக்கும் எப்போதுமே பிரச்னைகளுக் குரியவர்களாகவே இருப் பார்கள். ஜானகிராமன் பற்றிய ஜெயகாந்தனின் காட்டமான ஒழுக்கவாத விமர்சனத்தின் அதிரல் இன்னமும் ஞாபகமிருக்கிறது. சங்கீதம், தேவதாசி முறை, தன் வயதுக்கு அதிகமான பெண்ணின் மீதான மோகம் போன்றவை பற்றிய சித்தரிப்புகள் தமிழ் சினிமாவில் ஏற்கனவே உண்டு.

கே. விஸ்வநாத்தின் சங்கராபரணம், சிப்பிக்குள் முத்து, சலங்கை ஒலி, ராக தேவதை; கே. பாலசந்தரின் சிந்துபைரவி, அபூர்வராகங்கள் போன்றவை அவை.

சங்கராபரணத்தில் தேவதாசி முறை, சிந்துபைரவியில் திருமணம் மீறிய பாலுறவு, அபூர்வ ராகங்களில் தன் வயதுக்கு மேலான மத்தியதர வயதுப் பெண்ணிடம் மோகம் போன்றவை சொல்லப்பட்டிருக்கிறது. இப்படங்களின் இசை பற்றிய தெய்வீகப்படுத்தல், ஆத்மாநுபவம் பற்றிப் பேசப்பட்டிருக்கிறது. தேவதாசி வாழ்வின் துயரம் பேசப்பட்டிருக்கிறது. இசை பற்றிய தெய்வீகத் தன்மை தமிழ் சினிமாவின் மரபான உணர்ச்சி நாடகக் காட்சிகள் (melo drama) காதல் பாடல்கள்,வில்லன்கள் வழி இப்படங்களில் வெளியிடப்பட்டிருந்தது. கே. விஸ்வநாத்தின் பெரும்பாலான படங்கள் தெலுங்குப் படங்கள். சங்கராபரணம் தவிர, அனைத்தும் மொழிமாற்றம் செய்யப்பட்டவை. சங்கராபரணம் அதே தெலுங்குக் கீர்த்தனைகளுடனேயே தமிழில் மிக நன்றாக ஓடிய படம். பாலசந்தரின் படங்கள் அசலான தமிழ்ப் படங்கள்.

இச் சூழலில்தான் மோகமுள் படம் ஏற்கனவே இருந்துவரும் தமிழ் சினிமா சங்கீதப் படங்களின் சூழலுக்குள் நுழைகிறது. ஏற்கனவே சொல்லப்பட்ட படங்கள் அனைத்துமே சினிமா இயக்குநர்களால் சினிமாவுகென்றே அவர்களின் சினிமா மொழி அடிப்படையிலேயே கட்டமைக்கப்பட்டு சொல்லப்பட்ட படங் கள். பார்வையாளனுக்கு அக் கதைகள் பற்றிய முன்மதிப்பீடுகளோ, எதிர்பார்ப்புகளோ அப் படங்கள் பற்றி இல்லை. ஆனால், ஜானகிராமனின் மோகமுள் அப்படியானது அல்ல. மோகமுள் ஆண் பெண் உறவு பற்றிய தீவிரமான சித்தரிப்பு. காட்சி அல்ல, புறநிலை அசைவுகள் அல்ல, எழுத்து. கற்பிதங்களுக்கும் அவரவர் தனிமனித அநுபவ விரிப்புக்கும் இடம் தரும் வடிவம் எழுத்து. தத்தமது உலகங்களை விரித்துக் கொண்டே போகும் வாய்ப்பு இலக்கிய வடிவத்தில் உண்டு.

திரைப்படம் ஒரு காட்சிரூப வடிவம். புறநிலை அசைவுகளும், இயற்கையும், சப்தமும் செயல்படும் உலகம். உள்மன உலகை, நெருக்கடிகளை சப்தத்தின் மூலம் நிசப்தத்தின் மூலம் வடிவச் சித்தரிப்புகள் மூலம் காட்சிரூபப் படுத்த வேண்டும். இந்தக் காட்சிரூபப்படுத்தல் உணர்வலைகளை எழுப்ப வல்லதாயிருத்தல் வேண்டும்.


ஜானகிராமனின் நாவல் ஜீவனுடன் அதன் தத்துவ விசாரணையுடன் தீவிர மாகச் செயல்படும்போது தமிழ் சினிமா மரபு melodrama நிராகரிக்கப்பட வேண்டும். சினிமாவை காட்சிரூப சாதனமாகக் கையாளத் தெரிந்தவன் நாடக மேடைச் சித்தரிப்பை நிராகரிக்க வேண்டும். இதை இரண்டு விடயங்களின் மூலமே சாதிக்க முடியும்:

1. நாவலின் ஜீவனுள்ள உரையாடல்கள் அப்படியே கையாளப்படுதல்.

**ஆண் பெண் ணில் பிரமிப்பதும்,
பெண் ஆணில் பிரமிப்பதும்,
நிசப்தம் சப்தத்தில் கரைவதும்,
மௌனத்தில் சலனம் அர்த்தம் கொள்வ தும்
கால மாற்றத்தில் முடிந்துவிடுகிற விடயமா?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2. அகத்தின் உணர்ச்சிகளை அதீத ப்படுத்திய அசைவுகளின் மூலம் காண்பிப்பதைத் தவிர்த்து, close up காட்சிகளின் மூலம் மனதின் சலனத்தை நிதானமாக வெளிப்படுத்தும் புற உருவை (பிரதான மாக முகத்தை) பார்வையாளனின் மன உணர்வு விரிப்புக்குக் கொண்டுபோவது.

இது இரண்டு அம்சங்களின் முக்கியத் துவத்தையும் மிகச் சரியாக ஞான. ராஜசேகரன் உணர்ந்திருக்கிறார். யமுனாவாக வரும் அர்ச்சனா ஜோக்லேகருக்கு நவரச முகம், அலட்சியமான அனாவசியமான துக்கம் ஆழவோடிய கண்கள். பாபுவாக வரும் அபிஷேகுக்கு திரிசங்கு சொர்க்க நிலையை நிறுவும் முகம், குரல், உடலமைப்பு. ஜானகிராமன் நாவலில் எழுப்பிய அதே உணர்ச்சிகளை அநுபவ சுதந்திர விரிவை ராஜசேகரன் சினிமா வடிவத்துக்குள் மிகுந்த சிரத்தையுடன் சாதித்துக்காட்டியிருக்கிறார். இரண்டு காட்சிகளை உதாரணமாகச் சுட்டலாம்:

1. திருமணம் திரும்ப திரும்ப தள்ளிப் போவதைப் பற்றிய தோல்வியுணர்வு சிறிதுமற்று, திருமண வாழ்வு பற்றிய கிளர்ச்சியற்று இருக்கும் யமுனாவை பாபு கேட்கிறான்: 'எப்படி உன்னால் இப்படி இருக்க முடிகிறது?'

யமுனா சொல்கிறாள்: 'முப்பத்திரெண்டு வயதில் என்ன மாதிரியான கிளர்ச்சிகளை - எதிர்பார்ப்புகளை நான் கொண்டிருக்க முடியுமென நீ எதிர்பார்க்கிறாய்?' அப்போது கமரா யமுனாவின் முகத் துக்குப் போகிறது. முதிர்ந்த முகம். கண் களைச் சுற்றிலும் கருநிழல் படிந்த ஆழ மான குழிந்த கண்கள். இந்த கட்டம் பேசும் உணர்வுகள் ஆயிரம், ஆயிரம்.

2. பாபுவைத் தேடி யமுனா வரும் இறுதிக் காட்சி. கூடல் முடிந்தபின் யமுனா கேட்கிறாள்: 'இதற்குத் தானா எல்லாம்?'

இவை அப்படியே நாவலில் வரும் ஜானகிராமனின் வார்த்தைகள்.

A classic love story of 1950's என்று விளம்பரத்தில் இருக்கிறது. பிராமணீய சமூக அமைப்புக்குள் சரிந்து வரும் மதிப்பீடுகள், ஆத்மாநுபவம் வியாபாரமாகி வரும் சூழல், தேவதாசி முறையின் கொடுமை, அதை நிதானமாகக் காத்துவரும் பிராமணீய அமைப்பின் ஆதிக்கம், மனிதரைத் தூக்கியெறியும் அதன் காரியத்தன்மை போன்றவை 1950இன் பிரத்தியேகத் தன்மையுடன் இப்படத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. யமுனாவினதும் பாபுவினதும் பிரச்னை 1950களோடு முடிந்துவிடும் மோகமா? ஆண் பெண்ணில் பிரமிப்பதும், பெண் ஆணில் பிரமிப்பதும், நிசப்தம் சப்தத்தில் கரைவதும், மௌனத்தில் சலனம் அர்த்தம் கொள்வதும் கால மாற்றத்தில் முடிந்து விடுகிற விடயமா?

பெண்ணிலைவாதம் போன்ற சிந்தனைப் போக்குகளோ, ஆணாதிக்கம் போன்ற கருத்தமைவுகளோ இப்பிரச்னைகளைக் கடந்து போய்விடுகின்றனவா? மோகம் என்பது தான் என்ன? இப் பிரச்னை பிறர் சொல்வதுபோல் மத்திய தர வர்க்கத்தின் மூளைசார்ந்த பிரச்னையா? தன்னில் கழிவிரக்கம் கொள்ளும் 'மோகமுள்' யமுனா 'அம்மாவந்தாளி'ல் மரபை உதறும் இந்துவாகி, 'மரப் பசு' அம் மணியின்மூலம் தன் விடுதலைச் சிறகை விரித்துக் கொள்கிறாள்...

விடுதலையிடத்தில் முடிவுகள், தீர்வுகள் இல்லை. ஜானகி ராமனிடத்தில் ஜான. ராஜசேகரனிடத்தில் வாழ்வினிடம் இல்லை.

மோகமுள் மானுட ஜீவனின் மாறாத துயரம். இளையராஜா தன் இசை மூலமும்; கமரா கலைஞன் நிழல் அடர்ந்த கிராமத்துச் சாலைகளையும் தோட்டங்களையும் நீர்த்துளியில் தெறிக்கும் ஒளியையும் படித்துறையின் அழகையும் உயிருள்ள மனிதர்களையும் தன் ஒளிக்குள் அகப்படுத்தியதன் மூலமும் இந்தத் துயரத்தை மிகுந்த கனமுள்ளதாக ஆக்கியிருக்கிறார்கள். ❑

- 'பண்டிற் குயீன்' தொடர்பாக பூலான் தேவிக்கும் சனல் – 4, பிரெஞ்சு பதிப்பகம் ஆகியவற்றுக்குமிடையே மார்ச் இறுதிப் பகுதியில் சில உடன்பாடுகள் ஏற்பட்டுள்ளன.
  1. சனல் – 4 நிறுவனம் பூலான் தேவிக்கு 40 ஆயிரம் ஸ்ரேர்லிங் பவுண் (20 லட்சம் இந்திய ரூபா) வழங்கவேண்டும்.
  2. பூலான் தேவி குறிப்பிடும் சில காட்சிகளை நீக்கவேண்டும்.
  3. படத்தின் ஆரம்பத்தில் 'இது ஓர் உண்மைக் கதை' என்றிருப்பதை நீக்கி விட்டு, 'மாலா சென்னின் நூலைத் தழுவியது' என்று வேண்டுமானால் குறிப்பிடலாம்.
  4. பிரெஞ்சு பதிப்பகம் இனிமேல் வெளியிடும் வெளியீடு மீதோ, திரைப் படம் மீதோ சனல் 4 எவ்வித தடையோ, நிபந்தனையோ விதிக்கக்கூடாது
- 'பம்பாய்' திரைப்படம் பம்பாயிலும் ஆந்திரா, கர்நாடகாவிலும் திரையிடப்படுவது வாபஸ்பெறப்பட்டிருக்கிறது.
  கர்நாடக சட்டசபையில் மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ஒருவர், இத் திரைப்படம் எவ்வித தணிக்கைக்கும் உள்ளாக்கப்படாமல் முழுமையாகவே திரையிடப்படவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார்.
- 'மோகமுள்' தமிழ்நாட்டில் முன்காட்சிகளாக பல தடவைகள் திரையிடப்பட்டபோதும், வியாபார ரீதியில் இதனைத் திரையிடுவதில் இன்னமும் பிரச்னைகள் இருந்து கொண்டே இருக்கின்றன.


VINNEY VIGNES

CERTIFIED ACCOUNTANTS &
REGISTERED AUDITORS

COMPLETE ACCOUNTANCY AND TAXATION SERVICES


84 Ilford Lane
Ilford, Essex IG1 2LA

Tel: 081-553 5876 Fax: 081-553 3721
Mobile: 0956 277112




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிறுகதை: துவாஜன்*




புதர் மறைவிலிருந்து அந்தக் கண்கள் அவனையே பார்த்துக்கொண்டிருந்தன. கண்கள் மட்டும்தான் தெரிந்தன. ஏனைய பிரதேசங்களை செடிகொடிகள் மறைத்திருந்தன. அந்தப் பார்வையின் அகோரம் கூடுவதுபோல் தெரிந்தது. கண்களில் தெரிந்த வேட்கை அவனை வேட்டை ஆடிவிடும்போல் பட்டது. ஆயினும், அவனுள் அச்சம் எழவில்லை. ஆனால், அந்தப் பார்வையைச் சந்திக்கக் கூடாதென்று ஒரு சிறு குறுக்கம் மட்டும் மேலெழுகிறது. இருந்தும் அந்தக் குறுக்கம்கூட வலுக்கொண்டிருக்கவில்லை. ஏனெனில், வழமையான வேட்டைக்காரன்போல், அந்தக் குறுக்கத்தை உதறிக்கொண்டு அதன் பார்வையை எதிர்கொண்டு வெறித்து நோக்கவேண்டும் போன்ற வேட்கை அதன் பார்வையால் தூண்டப்படுகிறது. அதன் தூண்டுதலால் கிளர்வுற்று அவன் தனது கள்ளப் பார்வையை எறிந்தபோது, அதன் விழிகளில் குரூரமான வெற்றி முறுவல் தெரிந்தது. அப்போதெல்லாம் அதன் மீசையின் கம்பி மயிர்கள் நிமிர்ந்தெழுந்து மின்னுவதை அவனால் கற்பனை பண்ணமுடிந்தது.

அதிகாலையிலிருந்தே அது அப்பிரதேசத்தில்தான் இருந்திருக்கவேண்டும். ஆனால், அவன் அதைக் கண்டுகொண்டது காலை வெயில் ஏறிய பின்னர்தான். காலையிலிருந்தே யாரோ அவனைத் தொடர்ந்து பின்னால் வந்துகொண்டிருப்பது போன்ற உணர்வு எழுந்துகொண்டுதான் இருந்தது. வழமையாக அவன் போன்ற வேட்டைக்காரர்களுக்கு ஏற்படும் உணர்வு இது. அவன் இந்த ‘உணர்வு’களின் பித்தலாட்டங்களை நன்கு அறிந்தவன். அதனால் அதற்கு முக்கியத்துவம் அளிக்காது அவனது வேலையில் கருத்தாய் இருந்தான். இருந்தாலும் அவனை ஏதோ முன்னால் கனமாக அழுத்துவது போன்ற உணர்வு அடிக்கடி எழுந்ததும் நிமிர்ந்தான். அவ்வளவுதான் அந்தக் கண்கள்! ஒரு பத்து யார் தூரத்துக்கப்பால் ஆழமான புதர் மறைவில் அவனையே குறிவைத்துப் பார்த்துக் கொண்டிருந்தன!

அவன் நிலை தர்மசங்கடமாய்ப் போய்விட்டது. அவன் தேடிக்கொண்டு வந்த, அவனால் குறிவைக்கப்பட வேண்டிய ஒன்று அவன் எதிர்பார்த்திராத வழியில் அவனில் குறிவைத்துக் கொண்டிருந்தது! அதன் விழிகளில் இருந்து பாய்ந்த நரைத்த குரூரம் அவனை நிலைதளரச் செய்தது. அவனது தற்பாதுகாப்புக்கான சகல ஆயுதங்களும் அவனிடம் அந்நேரம் இருந்தும் அவற்றை நீட்ட முடியாது போய்விட்ட எதிர்பாராத இக்கட்டு. காரணம், அவன் தன்னைச் சுதாகரித்துக்கொள்ளுமுன்னரே, அது தயார் நிலையில் தன்னை நீட்டிக்கொண்டு நிற்பதை அதன் விழிகள் அறிவித்துவிட்டன. இன்னும் அதனிடமிருந்து Hands Up என்ற குரல் எழவேண்டியது மட்டும்தான் பாக்கி. அதற்குள் அவன் தனது தற்பாதுகாப்புக்கான தந்திரோபாய பின்னடிப்புகளைச் செய்யலாம்.

என்றாலும் அவனுக்குப் பயம் எழவில்லை.

இது ஒரு பெரும் சவாலாகவே பட்டது.

ஏனென்றால் இந்த அனுபவம் அவனுக்குப் புதிதல்ல. அத்தோடு அவனது எதிரியும் புதியவரல்ல. அவனுக்குப் பழக்கப்பட்ட எதிரி. அதேபோல் இது எதிர்பாராத எதிர்கொள்ளல் ஆயினும், இதுவும் முன்னர் நிகழ்ந்த ஆயிரம் எதிர்பாராத நிகழ்வுகள் போல், பழக்கப்பட்ட ஒரு எதிர்பாராத நிகழ்வு. அவன் உஷாரானான்.

அவன் அதைத் தாக்குமுன் அது அவனை நோக்கி வைத்திருக்கும் குறியிலிருந்து தப்பவேண்டும். அதன் குறியிலிருந்து தப்புவதற்கு அவனது நிலைதளம்பாத மனோதிடம் தேவை. அதன் பின்னர்தான் அதைத் தாக்குவதற்குரிய நிலையைத் தீர்மானிக்கலாம். ஆரம்பத்தில் மனோதிடம் ஏராளமாக இருப்பதுபோலவே படும். அதை எதிர்பாராது சந்தித்தால்கூட சமாளித்துவிடலாம் என்கிற பலத்த நம்பிக்கை எப்போதுமே இருக்கும். ஆனால், அதை இப்படி திடீர் என சந்திக்கும் ஒவ்வொரு சமயமும் அவனது அந்த நம்பிக்கை சொல்லாமல் கொள்ளாமல் காலை வாரிவிடுவது அவனது அனுபவங்களில் ஒன்று. காரணம், அந்தப் பார்வையே அதன் ஆயுதங்களில் பலமான ஒன்று. பாய்ந்து அது எதனையும் கீறிக் கிழித்து குதறுவதற்கு முதல் அதன் பார்வையாலேயே செயலிழக்கச் செய்துவிடும்! அத்தகைய ஒரு மனோவசிய சத்தி அந்தப் பார்வைக்கு! திட்டிப் பாம்பின் விடம் என்பார்களே, அது மாதிரி அதை எதிர்கொண்டவுடனேயே தலைக்கு விஷம் ஏறுவதுபோல் கிறுகிறுவென தலை சுழல ஆரம்பித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவிடும்! அதன்பின் அதற்கு தாக்குதல் இலகு.

இதில் அவனுக்கு நிரம்ப அனுபவம்.

அவன் அதன் பார்வையை எதிர்கொள்ளும் ஒவ்வொரு சமயமும் அதற்கு எதிராக தன்னை சுயமனோவசியம் செய்துகொள்ளுவான். அது அவனுக்கொரு சவால்! ஒரு பலப்பரீட்சை! வேண்டுமென்றே அதன் பார்வையை எதிர்கொண்டு தன்னைச் சுயமனோவசியப் படுத்திக் கொள்ளுவான்.

அவனையும் அதற்கு நன்றாகத் தெரியும்.

அவன் கொஞ்சம் கஷ்டமான பேர்வழி என்று அதற்குத் தெரியும்.

மேலும், அவனது வேட்டையாடல் முறை மற்றவர்களில் இருந்து வித்தியாசமானது என்றும் அது அறியும். அவனது பொறியில் பலதடவை சிக்கி தோலுரிபடுமுன் தப்பித்தோடியிருக்கிறது. அதேபோல் அவனும் வேட்டையாடத் தொடங்கிய நாளிலிருந்து அதனிடம் சிக்கி குற்றுயிரும் குறை உயிருமாய் தப்பிப்பிழைத்த நாட்களும் உண்டு.

அவன் தனது பால் பண்ணையைச் சுற்றி கட்டை நாட்டி முள்ளுக்கம்பி வேலி அறைந்திருந்தான். காட்டுப் பிரதேசமானதால் விலங்குகளின் தாக்குதலை எதிர்பார்த்தே அவன் அப்படிக் கட்டுக்கோப்பாக வேலி போட்டிருந்தான். எனினும், கறவைகளின் மொச்சையில் மோப்பங்கொண்டு அவற்றைத் தாக்க விலங்குகள் வருவதுண்டு. ஓநாய், கரடி, சிறுத்தை, இன்னும் சிலவற்றுக்குப் பின்னால் நரிகளின் பரிவாரம் தொடர்வதும் உண்டு, அவைகள் விட்ட எச்சங்களை சுவை பார்க்க.

அவனது மிகுந்த பாதுகாப்பு அடைப்புக்களையும் மீறிக்கொண்டு இது ஒருநாள் அவனது பண்ணையைத் தாக்கிற்று. இனிமேல் எந்தவித விலங்குகளின் தாக்குதலும் நடைபெறாது என்று அவன் திடமாக நினைத்தபோதுதான் அது தாக்கிற்று. அந்தத் தாக்குதல் அவனை வெகுவாகப் பாதித்தது. அது அவனையே மொட்டையடித்து சாணிதப்பி சந்தியில் நிறுத்தியதுபோல் அவனுக்குப் பட்டது. அவ்வளவு அடைப்புக்களையும் மீறி அவன் சற்றும் எதிர்பாராத சந்தர்ப்பத்தில் அதன் தாக்குதல்!

காவல் போட்டதையும் மீறி, ஓர் உடைப்பு நிகழ்ந்த பின்னர், அதில் அது ஒரு சுவை கண்டது. தொடர்ந்து இடைக்கிடை அதன் தாக்குதல். அவனுக்கு தன்மேலேயே ஆத்திரம் பீறிடுகிறது. அதன் ஒவ்வொரு தாக்குதலோடும் அவனது இயலாமையும் வலுவின்மையும் நிர்வாணமாக்கப்படுவதுபோல்....

அது எப்படிப் பதுங்கிப் பதுங்கி வருகிறது!

அது பதுங்கும்போது சிறுத்தை மாதிரித்தான் இருக்கிறது. ஆனால், அது எப்போதுமே சிறுத்தையாக இருந்துவிட்டால் விட்டது தொல்லை, அதை வேட்டையாடுவது சுலபம். சிறுத்தைக்குரிய தடங்களிலேயே வைத்துத் தீர்த்துவிடலாம். இதுவோ எல்லா விலங்குகளின் தந்திரங்களையும் நேரத்திற்கேற்ப, சூழலுக்கேற்ப தனதாக்கிக் கொள்கிறது;ஆயுதமாகப் பாவிக்கிறது; அதுதான் எல்லா முட்டுக்கட்டைகளுக்கும் முக்கிய காரணம்.

ஒருமுறை அதை அவன் துரத்திக்கொண்டு போனபோது, அது பார்த்திருக்கக்கூடியதாக ஒரு புதருக்குள் மறைந்தது. அவன் உடனே சிறிதும் தாமதியாது, வெகு பிரயத்தனப்பட்டு, 'அடிக்குமேல் அடி வைத்து, நழுவி நழுவிச் சென்று அந்தப் புதரை நோக்கிக் குறிவைத்தபோது, திடீரென அது நரிபோல் இன்னொரு புதர் வழியே வெளிவந்து கூக்காட்டி அவனைக் கேலி செய்தது! இன்னொருமுறை, அதைமிக லாவகமாக வளைத்து, உச்சந்தலையில் ஒரே போடாகப் போடலாமென்று ஆயத்தமானபோது, திடீரென அது அவன் வளர்ப்பு நாய் போல் வாலைக் குழைத்து அவன் கால்களை நக்க வரும் தோரணையில் நின்றபோது, 'அப்பாடா, விட்டது தொல்லை! ஒருபடியாக ஆளை அமத்திவிட்டேன்' என்று அவன் பெருமூச்சு விட்டு ஓய்வதற்குள், அது ஒரு சுழிப்பு சுழித்து, அடுப்பில் காய்ச்சுப்பட்டுக்கொண்டிருந்த பால் சட்டியைக் கவிழ்த்து நக்கிவிட்டு ஓடிற்று! நள்ளிரவில் அது திடீரெனத் தாக்கும்போது கரடிபோல் அது தன் குரூர நகங்களைக் காட்டத் தவறாது. எதிர்பாராத விதமாக, இப்படிப் புதர் மறைவில், நேருக்குநேர் சந்தித்துக்கொள்ளும்போது, அது அந்தத் திட்டிப் பாம்புபோல் தன் பார்வையாலேயே யாரையும் செயலிழக்க வைத்துவிடும்!

இது என்ன மிருகமா? அல்லது வேறேதாவதா?

இதை வேட்டையாடுவதற்குரிய வழிமுறைகள் என்ன?

இவைதான் இதனோடு அவன் போராடிய ஆரம்பகாலத்தில் அவனைப் பிய்த்தெடுத்த கேள்விகள்.

அது மிருகந்தான் என்பதை பின்னர் அறிந்தான்.

அத்தோடு அது மிருகங்களில் சிறுத்தை என்பதையும் அறிந்தான்.

அதுமட்டுமல்ல, அது எத்தனையோ பண்ணைகளைத் தாக்கி அனுபவப்பட்டது; கள்ளப்பட்டது.

அதனால் அது தன் காரியத்தை சாதித்துக்கொள்ளும் முயற்சியில் பலவிதமான தந்திரங்களையும் பலவற்றின் தந்திரங்களையும் சூழலுக்கேற்ப தனதாக்கிக்கொள்ளும் திறமை மிக்கது. இதை, அவன் அதை வேட்டையாடத் தொடங்கிய நாளிலிருந்து படிப்படியாக புரியத் தொடங்கியிருந்தான். அத்தோடு அதன் தந்தரோபாய நுணுக்கங்களில் சுவையும் கண்டிருந்தான். அதனால் அதற்கெதிராக ஆயுதம் தூக்கும் ஒவ்வொரு சமயமும் அவனுக்குள் ஓர் கிளர்ச்சி.

அவன் இதற்கு அனுபவப்படாத ஆரம்பகாலத்தில், அதன் தாக்குதல்களைத் தாங்கமுடியாதபோது, எல்லாரும் செய்வதுபோலவே, ஓர் உயர்ந்த மரத்தின்மேல் கொட்டில் ஒன்று அமைத்து, இரவும் பகலும் அதற்குள் இருந்து காவல் புரிந்தான். அதனை முறியடிப்பதற்காக தவம் கிடந்தான். அது ஆயுதம் சகிதமாக அவன் இருக்கும் காவல் தலத்தைக் கண்டிருக்கவேண்டும். உயர ஒரு மரத்தின்மேல் கொட்டில் அமைத்து, தன்னைக் கொல்லுதற்காக அவன் தவம் கிடப்பதை கண்டதாலோ என்னவோ, அதன் தலைகாட்டல் அவன் பண்ணைப்பக்கம் நிகழவில்லை. இது அவனுக்கு ஒரு தைரியத்தையும் சந்தோஷத்தையும் அளித்தது. இனி ஆள் தலைகாட்டமாட்டார். அவன் தனக்குள் நம்பிக்கை கொண்டான். ஆனால், அவனுக்குள் அந்த நம்பிக்கை பலமாக இறுகிக்கொண்டு வந்தபோது, ஒரு நாள் நள்ளிரவு திடீரென பற்றைகளின் பக்கமிருந்து 'சரேலெ'ன்று ஒரு சத்தம். அவன் திடுக்கிட்டு விழித்து துவக்கைத் தூக்குவதற்குள் அது அவன் மரக்கொட்டிலை நோக்கி



**அவனை ஏதோ முன்னால் கனமாக அழுத்துவது போன்ற உணர்வு அடிக்கடி எழுந்ததும் நிமிர்ந்தான். அவ்வளவுதான் அந்தக் கண்கள்! ஒரு பத்து யார் தூரத்துக்கப்பால் ஆழமான புதர் மறைவில் அவனையே குறி வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தன!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்ந்து எழுவது அவனது மங்கிய கொட்டில் விளக்கொளியில் ஆடியது. ஆனால், அடுத்த விநாடி அதன் பாய்ச்சல் அவனிருந்த கொட்டிலை எட்டமுடியாது சிறிதளவு வழுவிப்போக, அது அந்தரித்து மீண்டும் 'தொபீர்' என்று நிலத்தில் விழுந்து, அதன் அந்த விழுக்காட்டு ஒசையே அதைப் பயமுறுத்த அது காட்டுள் பாய்ந்து மறைந்தது.

எல்லாம் ஒரு நொடிப்பொழுதில் நடந்தேறின.

இத்தனைக்கும் அவன் வாய் அவனை அறியாது தேவாரம் பாடி, கைகள் ஆகாயத்தை நோக்கி சப்தவெடி எழுப்பி அவனை அவனாக தெளிவித்துக் கொண்டிருந்தன.

மீண்டும் ஓர் நாளிரவு இப்படி நிகழ்ந்தது. இம்முறை கொட்டிலை நோக்கிய அதன் பாய்ச்சல் தவறியபோது அவன் தயாராய் இருந்து அதற்குக் குறி வைத்தான். ஆனால், அது தப்பிவிட்டது.

அதன் பின்னர் அது அவன் மரக் கொட்டில் பக்கமோ அவனது பண்ணைப் பக்கமோ தலைகாட்டவே இல்லை.

இந்த நிலை ஆரம்பத்தில் அவனுக்கு சந்தோசத்தை அளித்தாலும் பின்னர் போகப்போக அவனுக்கு அது சந்தோசமின்மையையும் ஒரு தரக்குறைவையும் தருவதுபோலவே பட்டது.

அது ஏன் தலைமறைவாயிற்று?

உண்மையில் அது தன் தோல்வியால் சூடுபட்டு பின்வாங்கிற்றா அல்லது உயரத்தே மரத்தில் கொட்டில் போட்டிருக்கும் இவன் தன் தாக்குதலுக்கு தகுதியற்றவன் என்ற புறக்கணிப்பா?

அவனுக்கு ஏனோ பின்னதே அதன் வராமைக்கு காரணமாகப் பட்டது. 'என்னைத் தோற்கடிக்க விரும்பினால் என்னை என் களத்திலேயே சந்திக்கவும். அங்கே மேலேயுள்ள மரத்திலல்ல. இறங்கி வா, இந்த நிலத்தில் போட்டிபோடுவோம்' என்று அது அவன் பின்னால் வந்து அடிக்கடி குசுகுசுப்பதுபோல் பட்டது.



இனி ஆள் தலை காட்டமாட்டார்.
அவன் தனக்குள்
நம்பிக்கை கொண்டான்.
ஆனால், அவனுக்குள்
அந்த நம்பிக்கை பலமாக
இறுகிக் கொண்டு வந்தபோது,
ஒரு நாள் நள்ளிரவு திடீரென
பற்றைகளின் பக்கமிருந்து
'சரேலெ'ன்று ஒரு சத்தம்.

இந்தக் குசுகுசுப்பு அவன் மனதை அதிகம் தொல்லைப்படுத்தத் தொடங்குவதுபோல் பட்டதும் அவன் தனது மரக் கொட்டில் காவல் தலத்தை மூடிவிட்டு கீழே இறங்கி ஊடாட வெளிக்கிட்டான்.

பல நாட்கள் ஒன்றுமே நடக்கவில்லை.

அப்போது அது போய்விட்டது? இனி அது வரமாட்டாது?

அவனைத் தொந்தரவு செய்த அந்தக் 'குசுகுசு'ப்பெல்லாம் வெறும் மனப்பிராந்தி?

அப்படியானால் அவனளவில் அதை ஜெயித்துவிட்டான். இனி 'தம்பிப்பிள்ளை' தலைகாட்ட மாட்டார்.

அவனது நம்பிக்கை உறுதிகொண்டது.

ஆனால், எதில் அவன் உறுதியாக நம்புகிறானோ அதில் ஒட்டை விழுவது போல் அதற்கு எதிராக ஒன்று நிகழும். அந்த ஒட்டையில்தான் கண்வைத்துப் பார்த்தால் உலக இயக்கமே தெரிவது போல எல்லாவற்றையுமே நிறைவாகச் செய்துவிட்டோம்; எல்லாம் மங்களமாகவே முடிந்துவிட்டது என்று நிம்மதியாக மனம் சாயும்போதுதான் எங்காவது ஒரு குறை அல்லது ஓர் அமங்கல நிகழ்வு துருத்திக்கொண்டு வெளிவரும். அது எமக்கு அப்போது ஒரு குறையாக அல்லது அமங்கலமாகத் தெரிந்தாலும் அதுவே அடுத்தகட்ட வளர்ச்சியின் மங்கல கும்பமாக அல்லது மங்கலத் திருப்புமுனையாக அமையப்போவதை பலர் அறிவதில்லை. அவனும் அதை அப்போது அறியவில்லைத்தான்.

அது போய்விட்டது என்று அவன் உறுதியாக நம்பத் தொடங்கியபோதுதான் அது திரும்பி வந்து அவன் பண்ணையை மிக மோசமாகத் தாக்கிற்று. கனகால இடைவெளியின்பின் நேர்ந்த தாக்குதலாதலால் வட்டியும் குட்டியுமாக சேர்த்து வைத்துத் தாக்கிற்று. அடுத்தடுத்துத் தாக்கிற்று. ஆனால் இந்தத் தாக்குதலின் போதுதான் அவன் அதுபற்றி, அதன் தந்திரங்கள்பற்றி அறிந்துகொள்கிறான்; அனுபவம் கொள்கிறான். அத்தோடு அதை வேட்டையாடும் நுணுக்கங்கள் பற்றியும் தேர்ந்துகொள்கிறான்.

அதன்பின்னர் இப்போது அதை நேருக்குநேர் சந்திக்கும் திராணி. முன்னர் மரவீடு கட்டிக்கொண்டு அதை வேட்டையாடத் தவங்கிடந்த காலம் அவனுக்கு ஒரு குழந்தைப்பிள்ளைத் தனமாகவே பட்டது. இன்றைய நிலையில் நிலத்தில் இறங்காமல் ஒதுங்கியபடி உயர இருந்துகொண்டு அதை வேட்டையாட நினைத்தது ஆண்மையாகவோ அல்லது மனித வாழ்க்கையாகவோ அவனுக்குப் படவில்லை. அந்த மிருகத்தை அது பதுங்கிப் பதுங்கிப் பாயும் மண்ணிலேயே, அதன் களத்திலேயே சந்திக்கவேண்டும். அவனை சதா நச்சரித்துக்கொண்டிருந்த அந்த குசுகுசுப்பில் அர்த்தம் இருப்பதையே இப்போ அவன் கண்டான். அந்தக் குசுகுசுப்பு அவனை மனிதனாக்கும் மங்கல அழைப்பாகவே இப்போ பட்டது. அடுத்தடுத்து அதன் தாக்குதலுக்கு இலக்கான பின்னரே அவனுக்கு சித்தித்தது. இது அப்போது அவனது மர வீட்டுக் காவல் அனுபவத்தோடு ஒப்பிடுகையில் தோல்வியாகவும் துக்கமாகவும் தோற்றினாலும் அது என் வாழ்க்கையில் ஒரு பெரும் திருப்புமுனை மட்டுமல்ல, ஒரு முற்போக்கான பெரும் பாய்ச்சல் என்றுதான் இப்போது நான் எடுத்துக் கொள்கிறேன்.

இதன்பின் இதன் வேட்டையில் எனக்கு சுவை பிறக்கிறது.

அதைச் சந்திப்பதில் ஒரு திகில் நிறைந்த பெரும் ஆவல்.

அதை அதன் களத்திலேயே சந்திக்கும் வைராக்கியம், வீரம், அதற்கான நுணுக்கங்களில் தேர்வு.

என்றாலும் அவனுக்கு அதனை பூரணமாக அடக்கி வெற்றிகொள்ள முடியவில்லைத்தான். அது தனது தந்திரங்களில் மிகுந்த நெகிழ்வும், நுட்பமும் கொண்டதாகையால் அவன் அடிக்கடி அதற்கு களப்பலி கொடுத்துக்கொண்டுதான் இருந்தான். ஆனால், முன்னரைப் போலல்ல. சாதாரண சில்லறை இழப்புகளே. அந்த ரீதியில் அவனது இன்றைய நிலை வெற்றியை அண்மித்த நிலையே என்றுதான் சொல்லவேண்டும். அந்தளவுக்கு பெருமைப்படலாம். ஆயினும் எதிலும் அவன் அறுதியிட்டுக் கூறமுடியாத நிலை. இந்த நிலை மேலும் தொடரும் என்று அவன் கூறமாட்டான். அந்தளவு இந்த வேட்டையாலில் அவன் சூடுகண்ட அனுபவசாலி.

இதோ இப்போ அதன் கண்கள் அவனையே பார்த்துக்கொண்டிருக்கின்றன. இது ஓர் எதிர்பாராத் சந்திப்பு. ஆனால், இதையே அவன் சதா எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தான். ஆனால் இந்த எதிர்பாராத சந்திப்பில் அது ஒரு நிமிஷம் அவனை முந்திக்கொண்டு விட்டது. அத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் அது அதற்குரிய தயார் நிலையில்! எந்தக் கணத்திலும் அது அவன்மேல் பாயலாம். முந்திய ஆளாக அவன் இருந்திருந்தால் அது இப்போ அவனில் பாய்ந்து அவனைக் குதறி அவன் பால்பண்ணையைச் சூறையாடியிருக்கும். அது தன் சிறுத்தைக் குணத்தை உடனே காட்டியிருக்கும்! ஆனால் அவன் இப்போ அதனால் இலகுவாக மடக்கப்படக்கூடியவனல்லன் என்பதை அது அறியும். அது இப்போ புதுத் தந்திரோபாயங்களை நேரத்துக்கு நேரம் மாற்றிக் கொள்வதால் அதன் நுணுக்க அசைவுகளையும், அதன் விழிகளையும் தவறவிடாது பார்த்துக்கொண்டிருந்தான் அவன்.


அதன் விழிகளிலிருந்து எழும் ஆக்கிரமிப்புச் சக்திக்கு எதிராக அவனிடமிருந்து இன்னோர் மாற்று Psychic Bombardment! தொடர்ந்து அவன் எதிர்மனோ தாக்குதல். அது அதற்குப் புரிந்திருக்க வேண்டும். திடீரென அதன் பார்வை அவனைவிட்டு விலகி மறைந்தது. அது எங்கே போய்விட்டது? பாய்வதற்காகப் பின்வாங்குகிறதா? அல்லது உண்மையாகவே என் எதிர் மனோ தாக்குதலை தாக்குப்பிடிக்க முடியாமல் அது ஒளிந்துகொண்டதா? எதுவும் அதைப்பற்றி நிச்சயமாகச் சொல்லமுடியாது. எந்த பழுத்த வேட்டைக்காரனாலும் அதுபற்றி ஆருடம் கூறமுடியாது.

அவன் அதன் பார்வை வந்த திக்கையே பார்த்துக்கொண்டிருந்தான்.

இவ்வேளைகளில்தான் அவன் இன்னும் உஷாராக இருக்கவேண்டும்.

ஆபத்து எப்போதும் வரலாம். மறைந்த அதன் தடங்கள் எங்கே என்று இலகுவாகத் தெரியாதவேளை. மறைந்த எதிரி எங்கே இருக்கிறான், என்ன செய்யக் கூடும் என்று யூகிக்கமுடியாத கஷ்டமான நிலை இது. ஆகவே இந்நேரங்களில் இரட்டித்த விழிப்புத் தேவை.

அவன் வெகு உற்சாகமாகவும் உன்னிப்பாகவும் வெகுநேரம் காத்திருந்தான். மறைந்த அதன் தலைக்கறுப்பே அங்கு இல்லை. திரும்பி வருவதற்கான எந்தச் சின்ன அறிகுறியும் அங்கு தென்படவில்லை. உண்மையாகவே ஆள் தன் தாக்குதலை ஒத்திப்போட்டுவிட்டு ஓய்வுக்குப் போய்விட்டார்போலும். அப்போ அவனும் சிறிது ஓய்வு எடுத்துக்கொள்ளலாம்; கொஞ்சம் சகஜ நிலைக்குத் திரும்பலாம். அவனுக்குள் ஒரு சந்தோசம் ஊறுவது போல் தெரிந்தது.



அது எங்கே போய்விட் டது?
பாய்வதற்காகப் பின்வாங்குகிறதா?
அல்லது உண்மையாகவே
என் எதிர் மனோ தாக்குதலை
தாக்குப்பிடிக்க முடி யாமல் அது
ஒளிந்துகொண்டதா?
எதுவும் அதைப்பற்றி
நிச்சயமாகச் சொல்லமுடி யாது.
எந்த பழுத்த வேட்டைக்காரனாலும்
அதுபற்றி ஆருடம் கூறமுடியாது.

அப்படியானால் மீண்டும் அவனுக்கே வெற்றி, அப்படியா?

அவன் வழமையான பெருமித ஊட்டத்தோடு சகஜநிலையில் இயங்கத் தொடங்கினான்.

இப்போ அவனது வேட்டையாடல் பற்றிய பிரச்னையே அவன் பிரக்ஞையில் இருந்து கழன்றுபோயிருந்தது.

அப்போதுதான் திடீரென அவன் பண்ணைப்பக்கம் 'சரேலெ'ன ஏதோ ஒரு சத்தம். தொடர்ந்து கறவைகளின் கமறலும் குதி அதிர்வுகளும்.

அவன் நிலை தடுமாறினான்.

இந்நேரங்களில் நிலை தடுமாறுவது ஆபத்தாக முடியும். அவன் நிலைதடுமாறிக்கொண்டே, மெல்ல எழுந்து, 'பட பட' வென இடிக்கும் இதயத்தோடு கதவை மெதுவாகத் திறந்தானோ இல்லையோ சரேலென அது சற்றும் எதிர்பாராத விதத்தில் அவன் அறைக்குள் பாய்ந்துவந்தது.

அவன் பயந்துபோய் திறந்த கதவின் பின்னால் ஒளிந்துகொண்டான். அவன் இதயம் படபடவென வேகமாக இடித்துக் கொள்வது அவனுக்குத் தெளிவாகக் கேட்டது. அப்போதுதான் அவன் மனைவி தன்னை அழகாக அலங்கரித்துக் கொண்டு அவன் அறைக்குள் வந்திருந்தாள்.

உள்ளே திடுதிப்பென பாய்ந்துவந்து அது, நேராக அவளில் பாய்ந்தது. அவளது ஆடை, அலங்காரம் அனைத்தும் சிதைக்கப்பட்டு அவள் நிர்வாணமாக்கப்பட்டாள். ஓர் உன்மத்தம் கொண்ட உக்கிரமான தாக்குதல்! கதவின் பின்னால் மறைந்துநின்ற அவன், அந்த உன்மத்த விரிவின் அகோரத்தில் இல்பொருள் ஆனான்.

ஒரு மணித்தியாலத்தின் பின் அது கறவைகளின் பால்மொச்சை வீச அங்கிருந்து அகன்றபோது, ஆடைகள் கலைந்த நிலையில், கண்களை மூடியவளாய் கட்டிலில் கிடந்த அவன் மனைவி, சிறிது அசைந்து அவனை ஒருமுறை பார்த்துவிட்டு மறுபுறம் திரும்பிப் படுத்தாள்.

அவன் கதவிடுக்கிலிருந்து வெளியே வந்து, அது வந்துபோன தடயங்களை வலு கவனமாக ஆய்வு செய்துகொண்டு நின்றபோது, அவன் கண்முன்னே, ராணுவத்தால் சுடப்பட்டுத் தெருக்களில் கிடந்த இளைஞர்கள், கற்பிழந்து கதறிய கன்னியர், சிதறப்பட்டுக் கிடந்த சிசுக்கள், தீயிடப்பட்டு எரிந்த வீடுகள், சித்திரவதைக்குள்ளான அப்பாவிகள் எல்லாம் விரிந்து அது வந்துபோன தடங்களாக மாறின. ❑

எவ்வளவு தொகையானாலும் ஒரே நாளில் இலங்கை, இந்தியாவுக்கு நீங்கள் பணம் அனுப்பலாம்
AARABEE TRAVELS
AIR & FOREIGN EXCHANGE BUREAU
Ms Amara
189, PRAED STREET, PADDINGTON, LONDON W2 1RH
Tel: 0171-402 4668 Fax: 0171-402 4880



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நூல்: | மலையகப் பரிசுக் கதைகள் |
| தொகுப்பாசிரியர் | மணிமேகலை கமலகாந்தன் |
| வெளியீடு: | கலையொளி முத்தையாபிள்ளை நினைவுக்குழு 39/21 அல்விஸ் பிளேஸ், கொழும்பு 13 |
| விலை: | இந்திய ரூபா 25.00 |

மலையகம் என்றதும் கைவிடப்பட்ட ஒரு சமூகத்தின் அவல வாழ்வும், நிரந்தர சோகமும்தான் எழுகின்றன. காலத்துக்குக் காலம் ஏற்படும் அரசியல் மாற்றங்களினால் மேலும் மேலும் அவல நிலைக்குத் தள்ளப்பட்ட சமூகம் இருக்குமாயின் அது மலையக சமூகம் தான்.

நூற்று அறுபது வருடங்களுக்கு முன் எவரெவரோ கொள்ளை கொள்ளையாகப் பணத்தைச் சுருட்டுவதற்காக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டதிலிருந்து இன்றுவரை நீளும் இவர்கள் வரலாறு ஏற்படுத்திய சோகங்களைவிட, இவர்களது நொறுங்குண்ட உணர்வு களை, நிறைவேறாத ஆசைகளை, நிறைவேறிய சின்னச் சின்ன சந்தோஷங்களைத் தாங்கிய இலக்கியப் படைப்புகள் தந்த பாதிப்புகள், மனக் கசிவுகள் மிக அதிகம். வரலாற்றுக் குறிப்புகள் எழுப்பமுடியாத உணர்வலைகளை வாழ்வின் அநுபவங்களினூடக வெளிப்படுத்தும் தன்மையை கலை இலக்கியங்கள் இயல்பாகக் கொண்டிருக்கின்றன என்பதுதான் அதற்கான காரணமாகும்.

'மலையகப் பரிசுக் கதைகள்' முன்வைக்கும் வாழ்க்கை அநுபவங்கள்: தலைமுறை தலைமுறையாக வாழ்ந்துவந்த லயம் இயற்கையின் சீற்றத்தால் சிதைந்தாலும் அதைத் திருத்தும் உரிமை அவர்களுக்கு இல்லாத நிலை, சொந்த மண் அந்நியமாகிய நிலையில் தம் முன்னோரின் தாயக பூமியைத் தம் தாயகமாக நினைத்து இந்தியா செல்லத் தீர்மானித்தல், தோட்டங்களை கிராம வாசிகளுக்குப் பிரித்துக் கொடுக்கும் அரசின் வஞ்சகத் திட்டத்தினால் உறவுகள் அறுந்து வேறு தோட்டங்களுக்குக் குடிபெயர்தலும், அங்கும் ஏற்றுக்கொள்ளப்படாமல் அநாதரவாகக் கைவிடப்படல், தோட்டங்களைப் பிரித்துக் கொடுப்பதை ஒன்றுகூடி எதிர்ப்பதும் எதிர்கொள்ளும் மரணங்களும், முறையான பிறப்புப் பதிவு இல்லாததனால் ஆட்குறைப்பு நிர்ப்பந்தத்துக்கு பலியாதல், அம்புலன்ஸ் வேறு தேவைகளுக்காகப் பாவிக்கப்படுவதனால் ஏற்படும் மரணங்கள். பாடசாலை மாணவர்களுக்காக வழங்கப்படும் துணியை விற்றுக் குடிக்கும் பெற்றோர், கொடுத்த வாக்கைக் காப்பாற்றச் சிறைசெல்லும் அப்பாவி, பசியின் கொடுமையால் வேலைநிறுத்தத்தைக் கைவிடும் நிலை, கூட்டிக் கொடுக்கும் கங்காணி, தொழிற்சங்க வாதிகளின் ஏமாற்றல் - இவ்வாறு சிறுசிறு யன்னல் வெளிகளின் ஊடாக ஒரு சமூகத்தின் ஒட்டுமொத்தமான வாழ்வை, துயரங்களைப் பதிவுசெய்துள்ளனர்.

கோகிலம் சுப்பையா, சி. வி. வேலுப்பிள்ளை, என். எஸ். எம். இராமையா, தெளிவத்தை ஜோசப் இன்னும் பலர் காட்டிய மலையக வாழ்வு முறைக்கும் இத் தொகுப்பு முன்வைக்கும் வாழ்வு முறைக்கும் சில அரசியல் மாற்ற வெளிப்பாடுகளைத் தவிர அடிப்படையில் மலையக மக்கள் வாழ்வில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை என்பதைத்தான் நிரூபிக்கின்றன. அத்துடன், 'உழைப்பதற்கும் சாவதற்குமே பிறந்தவர்கள்; ஏனென்று கேட்க நாங்கள் யார்' என்ற நிலையிலிருந்து ஏனென்று கேட்பதற்கும் அதற்காகச் சாவதற்கும் தயாராகியுள்ளனர்.




இத் தொகுப்பில் அநேகர் படைப்புக்களத்துக்குப் புதியவர்கள். புறச் சூழல்கள் ஏற்படுத்தும் தாக்கங்களை அநுபவ இலக்கியவாதிகள் பதிவுசெய்கையில், புறநிலைத் தாக்கங்களுடன் அவர்கள் தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்தும் பாதிப்புக்களை புதியவர்களில் பலர் பதிவு செய்துள்ளனர். இது ஒட்டுமொத்தமான போக்கு அல்ல. இத் தொகுப்பு வெளிப்படுத்தும் ஒரு போக்குத்தான்.

மலையக மக்களின் வாழ்வு நிலைகளை இயற்கையின் குறியீட்டுடன் உவமிக்கும் போக்கு பொதுவாகவே காணப்படுகின்றது.

'மூன்று தலைமுறைச் சோகங்களைத் தாங்கிக்கொண்டு மழை, வெள்ளம், காற்று ஆகிய இயற்கையின் சீற்றங்களைத் தாங்கிக்கொண்டும் கல்வீச்சு, சூறையாடல் ஆகிய இனவெறிச் சூறையாடல்களால் புண்பட்டும் நிலைகுலைந்து போன தோட்டத்து லயன்களின் தகரங்கள் தம் ஆற்றாமையைச் சொல்லி அழ, சுவர்கள் கரைந்து காரை பெயர்ந்து இடிந்துவிழத் துடிக்கின்றன.'

'ஒரு காலத்தில் இங்கு வந்து பார்த்தால் எவனோ ஒருவன் இவனது குழி மேட்டில் வீடு கட்டியிருப்பான். நெடுஞ்சாலை அமைந்திருக்கும். நாங்கள் வாழ்ந்த தடயங்கள் காணாமல் போயிருக்கும்.'

'என் கொடுக்கல் வாங்கல்கள் எல்லாம் கொள்ளையடிக்கப்பட்டிருந் தன.'

'இந்தத் தியறி சொல்கிறது முழு உலகமும் நமக்குத்தான் சொந்தமென்று. இடுகாடு சொல்கிறது புல் முளைக்கும் வரை ஆறடி தான் சொந்தமென்று.'

சில கதைகளில் வாழ்வின் நிலைகள் ஏற்படுத்தும் முடிவுகள் பலருக்கு திருப்தி அளிக்காது போகலாம். 'பசி'யில் வரும் வேலைநிறுத்தத்தின் முடிவை இலக்கியத்தில் தீர்வு மூலம் நடைமுறைப் பிரச்னைகளுக்கும் ஆறுதல் கொள்வோர் மனித குலத்துக்கு நம்பிக்கையான ஒரு தீர்வை இவை கொண்டிருக்கவில்லை எனக் கருதலாம். சேமிப்பு எதுவுமற்ற அன்றாடங்காய்ச்சிகள் உயிர்வாழ ஆதாரமின்றி எத்தனை நாள்கள் போராடுவது? வறுமை வைராக்கியங்களைக் குலைத்த நிலையில் போராட்டத்தைக் கைவிடுதலைத் தவிர, அவர்களால் செய்யக்கூடிய காரியம் எது? அது அநியாயமானது, கொடுங்கோன்மையானது என நாமுணர்ந்தாலும் அதுதான் யதார்த்தமானது. இதற்கு எதிர்மாறாக 'கப்பல் எப்பங்க' கதையின் வீரையாவன் செயல்களினால் பாதிப்புற்று இந்தியா செல்லும் முடிவோடு இருந்தவர்கள் மனதில் இதுதான் எம் தாயகம் என்ற உணர்வை ஊட்டியபின் பொய்யான குற்றச்சாட்டில் சிறை சென்றதும் இந்தியா செல்லத் தீர்மானிக்கிறார். இந்தியா திரும்பிச் செல்லும் முடிவு பிழையானது எனக் கூறவில்லை. ஆனால், அத் தீர்மானத்துக்கு வருவதற்குரிய காரணங்கள் வலுவாகச் சொல்லப்படவில்லை என்பதுதான்.

தரம் என்ற அவதானிப்பில் பல சிறுகதைகள் சாதாரணமானவை. குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதாக இருப்பது அல் அஸூமத்தின் 'விரக்தி' தான். மாத்தளை வடிவேலனின் 'தலைக்கொரு கூரை', புலியூர் க. சதாசிவத்தின் 'சந்தனக் கட்டை' நல்ல கதைகள் தான். ஆயினும், அல் அஸூமத் இத் தொகுப்பில் தனியாகவே விலகி நிற்கிறார். பதினைந்து வருடங்களின் பின், தான் பிறந்து, வளர்ந்த பூமிக்குத் திரும்பும் ஒருவனின் மன உணர்வுகள், இளம் பருவ நினைவுகள், மாற்றங்கள் எள்ளல் தொனியில் மிக நேர்த்தியாகச் சொல்லப்பட்டுள்ளன. இவர் கையாளும் படிமங்கள் ஆழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான அர்த்தங்கள் கொண்டவை. இக் கதையே தனியான ஒரு விமர்சனத்தைக் கோரி நிற்கிறது.

படைப்புகளின் தர மதிப்பீட்டில் பழையவர்கள், புதியவர்கள் என்ற பிரிப்பு மறை எதுவுமில்லையாயினும், நம்பிக்கை அளிக்கக்கூடிய சமிக்ஞை அலைகளைப் பல புதியவர்கள்கொண்டுள்ளனர். மெய்யன் நடராஜன், நளாயினி சுப்பையா, பா. ரஞ்சனி ஆகியோர் அதீத புனைவுகள், பூச்சுகள் அற்று, வாழ்க்கையை அதன் இயல்பான தளத்தில் நோக்கியுள்ளனர்.

'கொல்லையின் பின்பக்கம் தோண்டிப் பார்க்கையில் காதறுந்த செருப்பு, வெற்றுப் பவுடர்ச் சுண்டு, பூரான், பூச்சி நெளிந்த கும்பா, பிளாஸ்ரிக் பை, அப்பா ஆறு வருஷத்துக்கு முன் தொலைத்த தங்க மோதிரம் எல்லாமே அகப்படுகிற மாதிரித்தான் இதுவும். இத் தொகுப்பில் எங்கோ ஒரு மோதிரம் இருக்கிறது. எங்கள் நம்பிக்கை வீண் போகாது என்று நம்புகிறோம். மோதிரமே அகப்படாது போனாலும் நெளிந்துபோன பித்தளைக் கும்பாவையாவது சரிப்படுத்திப் பாவித்துக் கொள்ளக் கூடுமானால் போதும் என்று நிறைவடைகிறோம்' என எச். எச். விக்கிரமசிங்க குறிப்பிடுகிறார். அந்த அளவுக்கு ஆயாசப்படவேண்டியதில்லை என இத் தொகுப்பு பதில் கூறும். இத் தொகுப்பு தவிர்ந்த பொதுத் தளத்தில் மலையக இலக்கியம் ஏனைய பிரதேச இலக்கியங்களி லிருந்து என்றும் பின்தங்கியிருந்த தில்லை.

– மு. புஷ்பராஜன்

---

நூல்: கவிதை
(இளங் கவிஞர்களுக்கான இரு திங்கள் ஏடு)
ஆசிரியர்: அ. யேசுராசா
1, ஓடைக்கரை வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்
விலை: இலங்கை ரூபா:

தேன்மொழி, நோக்கு, கவிஞன், அக்னி போன்ற ஈழத்துக் கவிதை இதழ்களின் வரிசையில் 'கவிதை' இதழ் இளங் கவிஞர்களின் பயில்களமாக இருப்பது வரவேற்கத்தக்கதே. 'கவிதை' (தை - 1995) இதழில் பதினாறு கவிதைகளும், இரண்டு மொழிபெயர்ப்புக் கவிதைகளும், கல்வயல் வே. குமாரசாமி, சோ. பத்மநாதன் ஆகியோரின் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. பாதாளம், வேதாளம் என்று எதுகைக்கு வார்த்தை தேடி ல்லுக்கட்டும் ஜெ. கி. ஜெயசீலன், வைரமுத்து, மேத்தா, அப்துல் ர்குமானை ஆதர்சமாகக் கருதுவதில் வியப்பில்லை.


இளங் கவிஞர்கள் எழுதுவதால் எல்லாமுமே கவிதை ஆகிவிடாது. கவிதைகளின் தரத்தைப் பேணுவதிலும் யேசுராசா கவனஞ் செலுத்துவாரானால் 'கவிதை' இதழ் நிறையவே சாதிக்கும் என்று தோன்றுகிறது.

---

நூல்: ET DEMAIN
ஆசிரியர்: க. கலாமோகன்

எண்பதுகளில் ஈழத்தில் கனன்றெரிந்த இன ஜுவாலையின் வெம்மையில் உலகெங்கும் அகதிகளாகத் தமிழர்கள் புலம்பெயர்ந்த துயரச் சூழலின் மத்தியில் இலக்கிய உலகுக்கு லாபகரமான வரவுகளும் நிகழ்ந்துள்ளன. ஐரோப்பிய மொழிகளைப் பயின்று அம் மொழிகளிலேயே தமது இலக்கிய அநுபவங்களைப் பரிவர்த்தனை செய்யும் ஆளுமை இவற்றில் அதி முக்கியமானது.

இதில் நமக்கு முதன்மையாகத் தெரிய வருபவர் கவிஞர் க. கலாமோகன். புகலிடச் சிறுகதைகளில் தனது தனித்துவ ஆற்றலைத் தடம் பதித்திருக்கும் கலாமோகன், ET DEMAIN? (நாளை?) என்ற தலைப்பில் பிரெஞ்சு மொழியில் வெளியான தனது கவி தைகளைத் தொகுத்து வெளியிட்டிருக்




கிறார். பிரெஞ்சு மொழிக்கு இத் தொகுப்பு புதிய வளங்களைச் சேர்த்துள்ளது என்று இக் கவிதைத் தொகுப்பின் முன்னுரையில் 'நனசடி ஏயையேயே தெரிவிக்கிறார்.

பிரெஞ்சு பாடசாலை ஆசிரியர்களது பாடவிதானத்தில் புகலிட வாழ்வைச் சித்தரிக்கும் கவிஞர்களின் தேர்வில் பெர்டொல் பிறெச்ற் (Bertolt Brecht) போன்றோர் வரிசையில் கலாமோகனும் தெரிவு செய்யப்பட்டிருப்பது பெருமையே தரும்.


புகலிட வாழ்வில் தமது வாழ்க்கை அநுபவங்களைத் தமிழில் இலக்கியமாக வடிக்கும் முயற்சியையடுத்து, புலம்பெயர்ந்த மண்ணின் மொழியைக் கிரகித்து, அம் மொழியிலிருந்து புகழ் மிகுந்த சிருஷ்டிகளைத் தமிழுக்குக் கொண்டுவருவதையடுத்து, புலம் பெயர்ந்த மண்ணின் மொழியிலேயே கவிதை சிருஷ்டியையும் தமிழ் அகதி ஒருவர் மேற் கொண்டிருக்கும் உன்னதமான வரலாற்று நிகழ்வு இது என்பதைக் குறிப்பிடலாம்.

– சுகன்

---

## இந்தியா டுடே இலக்கிய ஆண்டு மலர்

காஞ்சிப் பெரியாரின் ஆசியுரை, தலைத் தீபாவளிக்கு வந்த மாப்பிள்ளை ஒரு மாதமாகியும் ஊர் திரும்பாமல் தங்கி நிற்கும் ஹாஷ்யத் துணுக்குகள், கங்கா ஸ்நானங்கள் சகிதம்



கல்கியும், ஆனந்த விகடனும், கலைமகளும் தீபாவளி மலர்கள் வெளியிட்டதிலிருந்து, 'இந்தியா டுடே' வெளியிட்டிருக்கும் 1995ஆம் ஆண்டின் இலக்கிய மலரைப் பார்க்கை யில் புதிய காலத்தின் பதிவுகள் தெரியவே செய்கின்றன.

திராவிட இலக்கியம், தலித் இலக்கியம் பற்றிய பதிவுகள் இந்த ஆண்டு மலரின் சிறப்புக்கு புது வண்ணம் சேர்க்கின்றன. ஆ.இரா.வெங்கடாசலபதி, ராஜ் கௌதமன் ஆகியோரின் கட்டுரைகள் தனித்துக் கூறப்படவேண்டியவை. பெரியாரின் அரசியல் எழுத்தும், பாரதிதாசனின் கவிதையும் பதிவாகாத திராவிட எழுத்து அடிப்படையிலேயே கோளாறு சார்ந்ததாகிறது. தலித் இலக்கியத்தில் அயோத்திதாஸ் பண்டிதர், கே. டானியல் போன்றோரின் எழுத்துக்களைச் சேர்த்திருக்க வேண்டும். படைப்புகளுக்கு ஓவியங்கள் தனியழகைச் சேர்த்திருக்கின்றன. ஓவியர்கள் ராமனும், செல்வகுமாரும் தனியே தெரிகிறார்கள்.

இந்த இலக்கிய மலரைத் தயாரிப்பதில் வாஸந்தி மேற்கொண்டிருக்கக்கூடிய பிரயாசை மலரில் பக்கத்துக்குப் பக்கம் பதிவாகியுள்ளது. தமிழில் இப்போது பேணி வைக்கப்படவேண்டிய இதழ்கள், மலர்கள், நூல்கள் கணிசமாகிக்கொருப்பதுபோல் தெரிகிறது. அத்தகைய மலர்களில் இந்தியா டுடே இலக்கிய ஆண்டு மலர் நிச்சயமாக ஒன்று.

– இரா. நிரஞ்சன் குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சதுரங்கம்-7

தொகுப்பு: ஜனா

பரிசுத்தொகை £10.00
விடைகள் கிடைக்கவேண்டிய கடைசித் தேதி: 09.06.95

**இடமிருந்து வலம்:**

1. இலக்குமி. 'இவள்' தேடி வந்தாள்; என் இதயத்தில் குடி புகுந்தாள்... என்பது கண்ணதாசன் பாடல். படம்: இருளும் ஒளியும். (5)
4. கோவிலமைந்த இடம்; கணவன். (2)
6. பரதநாட்டியத்தில் அபிநயத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் உருப்படி. (3)
9. கம்சவதம் செய்தவன். (4)
10. இந்தியாவின் தலைநகர். (3)
14. கணவனை இழந்தவள். (4)
16. சிங்கம். (2)
17. உலகம் என்று சொல்லாம். (2)
19. நவமாகத் தோன்றும் ஆறு. (3,2)
22. மார்கழியில் தோன்றும் இது குளிரானது. (2)
23. ஒரு நிமிடத்தில் இவை அறுபது. (5)
24. செய்தித்தாள். (5)
25. தண்ணீர் இதனைத் தீர்க்கும். (3)
26. நிலம். (2)
27. அங்குசத்தைக் கையில் வைத்திருப்பவன். (6)
31. எங்களுடைய; ஒரு மிருதங்கச் சொல். (2)
32. ஆனந்த நடனம். (5)
36. புளியும் சேர்த்து ஆக்கிய சோறு. (5)
39. அதி விஷம்கொண்ட ஒரு பாம்பு. (5)
43. இது காலத்தின் கணிப்பு; உங்கள் அபிமான சஞ்சிகை. (4)
44. கந்தனுக்கு இத்தனை கரங்கள். (4)

**வலமிருந்து இடம்:**

8. ஆழி. (3)
12. விபூதிபோல் வைஷ்ணவர்கள் அணிவது. (4)
21. மூலப்பொருள். (2)
35. குன்று; திகைக்க வைக்கும். (2)
42. காமம் இதனைவிட இனியதென்பார் வள்ளுவர். (2)

**மேலிருந்து கீழ்:**

1. இனிப்பூட்டும் சுவை. (5)
2. என் மன்னன் மயங்கும் பொன்னான மலர். (4)
3. இரண்டு தரம் ஒலித்தால் மாட்டுவண்டி ஓட்டம்; தாண்டு. (2)
5. மாதத்தில் நாளைக் குறிப்பது. (3)
6. பிணமும் வாய் திறக்கும். (3)
7. ஒன்றின். (2)
11. நாட்டை, ஊரை மிகும் நேசத்தோடு அழைப்பது; வீண். (2)
20. மேடையில் பாத்திரமாகிறவன். (4)
21. நாற்காலி. (3)
22. கெட்ட நண்பனிருக்கும்போது இவன் எதற்கு? (4)
28. கண்ணையே செவியாகவும் கொண்டது. (3)
30. பூ என்றால் அது இதனையே குறிக்கும். (3)
31. பாபம் செய்தோருக்கான இடம். (4)
32. மண்ணினாலான இசை வாத்தியம். (3)
37. ஆணின் பெயர். (3)
40. இதயத்திலிருந்து இரத்தத்தைக் கொண்டுசெல்லும் குழாய். (2)
41. சிரிப்பு, ஆபரணமாகிறது. (2)

**கீழிருந்து மேல்:**

15. பொறுமை என்னும் நகை அணிபவர்கள். (4)
23. தலையெழுத்து. (2)
29. கதையில் பிரதான பெண் பாத்திரம். (5)
33. நீர் படும் அனுபவம். (2)
34. மூடியுடனான சிறு பாத்திரம். (3)
38. மூளை இருக்குமிடம். (2)
43. நாங்கள். (2)
44. பயில் கூடமா? துயில் மாடமா? (3)

## சொற்சதுரங்கம்-6 விடைகள்

**இடமிருந்து வலம்:**
1தூவானம் 5.ஓதுவார் 8.கைகேயி 10.சில்லாடி 12.காதல் 15.கணக்கு 17.வேந்தன் 19.ராதிகா 21.அழகன் 23.பதி 24.மயக்கம் 29.தன்வயம் 31.உறவினன் 32.மாத்திரை 35.மத்தியமாவதி 37.சமக்காரன்.

**வலமிருந்து இடம்:**
3.மணிமாளிகை 4.சரி 11.கூடம் 14.பல் 16.இடி 25.கனி 27.மாமன் 28.வில் 34.பண் 38.கலை.

**மேலிருந்து கீழ்:**
1.தூரிகை 2.சவால் 3.மதுசூதன் 6.துகில் 13.தகுதி 15.கம்பன் 17.வேழம் 18.தன்னில் 20.காமதேவன் 21.அகம் 25.கவி 27.மாதவி 30.ஆத்மா 31.உண்டி 32.மாய 33.திவலை 35.மகா 36.தின்

**கீழிருந்து மேல்:**
5.ஓம் 7.களி 9.கேசவா 14.படி 16.இல்லார் 19.ராக்கா 22.கந்தம் 26.மதி 34.பற 38.கதிரை.

**பரிசுக்குரியவர்:**
**R.K.Nathan, 36 Beechcroft Avenue, New Malden, Surrey KT3 3EE.**


அனுப்பவேண்டிய முகவரி:
Newsmedia International Limited
Park Royal House, 23 Park Royal Road,
London NW10 7JH

Name:..........................................................

Address:......................................................

..........................................................

..........................................................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CAPITAL AUTOS

**Audi Specialists & Dismantlers**
**Tel: 081-519 3041/6187**
**Fax: 081-519 9929**

**All Mechanical Repairs Undertaken**
**INSURANCE WORK AND FREE ESTIMATES**

*Only a phone call away...*
*Accident Repairs*
*Servicing*
*Resprays & Welding*
*Electric Tuning*




**Workshop:**
**307-311 Sprowston Mews**
**Forest Gate**
**London E7 9AE**

**Shop and Reception:**
**24 Sprowston Road**
**Forest Gate**
**Lodon E7 9AD**

*Specialists in Audi and Volkswagen Repairs • New and secondhand Audi spares*



**295 Balham High Road**
**Tooting Bec, London SW17**
**Tel: 081-682 2585 Fax: 081-682 2575**

# Rajah & Co

**Solicitors**

**Raja Thavarajah LL.B**

Fixed fee
(Residential & Commercial Properties)
&
a full range of legal services available.
Conveyancing,
Immigration,
Landlord
&
Tenants disputes,
Criminal Court and
Police Station work undertaken.

Legal Aid available.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒரு பிராமணன் கடையொன்றில் 'அந்தக் குடை என்ன விலை?' என்று கேட்டான்.



'ஆறு ரூபா' என்றார் கடைக்காரர்.

'குறைக்க இயலாதா?' - பிராமணன் கெஞ்சலாகக் கேட்டான்.

'சரி; ஐந்து ரூபா கொடு.'

'இன்னும் கொஞ்சம் குறைக்கமுடியாதா?'

'ஐந்து ரூபா; அதற்குமேல் முடியாது.'

வாங்கவுமில்லை; அங்கிருந்து விலகவுமில்லை. நாணிக் கோணிக்கொண்டு நின்றான்.

'என்னப்பா, ஏன் நிற்கிறாய்; விலைதான் சொல்லிவிட்டேனே, வேணுமா? இல்லாவிட்டால் இடத்தைக் காலிபண்ணு.'

'இன்னும் கொஞ்சம் குறைக்க இயலாதா?'

'சரி மூன்று ரூபா; அரைவாசி விலை. கொடுத்துத் தொலை.'

'ஒன்றரை ரூபா தரவா?'

'ஒன்றரை ரூபாவா? நீ ஒரு பைசாவும் தரவேண்டாம். இந்தா, கொண்டு தொலை.'

ஆத்திரத்தோடு வீசி எறிந்தார் கடைக்காரர். சந்தோசமாக எடுத்துக்கொண்டு போனான் பிராமணன்.

- இந்தக் கதை ஒரு மந்திரம். இந்த மந்திர உச்சாடனத்துடன்தான் ஒரு பெரும் நிறுவனத்தைக் கட்டியெழுப்பினார் அந்த மனிதர்.

23 ஆண்டுகளுக்கு முன்னர், இந்தியாவுக்கு வெளியே முதன்முதலாக, லண்டனில் பாரதீய வித்திய பவன் ஆரம்பிக்கப்பட்டபோது, கர்நாடக மாநிலத்தின் மாத்தூரைச் சேர்ந்த, அநுபவம் வாய்ந்த பத்திரிகையாளரான கிருஷ்ணமூர்த்தி அதன் பொறுப்பாளராக அனுப்பிவைக்கப்பட்டார். 'சம்யுக்த கர்நாடக' என்ற பிரசித்தி பெற்ற பங்களூர் தினசரியில் பணியாற்றியவர் அவர்.

லண்டன் 'கிறேற் றஸல் ஸ்ரீற்'றில் **10** சதுர அடி அறையில் ஆரம்பிக்கப்பட்டது தான் இன்று, **15** ஆயிரம் சதுர அடி பரப்பளவைக்கொண்டு, இந்திய கலை, பண்பாட்டு, ஆன்மீக மையமாக, அழகோடு மிளிர்கின்ற லண்டன் பாரதீய வித்திய பவன்.

சுடர்விட்டுப் பிரகாசிக்கின்ற எந்த நிறுவனத்தின் பின்னணியிலும் ஒரு தனி மனிதனின் தன்னலமற்ற சேவை அநேகமாக இருக்கும். லண்டன் பாரதீய வித்திய பவனில் அப்படி அதன் நிழலாக தெரிபவர் மாத்தூர் கிருஷ்ணமூர்த்தி.

கட்டடத்தோடு, அதன் செயல்பாட்டுத் துறைகளிலும் உன்னதமான, செழுமையான விசாலிப்பை அவர் ஏற்படுத்தினார். லண்டனின் பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகளில் நன்கு அறியப்பட்டவர், இந்திய தத்துவம், கலை, மதக் கோட்பாடு, கலாச்சாரம் போன்றவற்றுக்கான ஒரு தூதுவராகவேதான் விளங்கினார்.

அருகிப்போய்விட்ட, வேத அத்தியயனத்துடன் சமஸ்கிருதம் பேசுகின்ற குடும்பத்தவரான கிருஷ்ணமூர்த்தி, சமஸ்கிருதம், கன்னடம், தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்; சரளமாகப் பேசவல்லவர். அவருடைய பேச்சு இனிமையானது. எவரையும் கவரவல்லது; ஆளுமை மிக்கது. அவரிடமான நல்ல மனிதப் பண்புகளோடு, இந்தப் பேச்சாற்றலும் சேர்ந்துதான் அவர் தன்னுடைய பணியில் சாதனையைப் புரிய வைத்தது. சந்தர்ப்பம் கிடைக்குமிடமெல்லாம் பாரதீய வித்திய பவனைப்பற்றி ஏதாவது கூறியே தீருவார். 'ஏன் அறுக்கிறார்' என்று அவ்வேளைகளில் சிலர் விசனம் கொள்வதுண்டு. அது, அவரின் சிந்தையில் நமக்கு இல்லாத அக்கறையால் கூறிக்கொள்வது.

'நான் ஒரு பிராமணன்' என்று கூறி, அவர் சொல்லும் கதைதான் இந்த 'குடை' கதை. பல தடவைகளில் இதை அவர் சொல்லக் கேட்டிருந்தபோதும், அண்மையில் தன்னுடைய 23 வருட சேவையிலிருந்து ஓய்வுபெற்று இந்தியா திரும்புகையில், பவனில் அவருக்கு நடைபெற்ற பிரிவுபசாரத்திலும் இக் கதையையே கூறினார் அந்த கரும யோகி.

– செந்தமிழன்


**Ranjit Mano & Co Solicitors**

For
IMMIGRATION &
NATIONALITY MATTERS
HOME OFFICE &
AIRPORT INTERVIEWS
ASYLUM APPLICATION
WORK PERMITS
POLICE INTERVIEWS
CRIMINAL &
CIVIL LITIGATION

LEGAL AID WORKS
UNDERTAKEN

*N. Ranjithakumaran*
*S. Manogaran LLB*

107B HOE STREET
WALTHAMSTOW
LONDON E17 4SA

TEL: 0181-521 5757
FAX: 0181-521 8202




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KUMARANS

KUMARANS

## குமரன்ஸ் தமிழ்க்கடை

அரிசிமா, குத்தரிசி,
மிளகாய்த்தூள் மற்றும் பல
லீலா தயாரிப்புகளை
எம்மிடம் மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

**எம்மிடம் தமிழ் புத்தகங்களும் விற்பனைக்குண்டு**

அரசியல், பொருளாதார
புத்தகங்களோடு
பெருமளவிலான
பிரபல எழுத்தாளர்களின் கதைப்
புத்தகங்களும் கிடைக்கும்.

லீலா
தயாரிப்புகளின்
அங்கீகாரம் பெற்ற
விநியோகஸ்தர்கள்

**142-144 HOE STREET**
**WALTHAMSTOW**
**LONDON E17**
**TEL: 0181-521 4955**
**0181-521 4411**
**FAX: 0181-521 9482**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிசில் கோல்ட் என்றதும் உங்கள் நினைவில் நிற்கவேண்டிய ஸ்தாபனம்

# கோல்டன் ஸ்டார்

# GOLDEN STAR

(BIJOUTERIE - HORLOGERIE - CADEAUX - IMPORT - EXPORT)



உங்கள் அழகை மேலும் அதிகரிக்க
உங்களுக்கு வேண்டிய தங்க நகைகளை
தரமான சிறந்த வேலைப்பாடுகளுடன்
உங்களுக்குத் தருபவர்கள்.

கற்கள் பதித்த மோதிரங்கள், கைச்செயின்,
காப்பு, சங்கிலி, தாலி, தாலிக்கொடி,
தோடு, அட்டியல், பதக்கம்.

பட்டுப் புடவைகள், பட்டு வேட்டி, சால்வைகள்,
வேண்டிய அளவுகளில் சேட்டுகள், ரவுசர்கள்,
சிறுபிள்ளைகளின் உடுப்பு வகைகள்.

கைக்கடிகாரங்கள்,
சுவர்–மேசை மணிக்கூடுகள், கல்குலேற்றர்கள்,
வீட்டை அலங்கரிக்க
கவர்ச்சிக் கலைப்பொருள்கள்,
தெய்வச் சிலைகள், எவர்சில்வர் பாத்திரங்கள்,
நிறைகுடச் செட்டுகள், வேண்டிய அளவுகளில்
குத்துவிளக்குகள், வோக்மன், ரேடியோ கசெட்
றெக்கோடர், புதிய–பழைய பாடல்கள் அடங்கிய
ஒடியோ கசெட்டுகள்.

மங்கையர் எழில் கூட்டுவதற்கான
அழகுசாதனப் பொருள்கள், இமிட்டேசன்
நகைகள், வெளிநாட்டு வாசனைத்திரவியங்கள்
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

**GOLDEN STAR**

**199, Rue du Fg. St. Denis, Paris**

**Tel: 42 09 26 50 / 46 07 26 44**

**Metro: La Chapelle, Gare du Nord**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org